
ஸ்ரீ:

ஸ்ரீ ஸ்ரீலக்ஷ்மீஹயவதந லக்ஷ்மீநாராயணாப்யாம் நம:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால குருபரம்பராயை நம:

"அருள் தரும் ஆரண தேசிகன்"

இச் சிறுநூல் ஸ்ரீ கீலக வருஷம் புரட்டாசி மாதம் 16வ புதன்கிழமை (-1 -1968) ஸ்ரீஸ்வாமி தேசிகன் 701-வது திருவவதார தினமான புரட்டாசித் திருவோணத் திருநாளன்று திருவஹீந்திரபுரத்திலும் மற்றும் பல திவ்ய தேசங்களிலும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் சாற்றுமுறை மஹோத்ஸவத்தில் அந்வயித்த ஆஸ்திகர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர்,
ஸ்ரீகார்யம், லிப்கோ.

பதிப்பகத்தார்:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,

தியாகராய நகர், சென்னை-17.

1968] [விலை ரூ. 1

I. T—1

வெளிநாடுகள் போய்வந்த நூலாசிரியர் ஒருவர் கூறினர்

''மஹான்கள் பலர் அவதரித்த பாரத பூமியிலிருந்து நீங்கள் வருகிறீர்கள். உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி'' என்ருர் அவர்.

எனக்குப் புல்லரித்தது.

நம் நாட்டிற்குத்தான் எவ்வளவு மதிப்பு? எவ்வளவோ மஹான்கள் தோன்றிய தேசம் அல்லவா இந்தியா? மகத்தான இந்து மதம் அல்லவா நம்முடையது? இணையற்ற கலாசாரத்தின் சந்ததிகள் அல்லவா நாம்?

அப்படிப்பட்ட நாம் ஏன் இன்று தாழ்ந்து விட்டோம்? இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம்? நம்மிடம் என்ன குறை? ஸ்ரீராமராஜ்யம் என்று ஏற்படும்? என்றுதான் இந்திய நாட்டு மக்கள் சுபிட்சம் அடைவார்கள்?

நம் தலைவர்கள் தீவிரமாக, உண்மையாக, அவசரமாகத் தங்கள் உள்ளங்களைச் சோதனை செய்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ:

பொருளடக்கம்



தண்டொடு சார்ங்கமேந்தும் தடக்கையன்
தாள்களை ஸதா போற்றி வாழ்ந்துவந்த
தேசிகதர்சந ரத்நதீபம், குலபதி, தர்ம பூஷணம்
ஸ்ரீ உபயவே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

அனைவர்க்கும் அன்னையிலும் அதிகமாக அன்பு காட்டி வந்த இந்தக் கொடை வள்ளலை நாங்கள் அநுதினமும் போற்றி வருகிறோம். அவர் ஆன்மா எம்மை ரக்ஷிக்கட்டும்.

2-10-1968 —லிப்கோ பதிப்பகத்தார்



ஸமர்ப்பணம்

தேசிக தர்சந ரத்நதீபம்,

குலபதி, தர்மபூஷணம்

ஸ்ரீஉபய வே

வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி

நம் வைஷ்ணவ சமுதாயத்திற்கு—'ரக்ஷிதா ஸர்வ லோகாநாம், ஸ்வஜநஸ்யாபி ரக்ஷிதா' என்று பாரிப்புடன் பரிபாலித்தருளிய சகரவர்த்தித் திருமகனைப் போல் ஆப்த பந்துவாய், உத்தம ப்ரபுவாய்த் திகழ்ந்த சீர்மை நமக்கெல்லாம் பவித்ரமான ஸ்மிருதியாகும். சமதமாதி ஸாத்விக குணங்களுக்கெல்லாம் பொக்கிஷமாய் விளங்கிய, அந்த அல்வழக்கொன்றுமிலா ஸ்ரீவைஷ்ணவ குல தீபகர், வேதாந்த குரு சரண ஶரண்யர்களான நமக்கும் நம்மவர்க்கும், நம் சந்ததிகளுக்கும் பரம உபகாரியாக இருந்து அநுக்ரஹித்ததை நாம் க்ருதஜ்ஞதையுடன் நினைவு கொள்வதை இந்த எளிய க்ரந்தத்தின் வாயிலாக வெளிப்படுத்திக் கொள்கிறோம். அஜாதசத்ருவாக விளங்கிய அந்த மஹானின் பெருமைகளைப் போற்றி, அவர் தம் திருநாமத்தை வாழையடி வாழையாக நம் ஸந்ததிகளின் நினைவிலும் நீங்காது இருக்கச் செய்வது நம் கடமையாகும்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
(லிப்கோ) பதிப்பகத்தார்.





ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய, பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீமத் கவிகதககண்டீரவ சரணநளிநயுகள விந்யஸ்தாத்மபர. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதந திவ்யபாதுகாஸேவக ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால யதீந்த்ர மஹாதேசிகன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளுருவான ஆசார்யர்களின் அநுக்ரஹங்கள்

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய, பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீமத் கவிகதக கண்டீரவ சரணநளிநயுகள விந்யஸ்தாத்மபா ஸ்ரீலக்ஷ்மீஹயவதந திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால யதீந்த்ர மஹாதேசிகன் ப்ரஸாதித்தருளிய ஸ்ரீமுகம்—

Sri Brahmatantra Swatantra Parakala Asthanam. Mysore,
1- 8- 1968.

ஸ்ரீஸ்வாமி திருவுள்ளம்பற்றி கீழ்க்கண்டவாறு ஸ்ரீமுகம் எழுதும்படி நியமித்தாகியது.

''லிட்டில் ப்ளவர் கம்பெனியவர்களின் ஆஸ்திகத்வமும் தெய்வத்தொண்டும் வெகுகாலமாகவே நம் கவனத்திற்கு வந்துள்ளன இந்த துஷ்காலத்திலும் இத்தகையவர் சலியாது தெய்வத் தொண்டு செய்து வருவதுபற்றி மிகவும் ஸந்தோஷமடைகிறோம். தெய்வத்தொண்டுடன் ஸம்ப்ரதாய ஸ்ரீயையும் சேர்த்துக்கொண்டு பொன்மலர் மணம் கொண்டதுபோல் ஸ்ரீஸ்வாமி தேசிகனின் 700-வது நூற்றாண்டு பூர்த்திவிழாவில் லிட்டில் ப்ளவர் கம்பெனியார் கைங்கர்யம் செய்ய விழைந்துள்ளது மற்றும் சந்தோஷமளிக்கிறது. ''அவர்களின் கைங்கர்யம் நன்கு நிறைவேறுக'' என்று ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனிடமும் விஜ்ஞாபிக்கின்றோம்.''

தாஸன்
S. M. Varadachariar
Library Pandit
Sri Parakala Mutt.



ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தா சார்ய ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌம ஸ்ரீமந்நாதமுநி, ஸ்ரீமத்யாமுநமுநி, ஸ்ரீமத் ராமா நுஜ முநிரூப முநித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாசார்ய ஜ்ஞான வைராக்யாநுஷ்டாந ஸம்பந்ந ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிக கடாக்ஷ லப்த ஸார்வஜ்ஞ ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் (விண்ணாற்றங்கரை ஸ்ரீமத் ஆண்டவன்)

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீமந்நாதமுநி, ஸ்ரீமத்யாமுநமுநி, ஸ்ரீமத்ராமாநுஜ முநிரூப முநித்ரயஸித்தாந்த ஸ்தாபகாசார்ய ஜ்ஞான வைராக்யாநுஷ்டான ஸம்பந்ந ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிக கடாக்ஷ லப்த ஸார்வஜ்ஞ ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் (விண்ணுற்றுங்கரை ஸ்ரீமத் ஆண்டவன்) ப்ரஸாதித்தருளிய ஸ்ரீமுகம்.

ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம். ஸ்ரீரங்கம்,
22-7-68.

உபய குசலோபரி. இவ்விடம் ஸ்ரீதேசிகன் ஸந்நிதி நித்யோத்ஸவ ஸ்ரீமத் ஆச்ரம உத்ஸவாதிகள் ஸ்ரீரங்கநாதன் க்ருபையால் செவ்வனே நடந்து வருகின்றன.

தேவரீர் ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்ர உத்ஸவாதி ஸமயங்களில் செய்துவரும் திருமண், ஸ்ரீசூர்ண, ஸ்ரீஸௌக்த்யாதி விதரணங்களாலே உலகில் ஆஸ்திக்யமும் ஸாத்விகதையும் அபிவ்ருத்தமாகும் என்று ஸ்ரீமத் ஆண்டவன் திருவுள்ளமுகந்தாச்சுது.

மேன்மேலும் இந்தக் கைங்கர்யத்தைத் தொடர்ந்து நடத்தி வந்து ஸ்ரீரங்கம் திவ்ய தம்பதிகளுடையவும் ஸ்ரீதேசிகனுடையவும் க்ருபைக்குப் பரிபூர்ண பாத்ரமாகத் தேவரீர் ஆக வேணும்.

இப்படிக்கு ஸ்ரீநியமநம்
பார்த்தசாரதி தாதாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பதிப்பகத்தாரின் பணிவுரை

சென்ற சில வருஷங்களாகப் புரட்டாசித் திருவோணத் தன்று ஒரு சிறு நூல் வெளியிடும் கைங்கரியத்தை வழக்கமாக வைத்துக் கொண்டுள்ளோம். சிறிதளவு திருமண் ஸ்ரீசூர்ணப் ப்ரஸாதப் பொட்டணங்களுடன் கூடிய இந்த நூலின் ப்ரதிகளைத் திருவஹீந்திரபுரம் திவ்யதேசத்தில் மட்டும் புரட்டாசித் திருவோணத் திருநாளன்று ஔஷதகிரியில் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன் ஸந்நிதியில் ஸ்ரீதேசிகன் மங்களா சாஸன மஹோத்ஸவத்தில் அந்வயிக்கும் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிக்கு (கடந்த வருஷத்திற்கு முன் வருஷம் வரை) விநியோகித்து வந்தோம். சென்ற வருஷத்திலிருந்து எம் புரட்டாசித் திருவோணத் திருநாள் வெளியீட்டை (திருமண் ஸ்ரீசூர்ணத்துடன்) இன்னும் பல திவ்ய தேசங்களிலும் விநியோகிக்கும் பாக்யம் எமக்குக் கிட்டியது.

ஸ்வாமியின் 701-வது திரு அவதார மஹோத்ஸவத்தைக் கொண்டாடும் இவ்வருஷம் ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய நூல்கள் வெளியிடப்பட்டு மேற்கொண்டு பல திவ்ய தேசங்களில் விநியோகிக்கப்படுகின்றன, அங்கங்கே உள்ள தேசிக பக்தர்களுடையவும் கோயில் நிர்வாகிகளுடையவும் ஒத்துழைப்பினாலேயே இந்தக் கைங்கர்யம் செய்வது எமக்கு ஸாத்தியமாயிற்று. இதற்காக இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்தகைய நூல்களை வெளியிடுவதில் தம் கிரந்தங்களிலுள்ள விஷயங்களை உபயோகித்துக்கொள்ள அநுமதி தந்துள்ளதன் மூலமும், அரிய யோசனைகளைக் கூறுவதன் மூலமும் எங்களை ஊக்குவித்து ஆதரித்து வரும் கீழ்க்கண்ட மஹநீயர்களுக்கு புந: புந: ப்ரணாமங்கள் செய்து எம் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம் :

1. ஒப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் சிரோமணி வித்யா விசாரத ஸ்ரீ உபய வே. வங்கீபுரம், நவநீதம், ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி.

2. ஸ்ரீ உபய வே. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி. அட்வகேட், சென்னை.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி மிகக் குறுகிய காலத்தில் இதில் கொடுக்கப்பட்டுள்ள சில அரிய கருட ஸ்தோத்ரங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து பார்த்தெழுதச் செய்து எமக்கு அனுப்பி அவைகளை வெளியிட அனுமதி தந்து உதவிய தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜாவினுடைய சரஸ்வதி மஹால் நூலகத்தின் கௌரவச் செயலாளருக்கு (Hony.Secretary, Thanjavur Maharaja Serfojis Saraswathi Mahal Library) எம் ப்ரத்யேக நன்றி உரித்தாகும்.

மேலும், எம்முடைய இது மாதிரி முயற்சிகளில் எவ்வித மான ப்ரதிப்ரயோஜனமும் கருதாமல் ஒத்துழைத்துவரும் பின்வரும் வித்வத் வரேண்யர்களுக்கும் ஆஸ்திக நண்பர் களுக்கும் எம் க்ருதஜ்ஞதை உரித்தாகும்:—

1. ந்யாய வேதாந்த வித்வான் பையம்பாடி, சேட்டலூர் ஸ்ரீஉபய வே. வா. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி, Principal, Sanskrit college, Pettai, Madras 56.

2. நாவல்பாக்கம் திருமலை சதுர்வேத சதக்ரது ஸ்ரீ உபய வே. தேவநாத தாதாசாரியர், சிரோமணி, வித் வான், ஸரஸ்வதி மஹால் லைப்ரரி, தஞ்சாவூர்.

3. ஸ்ரீ உபய வே. வெள்ளிமேடு வீரவல்லி வீரராக வாசார்ய ஸ்வாமி, Retired Examiner of Accounts of Municipal Corporation, 'Sriniketanam' 30, Nehru Nagar (Maredpally) Road No. 1, Seconderabad-26. (A.P.)

4. மிகக் குறுகிய காலத்தில் பல அபூர்வ விஷயங்களைத் தொகுத்தளித்த ஸ்ரீ உ. வே. N ஸ்ரீனிவாச்சாரியார் M.A., L.T.

(ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல் முன்னாள் ஹெட் மாஸ்டர்) ஸ்வாமி.

5. ஸ்ரீ உபய வே. வித்வான் R. சௌரிராஜ அய்யங்கார் ஸ்வாமி, ஹிந்தி பிரசார ஸபை, தி. நகர், சென்னை-17.

6. ஸ்ரீ உபய வே. திருவஹீந்திரபுரம் D ஆராவமுதன்.

7. ஸ்ரீ உபய வே. மாம்பாக்கம் வங்கீபுரம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, 34, ஸந்நிதி வீதி, மதுராந்தகம்.

8. தாம் இயற்றிய ஸ்ரீ தேசிகாஷ்டாகம், ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் முதலியவைகளை இந்நூலில் சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்த ஸ்ரீ உபய வே. நடாதூர். S. வேங்கடாசார்ய ஸ்வாமி.

9. ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் ஜாதகத்தின் நகலைப் பழைய ஓலைச் சுவடிகளிலிருந்து பார்த்தெழுதிக் கொடுத்த பாலையூர் டாக்டர் எஸ் ஜெயராம சர்மா, L.I.M. அவர்கள், Medical Officer, Sithamalli P.O. Thanjavur Dt).

10. ஸ்ரீ உபய வே. வித்வான் ஸ்ரீரங்கம் M. S. ராஜ கோபாலாச்சார்ய ஸ்வாமி.

11. ஸ்ரீ உபயவே. வித்வான் S. S. ராகவன் (பாரதி மோஹன்), சென்னை-17.

12. ஸ்ரீ உபயவே. வித்வான் V. வரதாசாரியார்.

மற்றும், பல விஷயங்களை அச்சிட்டு உதவிவரும் Sri Raj Sri Printers (97, Lloyds Road, Madras-6) அவர்களுக்கு எம் ப்ரத்யேக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மேலும் இத்தகைய சிறிய ஸேவைகளை அடியோங்கள் தொடர்ந்து செய்து வருவது ஸாத்யமாகும்படி க்ருபை புரிய வேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகனிடம் சிபாரிசு செய்யும்படி நம் பாரததேசமெங்கும் பரவியுள்ள ஸ்ரீ தேசிக பக்தர்களை ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.


கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியார், P.O.L.,
சென்னை-17. ந்யாய சிரோமணி, ஹிந்தீவிசாரத்,
2—10—1968 ஸ்ரீகார்யம், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அட்டைப் பட விளக்கம்

"Ring out the old, Ring in the new,
Ring HAPPY - BELLS."




உன்னருளன்றியெனக் கொரு
நற்றுணையின் மையினால்
என்னிருவல்வினை நீயே
விலக்கியிதங்கருதி
மன்னியநற்றிருமந்திர
மோதும்பொருணிலையே
பொன்னருளாலருளாய்
புகழ் தூப்புற்குலவிளக்கே.




விளக்காகிவேங்கடவெற்பினில்வாழும்விரைமலராள்
வளக்காதல்கொண்டுமறைமார்பன் திறத்துமுனதடியார்
துளக்காதலில்லவர் தங்கள்திறத்திலுந்தூய்மையெண்ணிக்
களக்காதல்செய்யும்நிலைகடியாய்தூப்புற்காவலனே.

பிள்ளையந்தாதி 15, 16.



வெள்ளைப்பரிமுகர்தேசிகராய் விரகால்,
அடியோ—
முள்ளத்தெழுதியது ஓலையிலிட்டனம்
யாமிதற்கென்
கொள்ளத் துணியினுங் கோதென்றிகழினுங்
கூர்மதியீர்
எள்ளத்தனையுகவாது இகழாதெம்
மெழில்மதியே.

அதிகாரசங்கிரகம்-56.



வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன்
வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன்
வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன்
வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்
வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள்
தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன்
வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன்
வாழியே
தண்டமிழ்த்தூப் புல்திருவேங் கடவன்றுள்
வாழியே.

---

1. விண்ணவரும் மண்ணவரும் விரும்பிப் போற்றும் எம்பெருமான்-தீராத வினைகளைத் தீர்த்து வைக்கும் திருமால்-இந்தக் கலியுக ப்ரத்யக்ஷ தெய்வமான திருவேங்கடமுடையானே ஸ்வாமி தேசிகனாக அவதரித்தார் என்று பெரியோர் கூறுவர்.

2. இகபரசுகங்களையும் ஸகல ஞானங்களையும் அளிக்க வல்லவர் ஸ்ரீ ஹயக்ரீவன். "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய்" என்பது ஸ்வாமி தேசிகனின் திருவாக்கு. இது ஸ்வாமி தேசிகன் தம் ஆசார்யர்களின் சிறப்பை நிரூபிக்கக் கூறியது. எனினும்; இது நம்முடைய ஆசார்யனை ஸ்வாமி தேசிகனின் விஷயத்திலும் முற்றிலும் பொருந்தும் என்பது அவர் திருவடியை ஆச்ரயித்த பெரியோர்களுடைய முடிவு. ஸ்ரீஹயக்ரீவனே ஸ்வாமி தேசிகனாக அவதரித்தார் எனக் கூறத் தட்டில்லை.

3. மேற்கண்ட இரண்டு எம்பெருமான்களும், வைணவம் நிலைத்தோங்க வந்துதித்த தேசிகர் பெருமானும் ச்ரவண நக்ஷத்ரத்தில் உதித்தவர்கள்.

விபவாவதாரத்திலும் அர்ச்சாவதாரத்திலும் இதர நக்ஷத்திரங்களில் உதித்த எம்பெருமான்களையும் திருவோணத்

தில் அவதரித்தவர்களாகவே ஆழ்வார்கள். அழைத்துள்ளார்கள், ஏனெனில் "திருவோணத்தான் உலகாளும்" என்னும் பட்டர்பிரான் திருவாக்குப்படி பகவதவதாரம் என்றால் அது திருவோணத்தில்தான் நிகழ்ந்திருக்க முடியும் என்பது அவர்கள் கருத்து. எனவே திருவோண நக்ஷத்திரத்திலேயே அதுவும் திருவேங்கடமுடையானின் தீர்த்தவாரித் திருநாளில் உதித்த நம் வேங்கடநாதனைப் பகவானின் அவதாரம் எனக் கூறுவதில் தடை ஏது?

6. "பாத்ரபதமாஸகத விஷ்ணுவிமலர்க்ஷே
வேங்கட மஹீத்ரபதி தீர்த்த திநபூதே |
ப்ராதுரபவஜ் ஜகதி தைத்யரிபுகண்டா
ஹந்த கவிதார்க்கிக ம்ருகேந்த்ர குருமூர்த்யா |

என்ற சுலோகம் (ஸப்ததிரத்ன மாலிகா) திருவேங்கடமுடையானின் திருமணியாழ்வாரே ஸ்வாமி தேசிகனாய் அவதரித்தார் என்பதைச் சூசிப்பிக்கிறது.

ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் காணும் பின்வரும் சுலோகத்திலிருந்து ஸ்வாமியின் திருவாக்கினாலேயே இந்தக் கருத்து ஊர்ஜிதம் செய்யப்படுகிறது:—

"வித்ராஸிநீ விபுதவைரி வரூதிநீநாம்
பத்மாஸநேந பரிசாரவிதௌ ப்ரயுக்தா |
உத்ப்ரேக்ஷ்யதே புதஜநை: உபபத்திபூம்நா
கண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மநேதி || "

(அதாவது ப்ரஹ்மதேவன் பெருமாளை ஆராதிப்பதற்காக எந்த மணியை உபயோகித்தாரோ, எந்த மணியின் நாதம் அசுரர்களைப் பயந்தோடச் செய்ததோ அந்தமணியின் அவதாரமே இந்த நாடகத்தின் ஆசிரியர் (ஸ்வாமி தேசிகன்) என்று ஞானத்தில் சிறந்த பெரியோர்கள் தகுந்த காரணங்களைக் கொண்டு ஊஹிக்கிறார்கள்.)

திருவேங்கடமுடையானைப் ப்ரதிதினமும் அர்த்தராத்திரியில் வந்து ப்ரஹ்மா ஆராதிப்பதாக ஓர் ஐதிஹ்யம் இருந்து வருகிறது. எனவே, ஸ்வாமி தேசிகன் திருமலைமால்

திருமணியின் அவதாரமே என்பது எவ்வித மறுப்புக்கும் இடமின்றி அவருடைய திருவாக்காலேயே ஊர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது. அங்ஙனம் திருவேங்கடமுடையானுடைய திருமணி தேசிகனாக அவதரிக்கப்பட்ட ஐதிஹ்யத்தின் பிரகாரமே இன்று திருமலையில் திருவாராதனத்துக்குக் கண்டை (கைமணி) ஸேவிப்பதில்லை என்று பெரியோர் கூறுவர்.

7. மைசூர் பரகாலமடத்தில் உள்ள கண்டையின் தலைப்பில் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனின் திருவுருவம் ஸேவை ஸாதிப்பதாகக் கேள்வி.

8. சுருங்கக் கூறின் கருணையில் திருவேங்கடமுடையானின் அம்சமும், ஞானத்தில் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுடைய அம்சமும், (அசுரத்தன்மை வாய்ந்த) எதிரிகளை (வாதத்தில்) புறமுதுகு காட்டி ஓடச் செய்வதில் ஸ்ரீ விஷ்ணுகண்டையின் அம்சமும் சேர்ந்து அவதரித்தவரே நம் ஸ்வாமி என்பது விவேகிகளான பெரியோர்களின் ஒருமித்த கருத்து. எனவே, ஸ்வாமி தேசிகனை ஸேவித்தால் இரண்டு எம்பெருமான்களையும் திருமணியாழ்வாரையும் ஸேவித்தற்கொப்பாகும்.

9. மேலே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை விளக்குவதே அட்டையின் இருபுறமும் உள்ள சித்திரங்கள்.

10. தவிர, ஆழ்வார்களில் முதல்வரான பொய்கையாழ்வாரின் அவதாரத்திருநக்ஷத்ரமும் ச்ரவணமே. எனவே, தேசிகனை ஸேவிப்பதால் ஆழ்வார்களுடைய அனுக்ரஹமும் கிடைக்குமன்றோ?

11. எனவே ஒரு யோசனை: அட்டையின் இருபுறங்களிலும் காட்டியுள்ள அம்சங்களை ஒரே மணியில் (அவரவர் சக்திக்கு ஏற்றவாறு வெள்ளியிலோ, வெண்கலத்திலோ) செய்வித்து அவரவர்கள் க்ருஹத்தில் தேசிகபக்தர்கள் எழுந்தருளப்பண்ணி வைத்திருப்பதே ச்ரேயஸ்கரமாகும். அதாவது அந்தக் கண்டையைத் திருவாராதனத்தில் ஸேவிப்பதற்கு உபயோகப்படுத்தாமல் பெருமாளாகவே பாவித்துப் போற்றிவரவேணும். அந்தக் கண்டைக்குத் திருவாராதனம் முதலியவைகள் செய்யவேண்டுமென்றால் அதற்காக அதை

விக்ரஹத்தைப் போல் ப்ரதிஷ்டை செய்து அதற்குரிய நியம நிஷ்டைகளுடன் ஆராதிக்கவேண்டுமா அல்லது ஸாள க்ராமமூர்த்தியைப் போல் ஸாதாரணமாகத் திருவாரதனம் செய்து வந்தால் போதுமா என்பதைப் பெரியோர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்க. விக்ரஹ ஆராதனத்துக்குரிய நியமநிஷ்டைகளுடன் தான் செய்ய வேண்டுமென்று பெரியோர் பணித்தால் அங்ஙனம் செய்யச் சக்தி இல்லாதவர்கள் எம்பெருமானின் திருவுருவப் படங்களைவணங்குவது போல் இந்தக் கண்டையையும் ஒரு பரிசுத்தமான இடத்தில் எழுந்தருளப் பண்ணி கற்பூரஹாரத்தி முதலிய உபசாரங்களுடன் வணங்கி வரலாம்.

12. விக்ரஹ ஆராதனத்தைப் போல் ப்ரதிஷ்டை செய்தோ அல்லது ஸாளக்ராம ஆராதனத்தைப் போல் ஸாதாரணமாகவோ திருவாராதனம் செய்வதென்றால் அதற்கு வேறு ஒரு கண்டையை உபபோகிக்கவேண்டாமா? அப்படிச் செய்வதானல் தேசிகனைத் தேசிகனேயோ, பகவானைப் பகவானேயோ ஆராதிப்பது போல் ஆகாதா என்ற சர்ச்சை எழலாம். அப்படியிருந்தாலும் தவறில்லை என்பதை ஸ்வாமி பாதுகாஸஹஸ்ரத்தில் ஸாதித்திருப்பதைக் கொண்டே ஸமாதானம் கூறலாம். ஸ்வாமி பாதுகா ஸஹஸ்ரத்தில் பகவானே பகவானை ஆராதித்திருக்கிறுன் என்றும் ஆதி சேஷன் தன்னையே வணங்கி இருக்கிறுன் என்றும் ஸ்ரீமத்ராமாயணத்தில் நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறுர். முதலாவதாக "ஸஹலக்ஷ்ம்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்னும் மஹர்ஷியின் வாக்கியப்படி, "நாளை பட்டாபிஷேகம்" என்று தசரத சக்ரவர்த்தி தம் திருமகனிடம் அறிவித்தவுடன் அவர் தம் தர்மபத்னியான மைதிலியுடன் ரங்கநாதனை ஆராதித்தாரல்லவா? அதைத்தான் பகவானே பகவானை ஆராதித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறுர்.

இரண்டாவதாக, ஸ்ரீரகுநந்தனன் வனவாஸம் முடிந்து அயோத்திக்குத் திரும்புகையில் பரதாழ்வான் தமையனை எதிர்கொண்டழைப்பதற்காக அவருடைய திருப்பாதுகைகளைத் தலையில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருகிறுர்.

ராமனுடைய பாதுகைகளைக் கண்டவுடன் ராமனுடன் புஷ்பக விமானத்தில் இருப்பவர்கள் எல்லோரும் வணங்குகிறார்கள். இளையபெருமாளும் வணங்குகிறார். இளையபெருமாள் ஆதிசேஷனுடைய அம்சம். திருப்பாதுகைகளும் ஆதிசேஷனின் அம்சம். இதைத்தான் ஆதிசேஷன் ஆதிசேஷனையே வணங்கினார் என்று இரண்டாவதாகக் குறிப்படுகிறார் ஸ்வாமி. எனவே இதிலிருந்து எம்பெருமானின் திருவுருவங்கள் கொண்ட கண்டையை இன்னொரு கண்டையினால் ஆராதிப்பதற்கு ஸ்வாமி தேசிகனுடைய அனுமதியும் உண்டு என்பது தெரிகிறது.

13. பெரியோர்களுடைய நியமனப்படி விக்ரஹத்தை ஆராதிப்பது போலவோ, அல்லது ஸாளக்ராமத்தை ஆராதிப்பது போலவோ ஆராதித்தாலும் அல்லது அவரவர் சக்திக்கேற்ப எம்பெருமானின் திருவுருவப்படங்களை வணங்குவதுபோல் வெறும் கற்பூரஹாரத்தி முதலியவைகளை மட்டும் செய்து வணங்கி வந்தாலும் அதனால் ஆழ்வார் ஆசார்யர் அனுக்ரஹமும், ஞானப்பெருக்கமும், அலர்மேல் மங்கா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள் க்ருபையால் செல்வமும் தீர்க்காயுளும் இதர ஸௌபாக்யங்களும் ஸித்திக்கும் என்பது எம் நம்பிக்கை.

ஸர்வே ஜநாஸ் ஸுகிநோ பவந்து!



ஸ்ரீகார்யம்,
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
லிப்கோ பதிப்பகத்தார்.

ஸ்ரீ:

தேசிக பக்த சபைகளுக்கு ஒரு விஜ்ஞாபனம்

நம் பாரத நாடெங்கும் தோன்றியிருக்கும் பல தேசிக பக்த சபைகள் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளை வெளியிடுதல், அர்ச்சாரூபமாக எழுந்தருளியுள்ள ஸ்வாமி ஸ்ரீதேசிகனுக்கு ரத்னங்கி போன்ற ஆபரணங்களைச் செய்து ஸமர்ப்பித்தல் முதலிய அரும்பெரும் கைங்கரியங்களில் ஈடுபட்டு அதற்காக நிதியும் திரட்டி வருகிறார்கள். ஸ்வாமியின் 701-வது திரு அவதார தினத்தை இவ்வளவு விமரிசையாகக் கொண்டாடுவதில் அவர்கள் பக்தியுடன் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்காகத் தேசிக பக்தர்கள், குறிப்பாக லௌகிக இளைஞர்கள், அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளார்கள்.

இப்போது திருநாட்டை அலங்கரிக்கும் ஸ்ரீ உபய வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தீபிகையில் (தாது ஹு புரட்டாசி மீ ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக மஹோத்ஸவ மலரில்) உபகரித்துள்ள "மஹா தேசிகன் மஹோத்ஸவம்" என்னும் வியாஸத்தில் "பொன்னைப் புழுவாய்க் கருதிய அப்புருஷ ஸிம்ஹம் அப்பொன்னைப் புனையவும் வேண்டுமோ? வைராக்ய சிகாமணியான அவ்வேதாந்த மூர்த்தி வைரங்கள் பூண்டு வீதிவலம் வரவும் விரும்புமோ? ஆதலின் இவ்வித மஹோத்ஸவங்களில் கொண்டாடப்படும் விக்ரஹம் நம்முடைய மநோபீஷ்டத்தின் காஷ்டையே யென்று மதிப்பதும் தகுதியாம்." என்று ஸாதித்துள்ளார்.

ஸ்ரீ வைஷ்ணவ குலபதியான இந்த மஹநீயருடைய இத்திருவாக்குகள் எங்களைச் சிறிது சிந்திக்க வைத்தன. அதன் பயனாக எங்களுடைய சிற்றறிவுக்கு எட்டிய சில ஆலோசனைகளைக் கீழே கொடுத்துள்ளோம்:

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் என்ற ஸ்தாபனம் மிகப் பிரபலமாக இருப்பதற்கு முக்கிய காரணம் அது ஏழைகளுக்குச்

செய்துவரும் தொண்டேயாகும். ஏழைச் சிறுவர்களுக்கு லோகரீதியான (பாஷாந்தர) படிப்புக்கு உபகாரச் சம்பளம் (Scholarship) கொடுத்தல், ஏழைகளுக்கு வைத்திய உதவி செய்தல் போன்றவை ஏழை மக்களுக்குச் செய்யும் சீரிய தொண்டுகளாகும். ஏழை ஸ்ரீ வைஷ்ணவக் குடும்பஸ்தர் களுக்கு இத்தகைய உதவிகளைச் செய்யும் முறையில் தேசிக பக்த சபைகள் செயல்பட ஆரம்பித்து அதற்குத் தேவை யான நிதிவசதிகளை ஏற்படுத்துவதில் முனையவேண்டும் என்பது எம் தாழ்மையான கருத்து.

மேலும் தர்ம உபநயனம் செய்து வைத்தல், ஸமா ச்ரயணம், பரந்யாஸம் முதலியவைகளைச் செய்து கொள்ள விரும்பும் ஏழை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அவர்கள் ஆசார்ய ஸந்நிதியிடம் போய் வருவதற்குப் போக்குவரத்துச் செலவு, ஆசார்ய ஸம்பாவனை முதலியவற்றிற்கு நிதி வசதி செய்து தருதல் போன்றவைகளும் சிறந்த ஸேவைகளாகும்.

இங்ஙனம் நம் தேசிக பக்த ஸபைகள் செயல்பட ஆரம் பித்தால் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்துக்கும் நம் குலபதி ஸ்ரீ உபய வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிக்கும் ரொம்பவும் உகப்பாக இருக்கும் என்று ஸவிநயம் விஜ்ஞா பித்துக் கொள்கிறோம்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
லிப்கோ பதிப்பகத்தார்.

ஆஸ்திகர்களுக்கும் ஆஸ்திக ஸ்தாபனங்களுக்கும் ஒரு வேண்டுகோள்

இன்று நிலவிவரும் காலப்போக்கினால் எங்களுடைய சிறு ஸ்தாபனம் எவ்வளவோ சிரமங்களுக்கிடையே இயங்கி வருகிறது. இவ்வளவு சிரமங்களுக்கிடையே எங்கள் அன்றாட அலுவல்கள் ஓரளவாவது தடை பெறாமல் நடந்து வருகிற

தென்றல் அதற்குப் பெரியோர்களுடைய அனுக்ரஹமும் ஆஸ்திக அன்பர்களுடைய ஆதரவுமே காரணமாகும்.

நிதிவசதியும் இதர வசதிகளும் குன்றியிருப்பினும் அணிலைப்போல் எங்களாலான அளவு சிறு கைங்கர்யங்களில் ஈடுபட்டுள்ளோம். உதாரணமாக, ஆழ்வாராசார்யர் களுடைய அவதார தினங்களில் லௌகிக இளைஞர்களுக்கு உபயோகப்படக் கூடிய சிறிய நூல்களை வெளியிட்டு இலவசமாக விநியோகம் செய்யும் பணியில் சென்ற சில வருஷங்களாக ஈடுபட்டிருப்பது ஆஸ்திகர்கள் அறிந்ததே.

மேலும் ஸ்ரீஸடாரி இல்லாத அல்லது ஸ்ரீஸடாரி கீலமாக இருக்கும் ஸந்நிதிகளுக்கு (தாமிரத்தில் செய்த) ஸ்ரீஸடாரிகள் அடியோங்கள் ஸமர்ப்பித்து வருவதும் ஆஸ்திகர்கள் அறிந்ததே.

இந்தச் சிறிய கைங்கர்யங்களுக்கே எவ்வளவோ இடையூறுகள் தோன்றி அவைகளும் ஸ்தம்பித்து விடுமோ என்ற நிலை அடிக்கடி ஏற்பட்டும், பகவத் பாகவதானுக்ரஹத்தால் இன்றுவரை அவைகளை ஸமாளித்து வந்திருக்கிறோம்.

அன்றாடம் ஆஸ்திக ஸ்தாபனங்களிடமிருந்தும், ஆஸ்திக அன்பர்களிடமிருந்தும் வேறு ஏதாவது கைங்கர்யத்துக்கு நன்கொடை கேட்டோ அல்லது அவர்கள் வெளியிட உத்தேசித்துள்ள பக்தி ஸம்பந்தமான மலர்களுக்கு விளம்பரம் கோரியோ கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி கேட்பதில் தவறு எதுவும் இல்லை. இருந்தாலும், எங்களுடைய வசதியின்மை காரணமாகவும், நாங்கள் குறிப்பிட்டுள்ள மேற்படி கைங்கர்யங்களுக்கே சிரமப்பட்டு நிதி வசதிகளைத் தேட வேண்டியிருப்பதாலும் அவர்களுக்கு எந்தவிதமான சிறு உதவிகூடச் செய்ய இயலாத நிலையில் இருப்பதைத் தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கிறோம். அவர்கள் கேட்டு இல்லை என்பதால் ஏற்படும் மனச் சங்கடம் ஒருபுறம். இதற்காக வீணாக ஏற்படும் தபாற் செலவையாவது மிச்சப்படுத்தலாமே என்ற எண்ணம் இன்னொருபுறம்.

எனவே, எங்கள் நிலைமை சீர்படும் வரையில் எந்தவித மான சிறு உதவியைக்கூட நாடி எமக்குக் கடிதம் எழுதாம லிருக்கும்படி ஆஸ்திக ஸ்தாபனங்களையும், அன்பர்களையும் ஸவிநயம் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

சுருங்கக் கூறின், இப்போது நாங்கள் ஏற்றுக்கொண் டிருக்கும் கைங்கர்யங்களை விக்னமின்றித் தொடர்ந்து செய்து வருவதில் மேலே பிரார்த்தித்துக் கொண்டபடி எங்களுடன் ஒத்துழைத்து உதவிபுரியும்படி ஆஸ்திக மக்களுக்குத் தாளும் தடக்கையும் கூப்பி விஜ்ஞாபித்துக் கொள்கிறோம்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
2—10—1968 (லிப்கோ பதிப்பகத்தார்)



ஸ்ரீ:
ஸ்ரீ ஸர்வலோக ஶரண்யாய நம:

ஆலய தர்மம்



திவ்ய தேசங்களும் திருத்தலங்களும் சர்வேச்வரன் குடிகொள்ளும் திருக்கோயில்களாலே புனிதமாகி, பக்தர்களைப் புனிதப்படுத்தி வருகின்றன. இவைகளின் மஹிமைகளை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனும் வர்ணிக்க இயலாது.

இந்தக் கலிகாலத்தில் தாழ்ந்த எண்ணங்களும் ஆசைகளும் மலிந்திருக்கும் மனித வாழ்க்கையில், திருக்கோயில்கள்தான் தர்மம், பக்தி, பண்பு, நெறி ஆகியவைகளை ஓரளவாவது புகட்டி, நல்வழிப்படுத்தி மனிதர்களுக்கு மனச்சாந்தி, மனோதைர்யம், மனப்பக்குவம் ஆகியவைகளை வளர்த்து வர உதவ வேண்டும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோயில் இல்லா ஊரில் குடியிராதே' போன்ற மூதுரைகள் நமக்கு 'ஆலய வழிபாடும் ஆலய தர்மமும்தான் நாம் மேன்மையடையச் சுலபமான சாதனங்கள்' எனும் பேருண்மையைப் பறை சாற்றுகின்றன. இதை மறவாமல், தவறாமல் கடைப்பிடித்து வந்தால், இன்று நம் சமுதாயத்தைப் பீடித்திருக்கும் பல பீடைகளும் ஒழிந்து போகும்; சுபிட்சம் வளரும்; சௌக்யம் பெருகும்; நன்மைகள் நிறையும்!

இதில் ஆலய நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் மிகுந்த பொறுப்புகள் உள்ளன.

1. ஆலயங்களைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

2. கோயிலுக்கு வருகிற பக்தர்களிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். இதில் ஏழை—பணக்காரர் என்கிற பாகுபாடு காட்டக் கூடாது.

3. அர்ச்சகர்கள் ஒவ்வொரு பூஜை வேளையிலும் "எல்லா மக்களும் சுபிட்சமாக, சௌக்யமாக, நெறி தவறாமல் புகழத்தக்கவாறு வாழ்ந்து வர அநுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கொண்டு, பகவானுக்கு விசேஷ அர்ச்சனை செய்துவர வேண்டும்.

4. பக்தர்கள் கோயிலை அசுத்தம் செய்யக்கூடாது. அர்ச்சகப் பெரியோர்களிடமும், மற்ற ஆலய சிப்பந்திகளிடமும் பரிவும் மரியாதையும் ஆதரவும் காட்டி நடந்து கொள்ளவேண்டும். பக்தி சிந்தனையோடு ஸந்நிதியில் ஸேவிக்க வரவேண்டும். மனத்தூய்மையை வளர்க்கவே ஆலயம் அமைந்திருக்கிறது என்பதை உணர வேண்டும்.

இவ்வாறு எல்லோரும் ஆலய தர்மத்தைக் கடைப்பிடித்தால் நம் தேசத்தில் துன்பங்களும் தீமைகளும் குறைந்து, நன்மைகளும் வளமைகளும் பல்கிப் பெருகும்.

ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து!

ஸ்ரீ:

ஸ்ரீ ஶடகோபாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

எங்கள் அபிலாஷை

''தேசமெலாமுகந்திடவே பெரும்பூதூரில்
சித்திரையிலாதிரைநாள் வந்துதோன்றிக்
காசினிமேல் வாதியரைவென்று அரங்கர்-
கதியாக வாழ்ந்தருளுமெதிராசா, முன்-
பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார் உன்-
பொன்னடிமேலந்தாதியாகப் போற்றிப்
பேசிய நற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும்
பிழையறவே யெனக்கருள்செய் பேணி நீயே.'

''பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த்
தாம்மகிழும் செல்வச் சடகோபர்—தேமலர்த்தாட்கு
உய்ந்தினிய பாதுகமாம் எந்தைஇராமாநுசனே
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ்.''

நம்மாழ்வார் துதி—லிப்கோ ப்ரத்யேக ப்ரார்த்தனே

''உருவிற் சிறிய மலரேனும்
ஓங்கும் மணத்திற் பெரிதென்று
மருவித் துதிதோள் பொலிவித்த
வகுளா பரணச் சடகோபா!
குருவிற் பெரியோய்! நின்னடியைக்
குறுகிப் பணிந்தோம் 'சிறுமலர்'ப்பேர்
தருமிப் பதிப்பு நிலையத்தைத்
தாங்கிச் சிறக்க அருளுதியே!''

ஸ்ரீரங்கநாதர் திவ்யமணி பாதுகைகளாகத் திகழும் நம்மாழ்வாரின் அநுக்ரஹத்தை நாடி, நம்மாழ்வாரின் திருவடிகளுக்குப் பாதுகமாய் விளங்கிய நம் பரமாசார்யர் ஸ்ரீபகவத் ராமாநுஜரின் திருவடித் தொண்டாக, ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்திற்கு எவ்வித விகல்பமும் இல்லாமல் இயன்றவரைச் சிறிதளவாவது ஸ்வரூப ஞானமும் ஸ்வஸம்ப்ரதாய போதமும் ஏற்படவேண்டும், (குறிப்பாக இன்றைய நம்முடைய இளந்தலைமுறைக்கு) என்கிற ஒரே அபிலாஷையில், நாங்கள் லாபநோக்கை முக்கியமாகக் கருதாமல், கஷ்ட நஷ்டங்களைத் தாங்கியும், இந்த எளிய நற்பணிகளைச் செய்து வருகிறோம்.

ஸ்ரீவைஷ்ணவ குல திலகராக விளங்கும் எந்த மஹநீயரிடத்திலும் எங்களுடைய எத்தகைய சிறிய பணியின் மூலமாகவும் அபசாரப்பட நாங்கள் கனவிலும் கருதியதில்லை; கருதப்போவதுமில்லை. எவ்விதமான பேதபுத்தியும் இல்லாமல், ஸ்ரீவைஷ்ணவ சமுதாயம் ஒருமித்து, இணைந்து, வளர்ந்து, மேன்மை பெறவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். இதற்காகவே இத்தகைய ஸம்ப்ரதாய ஸத்விஷயப் புஸ்தகங்களைச் சிரமப்பட்டு லாப நோக்கமின்றியே வெளியிட்டு வருகிறோம்.


குணமே போற்றும் குணசீலர்கள் எங்களை அநுக்ரஹித்து ஊக்குவிக்கவேண்டுமென்று திருவடி தொழுது, பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

—"லிப்கோ" பதிப்பகத்தார்.



ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன்
(திருவஹீந்திரபுரத்தில் ஸேவை ஸாதிக்கிறபடி)

ஸ்வாமி தேசிகன் எழுந்தருளின திவ்ய தேசங்கள்



ஸ்ரீஸ்வாமிதேசிகன் எழுந்தருளின
திவ்யதேசங்கள்

அவதார ஸ்தலம்: தூப்புல் (ஸ்ரீகாஞ்சீபுரம்)

பலதடவை எழுந்தருளினவை

1. ஸ்ரீகாஞ்சீபுரம்
2. திருவஹீந்திரபுரம்
3. ஸ்ரீரங்கம்
4. திருப்பதி (திருமலை)
5. திருநாராயணபுரம், ஸத்யாகாலம் முதலியன

வடநாட்டு க்ஷேத்ரங்கள்

6. விஜய நகரம்
7. துங்கபத்ரா
8. துவாரகை
9. வடமதுரை
10. கோவர்த்தனம்
11. ப்ருந்தாவனம்
12. ஸாளக்ராமம்
13. பதரிகாச்ரமம்
14 நைமிசாரண்யம்
15. அயோத்தி
16. காசி
17. பிரயாகை
18. கயை
19. ஸ்ரீகூர்மம்
20. ஸிம்ஹாசலம்

தொண்டைமண்டல க்ஷேத்ரங்கள்

21. திருவள்ளூர்
22. திருநின்றவூர்
23 திருவல்லிக்கேணி
24. திருநீர்மலை
25. திருவிடந்தை
26. திருக்கடன்மல்லை
27. ஸ்ரீபெரும்பூதூர்
28. திருக்கோயிலூர்

தென்னாட்டு க்ஷேத்ரங்கள்

29. திருக்கண்டியூர்
30. தஞ்சைமாமணிக்கோயில்
31. புள்ளம்பூதங்குடி
32. கபிஸ்தலம்
33. திருக்கண்ணமங்கை
34. திருநாகை
35. திருக்கண்ணபுரம்
36. திருவெள்ளியங்குடி
37. தேரழுந்தூர்
38. திருவிந்தளூர்
39. திருக்குடந்தை
40. காழிச்சீராம விண்ணகரம்
41 திருவாலி, திருநகரி, திருநாங்கூர்
42. திருச்சித்ரகூடம்
43. வீரநாராயணபுரம், ஸ்ரீமுஷ்ணம்
44. திருவநந்தபுரம்
45. திருக்கோஷ்டியூர்
46. திருமாலிருஞ்சோலை
47. திருமோகூர்
48. ஸ்ரீவில்லிபுத்தூர்
49. திருத்தொலைவில்லிமங்கலம்
50. ஸ்ரீவைகுண்டம்
51. திருவாட்டாறு
52. வானமாமலை
53 திருக்குறுங்குடி

குறிப்பு:—தேசப்படத்தில் காணப்படும் கறுப்புப்புள்ளி அந்த அந்த ஸ்தலத்தைக்குறிக்கும். கறுப்புப்புள்ளிகள் இல்லாமல் தனியாக உள்ள எண்களும் ஸ்தலங்களையே குறிப்பவை. இங்குள்ள வரிசை எண்கள் ஸ்ரீதேசிகன் சுமார் எத்தனை இடங்களுக்கு எழுந்தருளினார் என்பதை மட்டுமே குறிப்பவை இந்த யாத்ராக்ரமம் 'வைபவப் ப்ரகாசிகை'யை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது. வேறு ஆதாரத்துடன் இதற்கும் அதிகமான ஸ்தலங்கள் எழுந்தருளினதாகத் தெரிவித்தால் க்ருதஜ்ஞதையுடன் எமது அடுத்த கிரந்தங்களில் பிரசுரிக்க முயலுவோம்.

—லிப்கோ பதிப்பகத்தார்.

Pages (I—XXXII) Printed at Bharatham Press,
14, Usman Road, Madras-17. (Phone No. 443726.)

ஸ்ரீ ரகுநந்தன பரப்ரஹ்மனே நம:

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஜாதகம்

ததஶ்ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ |
நக்ஷத்ரேऽதிதி தைவத்யே ஸ்வோச்சஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு ||
க்ரஹேஷு கர்க்கடே லக்நே வாக்பதா விந்துநா ஸஹ |
ப்ரோத்யமாநே ஜகந்நாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம் ||
கௌஸல்யா(அ)ஜநயத் ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் ||

—ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

சுக்கிரன்	சூரியன் புதன்		கேது
	ராசி சக்கரம்		லக்னம் குரு சந்திரன்
செவ்வாய்			
ராகு		சனி	

ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரங்களில் முக்கியமானது **ஸ்ரீராமாவதாரம்**. ஸ்ரீராமனுடைய ஜனனகால ஜாதகத்தில் ஐந்து க்ரஹங்கள் உச்ச ஸ்தானத்தில் இருக்கின்றன. எனவே, இந்த மஹா சிரேஷ்டமான ஜாதகத்தைப் பூஜா மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி, தினந்தோறும் சிரத்தையுடன் ஆராதிப்பது அவசியம். இந்தப் புனிதமான ஜாதகத்தை வைத்திருப்பவர்களுக்கும் பூஜிப்பவர்களுக்கும் ஜாதக ரீதியாய் ஏற்படும் நவக்ரஹ தோஷங்களின் நிவ்ருத்தியும், ஸர்வ வ்யாதி நிவ்ருத்தியும், ஐசுவர்ய அபிவ்ருத்தியும், ஆயுள், ஆரோக்யம் முதலான ஸகல பாக்யங்களும் ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகன் திருவருளால் நிச்சயமாக ஏற்படும் என்பது ஸர்வ சாஸ்த்ர ஸம்மதம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஜாதகம்

[மனிதர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் யாவை என்று உலகத்திற்கு உபதேசித்த பிறகு, அதன்படி தாமும் நடக்க முயற்சி செய்பவர்கள் பலர். ஆனால் தர்மங்களைத் தாம் முதலில் அனுஷ்டித்துக் காட்டிய பிறகே உலகுக்கு உபதேசித்தவர்கள், புருஷோத்தமனான ஸ்ரீராமனும் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்ரீ தேசிகனும் ஆவர். எனவே அவதாரச்சிறப்பு பெற்ற இவ்விருவர் ஜாதகங்களையும் இங்கு கொடுத்துள்ளோம். இவைகளை நல்ல காகிதங்களில் எழுதி கண்ணாடி போட்டு பூஜித்து வந்தால் ஸ்ரீ ரகுநந்தனனுடைய அனுக்ரஹமும், ஆசார்ய வள்ளலுடைய அனுக்ரஹமும் ஏற்படுவதுடன் கிரகங்களினால் ஏற்படும் கஷ்டங்கள் நீங்கி ஸகல க்ஷேமங்களும் உண்டாகும்.]

ஸ்வஸ்தி ஸ்ரீ சுக்ல ௵ கதகலி 4370-க்குச் சரியான (கச்சிநகர் அனந்தாசார் தோதாரம்மைக்கு வரத வேங்கட ப்ரஸாதம் ஸ்வப்னத்தில் அருளியபடி—கைரவிணீ தீர்த்தஸ்நானமும் ஆன பிறகு) புரட்டாசி ௴ 11-ஆந் தேதி ஞாயிற்றுக் கிழமை 11-28க்கு சுக்ல ஏகாதசி 6 நாழி—19 விநாடிக்கு திருவோண நக்ஷத்திரத்தில் கன்யா லக்னத்தில் (வேங்கட கண்டாம்சம்) அதிமானுஷ புருஷ ப்ரஜை அவதரணம் அல்லது சுப ஜனனம்—தூப்புல் புண்ய பூமி கச்சிநகர். 11 கடிகைகளும் 28 விகடிகையில் ஜனனம்.

			கேது
	இராசி		சனி
சந்திரன்			சுக்ரன்
ராஹு		அங்	ல குரு சூரியன் புதன்

கேது அங்	ல சூரியன்		குரு
	நவாம்சம்		புதன் சந்திரன்
சனி			
சுக்ரன்			ராஹு

கர்ப்பச் செல்லுபோக சந்திர மஹாதசையில் பாக்கி செல்ல வேண்டியது ஆ 0—மீ 9—நா 13.

க்ரஹ பாத சாராவளி

சூரியன்	ஹஸ்தம்	— 1
சந்திரன்	திருவோணம்	— 4
அங்காரகன்	ஸ்வாதி	— 4
புதன்	ஹஸ்தம்	— 4
குரு	ஹஸ்தம்	— 3
சுக்ரன்	உத்திரம்	— 1
சனி	ஆயில்யம்	— 2
ராஹு	பூராடம்	— 2
கேது	திருவாதிரை	— 4

(ஸ்ரீசைலம்—தாத்தாசார் அநந்தஸரோவரி.)

(MSS. Palm leaves. Sherfoji's Saraswathi Mahal Library, Tanjore.)

இது ஸ்ரீ வேதாந்த தேசிகர் திருவவதார ஜந்ம பத்திரிகை. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஸ்ரீ பகவத்ராமானுஜருக்குப் பிறகு ஜகதாசார்யராகவும், வடமொழியிலும் தென்மொழியிலும் சேர்ந்து நூற்றுக்கும் அதிகமான ஸத்க்ரந்தங்களை இயற்றியவராகவும் விளங்கிய ஒரு மஹாபுருஷனுடைய ஜாதகம் இது.

ஆகவே, இது ஒரு மஹானுடைய ஜாதகம் என்பதை நிரூபிப்பதற்குத் தேவையான கிரஹபலமும், ஜோதிஷ சாஸ்திர ஆதாரமும் இருக்கின்றனவா என்பதைப் பார்ப்போம்.

(ஜனன காலம் உதயாதி 11—28க்கு என்றிருப்பதால் கன்யாலக்னமாக இருப்பதற்கில்லை. அந்த ஓலைச்சுவடி மிகவும் சிதைந்த நிலையிலிருப்பதாகவும் மேற்கொண்டு எதையும் செய்ய முடியாதென்றும் இதை அனுப்பியவர் குறிப்பிட்டபடியால் கன்யாலக்னமென்றே வைத்துப் பலன் கூறப்பட்டுள்ளது.

லக்னம்

இந்த ஸ்வாமி அவதாரம் செய்தது கன்யாலக்னத்தில் மேஷ நவாம்சத்திலாகும். கன்யாலக்னத்தில் மேஷ நவாம்சம் என்பது 4-வது நவாம்சமாகும். அதாவது ஹஸ்தம் 1-ம் பாதத்தில் லக்னம் அமைந்திருக்கிறது.

கன்யாலக்னத்திற்கு அதிபதி புதன். அவர் ஞானகாரகர். லக்ன கேந்திரமாகிய ஸ்வஸ்தானத்தில் உச்சராக விளங்குகிறார். ஞானாதிஷ்டான தேவதையான ப்ருஹஸ்பதியும் லக்ன கேந்திரத்தில் இருக்கிறார். அவர்களுடன் ஆத்ம காரகனான சூரிய பகவான் லக்னகேந்திரம் பெற்று நவாம்சத்தில் உச்சனாக இருப்பதால் மஹாமேதாவியாகவும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராகவும் விளங்குவதற்குரிய கிரஹபலம் இருக்கின்றது.

தவிர, பஞ்சமஸ்தானத்தை (ஐந்தாவது இடத்தை) வித்யாஸ்தானமென்று சாஸ்திரம் கூறும். வித்யாஸ்தானாதிபதி சனி பகவான். அவர் லாபஸ்தானத்தில் இருந்து தன் இடத்தைநோக்குகிறார். லாபாதிபதியான சந்திரன் ஐந்தில் அமர்ந்து லாபஸ்தானத்தை நோக்குகிறார். லாபஸ்தானத்தில் சனிபகவானும், பஞ்சமத்தில் சந்திரனுமாகப் பரிவர்த்தனை யோகத்தை அடைந்திருப்பதால் வித்யா லாபம் உள்ள சிறந்த ஜாதகம் இது.

தவிர, மந்த்ரோபதேச ஸ்தானமான ஐந்தாமிடத்தில் சந்திர பகவான் அமர்ந்திருப்பதால் வெள்ளைப் பரிமுகனாகிய ஸ்ரீ ஹயக்ரீவனுடைய மந்த்ரஸித்தியும் அனுக்ரஹமும் ஸூசிக்கப்படுகிறது.

குறிப்பு :— இந்த ஜாதகம் கணித ரீதியில் சரியா? என்று சென்னையில் வானசாஸ்திர மேதையாக விளங்கும் ஸ்ரீ வி. சுப்பிரமணிய சாஸ்திரியவர்களைக் கேட்டிருந்தோம். அவர் எழுதியதை கீழே பிரசுரிக்கிறோம் :—

“ ஸ்ரீ தேசிகர் ஜாதகம் கணிதப் பரீக்ஷைக்கு உயர்ந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. கால கணிதம் சுத்தமாக வருவதை நான் திநே திநே போட்டு சந்தோஷப்படுகிறேன்.

கலியுகாதி நடப்பது	5070
ஸ்ரீமான் தேசிகர்	4370
	700

புரட்டாசித் திருவோணத்தில் 701 ம் ஆண்டு விழா சரி.

சுக்லநாம ஸம்வத்ஸரம்	5070
சுக்ல ஷ	4370
	660
சுக்லாவோடு கூட்ட	40
மேல் 40 வருஷங்கள்	700

கதகலி 4370 வருஷம் முடிந்து ஆவணி மாதம் வாக்கியம் முழுவதும் கூட்டி புரட்டாசி 11ம் தேதியும் கூட்டி 'மாயாயசோ ஜநோ ராஞ:' கழித்து சுத்த] தினங்கள் எடுத்து, கிழமை கண்டு பிடித்தோம். ஞாயிறு வந்ததும் சூரியஸ்புடம், சந்திரஸ்புடம், நவக்ரஹஸ்புடம் எடுத்தோம். இதில் ஆச்சர்யம் ! சுக்கிரன் நீசம் ஆகாமல் உத்திரம் 1 ம் பாதத்தில் வருவதே ஜோதிஷ கணித பரீக்ஷையாகும்.மற்றக் கிரஹங்களும் அம்சகப்படி வருகிறது. திதி, நட்சத்திரம், ராகு கேது சாரங்களும் சரியாக வருகின்றன.

— வி.சுப்பிரமணிய சாஸ்திரி,
2, அஜிஸ் நகர் முதல் தெரு,
சென்னை-24.

இனி சாஸ்த்ரப் பிரமாணங்களைப் பார்ப்போம்:—

5க் குடையவனான சனிபகவான் லாபஸ்தானத்திலிருப்பதற்குப் பலன்:
ஸுதேசே லாபபவநே பண்டிதோ ஜநவல்லப: |
க்ரந்தகர்த்தா மஹாதக்ஷோ பஹுபுத்ர தநாந்வித: ||
—பராசரஸம்ஹிதை

"5க்குடையவன் 11 மிடத்திலிருந்தால் வித்வானாகவும், ஜனங்களுக்குப் பிடித்தவனாகவும், கிரந்தங்களைச் செய்பவனாகவும், மிகுந்த

சாமர்த்தியமுள்ளவனுகவும், அனேகம் புத்திரன், தனம் இவற்றுடன் கூடியவனுகவும் இருப்பான்." ஸ்ரீ தேசிகன் கிரந்த கர்த்தா என்பதும் "மஹாதக்ஷ;" என்பதால் "ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்" என்பதும் நிருபிக்கப்பட்டன. ஞானபுத்திரர்கள் பலர் என்பதும் உண்மை.

புத்திசாலி யோகங்கள்

ஜாதகதத்வம் என்ற நூலில் ஸூத்ரங்கள்:—

(1) **"ஸுதர்க்ஷே சுபே புத்திமாந்"** *ஐந்தாமிடத்தில் சுபனிருந்தால் புத்திமான். (சந்திரன் 5 மிடத்திலிருக்கிருன்)*

(2) **"குரௌ கேந்த்ர கோணகே புத்திமாந்"** *குரு 1, 5, 9, 4, 7. 10லிருந்தால் புத்திமான் (குரு 1ல் இருக்கிருர்.)*

வேதாந்தாசார்ய யோகம்

(1) "கேந்த்ரகோணே ஜீவே வேதாந்தக்ஞ:" = 1, 4, 7, 10, 5, 9ல் குரு இருந்தால் வேதாந்தி (1ல் குரு இருக்கிருர்.)

(2) "ஸ்வோச்சேங்கே ஜ்ஞே, கோசேசே பாராவதே, வ்யயே சுக்ரே வேதாந்தி" புதன் தன் உச்சமான லக்னத்தில் இருந்து 2க்குடையவன் பாராவதாம்சத்திலிருந்து சுக்ரன் 12 மிடத்திலிருந்தால் வேதாந்தி.

வைராக்ய யோகம்

தனுதிபதி (2-க்குடையவன்) சுக்ரன் வ்யய ஸ்தானத்தில் இருப்பதாலும், தன ஸ்தானத்தில் 3-8க்குடைய அங்காரகன் இருப்பதாலும் தனத்தில் விரக்தியும், அதிதாரித்ரியமும், பிக்ஷாடன மென்ற உஞ்சவ்ருத்தியை ஜீவனமாகக் கொண்டிருத்தலும் ஏற்படும். 2-ல் அங்காரக ஸம்பந்தத்தால் வாக்கு வன்மையும், தமிழில் புலமையும் ஏற்படும்.

இவ்வாறு சாஸ்திர வசனங்களை ஆராய்ந்தால் இந்த ஜாதகத்திற்குரிய ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் கவிதார்க்கிக ஸிம்ஹம் விரக்தாக்ரேஸரர், ஜகதாசார்யன் என்பதற்கான பல கோட்பாடுகள் கிடைக்கு மென்பதில் ஐயமில்லை.

—கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர்



ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீ ஹயக்ரீவனும்
(திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியுள்ளபடி)

ஸ்ரீதேசிகன் சரித்திரம்

இன்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன், நகரங்களிற் சிறந்த காஞ்சிமா நகரத்தில், விளக்கொளிப் பெருமாள் சந்நிதியிருக்கும் தூப்புல் என்ற பகுதியில் அனந்தஸூரி — தோதாரம்மை என்று ஒரு திவ்ய தம்பதிகள் இருந்தனர்.

இந்த தம்பதிகளுக்குத் திருவேங்கடமுடையானது திரு வருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது வேங்கடேசன் அவ

தரித்த புரட்டாசித் திருவோணத்திலேயே அவனருளால் பிறந்தமையால் வேங்கடேசன் என்றே அதற்கு நாமகரணம் செய்தனர். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்தது. ஐந்தாவது வயதில் முறைப்படி அக்ஷராப்யாஸமும் நடந்தது.

அதுசமயம், வேங்கடேசனின் அம்மான் கடாம்பி அப்புள்ளார் என்பவர், காஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேவராஜன் ஸந்நிதியில் நடாதூர் அம்மாள் என்பவரிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்து வந்தார். ஒருநாள் தம் மருமகனையும் காலக்ஷேப கோஷ்டிக்கு அழைத்துச் சென்றார் அப்புள்ளார். குழந்தையின் முகப் பொலிவையும் சொல் வன்மையையும் கண்ட நடாதூர் அம்மாள் குழந்தையை அருகில் அழைத்து அணைத்து, “நீ பிற மதங்களைக் கண்டித்தும் நம் மதத்தை நிலைநிறுத்தியும் கற்றோர் புகழும்படி ஸகல க்ஷேமங்களுக்கும் பாத்திரனாவாய்” என்று வாழ்த்தினார்.

அப்புள்ளாரும் தம் ஆசாரியரின் ஆணைப்படி அந்தக் குழந்தைக்கு முறைப்படி கல்வி கற்பிக்கும் முழுப் பொறுப்பைத் தாமே ஏற்றார். குழந்தை வேங்கடேசனுக்கு உபநயனம் செய்வித்து வேதாத்யயனமும் செய்வித்தார். சிறுவனான வேங்கடேசனும் மிக்க விநயத்துடனும் சிரத்தையுடனும் அம்மானிடம் காவிய, நாடக அலங்கார, தர்க்க, வியாகரண, மீமாம்ஸாதி ஸகல சாஸ்திரங்களையும் படிப்படியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றான். பிறகு ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், பகவத் விஷயம் முதலிய வேதாந்த சித்தாந்த நூல்களையெல்லாம் தமது இருபதாவது ஆண்டிற்குள் கசடறக் கற்றுவிட்டார் நம் தேசிகன். இவருடைய அறிவுத் திறனையும் அடக்கத்தையும் கண்டு கற்றோரும் மற்றோரும் வியந்தனர். அப்புள்ளாரும் மருமகனுடைய மேதாவிலாஸத்தைக் கண்டு ஸ்ரீ ராமாநுஜரால் பாதுகாக்கப்பட்ட ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் திக்கெட்டிலும் பரப்பக்கூடிய திறமையுள்ளவர் இவரே என்று முடிவு செய்தார்.

பிறகு, இவருக்கு மேன்மேலும் ஞானபலம் அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வேதஸ்வரூபியான கருத்மானுடைய அருள் தரக்கூடிய கருட மந்த்ரத்தை உபதேசித்தார். ஸ்ரீதேசிகன்

இந்த மந்த்ரத்தை ஜபித்து பெரிய திருவடியின் அனுக்ரஹம் பெறுவதற்கு உகந்த இடம் எது என்று தேடி திவ்யதேச யாத்திரை செய்யும் காலத்தில் திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளினார். அங்கே ஸ்ரீதேவநாதன் ஸந்நிதிக்கு எதிரிலுள்ள 'ஔஷாதாத்ரி' என்ற சிறிய மலை அதற்குத் தக்கதாக இருந்தது. அந்த மலையில் கருட மந்த்ரத்தை ஜபித்தார். கருட பகவான் அதனால் மகிழ்ச்சியடைந்து ப்ரத்யக்ஷமானார். பிறகு ஸகல வித்யாதிதேவதையான ஸ்ரீஹயக்ரீவனை ஸாக்ஷாத்கரிக்கக்கூடிய ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசம் செய்து ஒரு ஹயக்ரீவ விக்ரஹத்தையும் கொடுத்து மறைந்தார்.

ஸ்ரீ தேசிகன் அதே ஔஷதகிரியில் விரதம் பூண்டு ஸ்ரீஹயக்ரீவனை ஆராதித்துக்கொண்டும் ஹயக்ரீவ மந்த்ரத்தை ஆயிரமாயிரம் தடவை ஸதா ஜபித்துக்கொண்டும் அதே தியானத்தில் இருந்தார். ஒரு சுபதினத்தில் ஸ்ரீஹயக்ரீவன் பிரத்யக்ஷமாய்த் தமது பரிமுகத்திலிருந்து லாலாமிருதம் என்ற ஞானமிருதத்தை எடுத்து ஸ்ரீ தேசிகனுக்கு ஊட்டியருளினார். அதை அருந்தியதே வியாஜமாக ஸ்ரீ தேசிகனுடைய திருவாக்கிலிருந்து கவிதாப்ரவாஹம் பெருக்கெடுத்தோடியது.

முதன் முதலில் ஜ்ஞாநாதிதேவதையான ஸ்ரீ ஹயக்ரீவனைப் பற்றியும், ஜ்ஞாநாசார்யனை கருடனைப் பற்றியும் ஸ்தோத்திரங்களை இயற்றினார். இப்படிப் பலகாலம் திருவஹீந்திரபுரத்திலும், சில காலம் காஞ்சி, ஸ்ரீரங்கம், திருமலை முதலிய திவ்யதேசங்களிலும் எழுந்தருளியிருந்து, அந்த அந்த திவ்யதேசத்து எம்பெருமான்களைத் தாம் இயற்றிய ஸ்தோத்திரங்கள் மூலமாகவும் பாசுரங்கள் மூலமாகவும் மங்களாசாஸனம் செய்து வந்தார்.

மற்றும், தாம் செல்லுமிடமெல்லாம் சீடர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரமும் மந்த்ரோபதேசமும் செய்ததுடன் ஸம்பிரதாய கிரந்த காலக்ஷேபங்களையும் ஸாதித்து வந்தார்.

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த கிரந்தங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

(1)	ஸ்தோத்ரங்கள்	28
(2)	வேதாந்த கிரந்தங்கள்	14

(3)	வ்யாக்யாந கிரந்தங்கள்	8
(4)	ரஹஸ்ய கிரந்தங்கள்	31
(5)	தமிழ் ப்ரபந்தங்கள்	24
(6)	காவியங்கள்	4
(7)	நாடகம்	1
(8)	அநுஷ்டானக் கிரந்தங்கள்	2
		112

ஸ்ரீதேசிகனின் தனிப்பெருமை

1. தம் வாழ்நாள் முழுவதும் சற்றும் ஓய்வில்லாமல் வடமொழியிலும் தென்மொழியிலும் 112 கிரந்தங்களை இயற்றினார்.

2. ஓர் இரவின் ஒரு யாம காலத்திற்குள் (அதாவது 3 மணி காலத்திற்குள்) ஸ்ரீரங்கநாத பாதுகையைப் பற்றி 'பாதுகா ஸஹஸ்ரம்' என்னும் ஆயிரம் சுலோகங்களை இயற்றினார்.

3. பணத்தையோ புகழையோ விரும்பாமல் எளிய வாழ்க்கை நடத்தினார். வித்யாரண்யர் மூலமாக வந்த அரசனின் அழைப்பையும் ஏற்காமல் 'வைராக்ய பஞ்சகம்' அருளினார்.

4. 'வேதாந்தாசார்யர்' என்ற விருதை அரங்கநாதனாலும், 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்ற விருதை அரங்கநாச்சியாராலும் அநுக்ரஹிக்கப் பெற்றார்.

5. ஸ்ரீதெய்வநாயகன் திருவுள்ளப்படி பாகவதர்கள் மூலம் 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்ற விருதைப் பெற்றார்.

6. இவ்வளவு ஞானமும், அனுஷ்டானமும், வைராக்யமும், பக்தியும் இருந்தும் சிறிதும் கர்வமோ, கோபமோ கொள்ளாமல் எல்லோருடனும் அன்பாகப் பழகினார்.

7 தம்மை அவமதிததவாகளையும போற்றிப புகழ்நதாா ஒரு நாள் இவருடைய பெருமையைக கணடு பொறாமை கொணட சிலர் இவா செல்லும வழியில் பழைய செருப்புத தோரணம கடட, அது அவா தலையில இடிகக, 'பாகவதாகளின் திருவடிச சோடுகளே நாஙகள உயவதறகுப பறறுககோல' எனறு கூறி உணமை வைண வததை உலகததிறகு அறிவுறுததினா

இபபடி ஞானத்திறகும, அனுஷ்டானததிறகும, வைராகயத திற்கும நிதியாய்—ஆதாரமாய் எழுநதருளியிருநத ஸ்ரீமநநிகமாநத மஹாதேசிகன் அவதாரததையும, பெருமைகளையும மனததில கொளபவாகளுககு ஸகல க்ஷேமஙகளும் உண்டாகுமெனபதில் சிறிதும ஐயமிலலை

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

ஸ்வாமி தேசிகனின் ஆசார்ய பக்தி

அத்யாதம சாஸதரஙகளில ஜஞானம ஏறபட ஆசாாய பகதி அவசியம என்பதும் ஸாவாவஸ்தையிலும் குருபகதியின பரீவாஹ மாகக குருவைப பிரகாசப்படுதத வேண்டும் என்பதும ஸ்வாமி தேசிகனுடைய உபதேசஙகள இந்த உபதேசங்களைப் பிறருக்குச சொலவது மட்டுமன்றித தாமே அனுஷ்டித்தும காட்டியிருககிறா ஸ்வாமி.

எங்ஙனேயெனில், அத்யாதம சாஸ்த்ரங்களில் அடங்கியுள்ள தத்வார்ததங்களைப் பாமரா பண்டிதர் உளளிட்ட யாவரும் எளிதில் அறிநதுகொள்வதற்கு உபகாரமாக அவர் அருளியுள்ள "ஸ்ரீமத் ரஹஸ்யதரய ஸாரம்" எனனும் அரிய க்ரந்ததகின் ஆரம் பத்தில ஆழ்வாாகளுடையவும் பூாவாசாாய பரம்பரையினுடைய வும் பெருமைகளைப் பரக்கப் பேசும் "குருபரமபராஸாரம்"

என்னும் அதிகாரத்தை முதலில் இட்டுத் தம் உபதேசங்களைத் தாமே அனுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்.

அதன் முடிவில் "இந்த ரஹஸ்யங்களை அனுஸந்திக்கும் போதெல்லாம் ஆசார்யபரம்பரையை அனுஸந்திக்கையும் விதிபலப்ராப்தம்" என்று கூறுவதுடன் நில்லாமல், "இவ்வாசார்யர்களுடைய அனுஸந்தானம்.........ப்ரதிஷித்தஸம்பாஷணத்துக்கு ப்ராயச்சித்தமுமாம்" (அதாவது பேசத் தகாதவர்களுடன் ஸம்பாஷிக்க நேர்ந்துவிட்டால், ஆசார்யர்களைத் தியானித்தால் அந்தப் பாபம் அகன்றுவிடும்) என்று பலன் கூறித் தலைக்கட்டுகிறார்.

அந்த அதிகாரத்தின் உபஸம்ஹாரத்தில் தமக்கு ஞானோபதேசம் செய்த ஆசார்யனிலிருந்து ஆரம்பித்து எம்பெருமான்வரை உள்ள ஆசார்ய பரம்பரையை வணங்கும் "என்னுயிர்தந்தளித்தவரை......" என்று ஆரம்பிக்கும் பாசுர மியற்றியிருக்கிறார்.

அதற்குப் பின்னர் ஸம்ஸ்க்ருதத்தில் இரண்டு காரிகைகளையும் தமிழில் மூன்று பாசுரங்களையும் இட்டுள்ளார். ஸம்ஸ்க்ருதத்திலுள்ள காரிகைகளில் நாதமுனிகள் முதலிய பூர்வாசார்யர்களின் பெருமைகளையும், ஸ்ரீஹயக்ரீவனுடைய அனுக்ரஹத்தைப் பெற்ற நம் ஆசார்ய பரம்பரை வாதிநிரஸனம் செய்து திக்கெட்டிலும் ஜெயக் கொடி நாட்டியிருப்பதையும் குறிப்பிடுகிறார். பிறகு முறையே பாஷ்யகாரர், ஆளவந்தார், நாதமுனிகள், விஷயமாக தனித்தனியே மூன்று பாசுரங்களிட்டுள்ளார்.

பின்னால் வரும் அதிகாரங்களை நோக்கினால் அவைகளின் முடிவில் அந்தந்த அதிகாரத்தில் அடங்கியுள்ள ஸாரமான அர்த்தத்தை ஸங்க்ரஹித்துக் காட்டும் ஒரு ஸம்ஸ்க்ருத காரிகையும் ஒரு தமிழ்ப் பாசுரமுமே கொடுக்கப் பட்டுள்ளதைப் பொதுவாகக் காணலாம். ஆனால், இந்த அதிகாரத்தின் முடிவில் மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட காரிகையும் பாசுரங்களும் கொடுக்கப் பட்டுள்ளதன் காரணத்தைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் குரு பக்தியின் பரீவாஹமாகக் குருவை ப்ரகாசிப்படுத்த வேண்டும்

என்னும் தம் உபதேசத்தைத் தாமே அனுஷ்டித்துக் காட்டியிருப்பது நன்கு விளங்கும்.

பகவத் பாஷ்யகாரரிடம் விசேஷித்த பக்தி

பூர்வாசார்ய பரம்பரையில் குறிப்பாக எம்பெருமானாரிடம் ஸ்வாமிக்கு விசேஷித்த பக்தி உண்டு என்பதை அவர் அருளிச் செய்த நூல்கள் பலவற்றில் காணலா மெனினும், அவர் அருளிச் செய்துள்ள யதிராஜ ஸப்ததிதான் ஸ்வாமியின் ராமானுஜ பக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு சுலோகத்திலும் அது ப்ரதிபலிக்கிற தென்றாலும் சில முக்கியமான சுலோகங்களை மட்டும் இங்கு ஆராய்வோம்.

"பருஷாதிவாத பரிவாத பைசுந--
ப்ரப்ருதி ப்ரபூத பதநீய பங்கிலா |
ஸ்வததே மமாத்ய ஸுபகா ஸரஸ்வதீ
யதிராஜ கீர்த்தி கதகைர் விசோதிதா ||

என்னும் 19-வது சுலோகத்தில், தண்ணீர் தேத்தாங் கொட்டையால் தெளிந்து பரிசுத்தமடைந்து இனிப்பதைப்போல் அனேக பாதகங்களால் அழுக்குற்ற தம் வாக்கு யதிராஜருடைய புகழால் தூய்மை பெற்றது என்கிறார்.

விகல்பாடோபேந ச்ருதிபதமசேஷம் விகடயந்
யத்ருச்சாநிர்த்திஷ்டே யதி ந்ருபதி சப்தே விரமதி |
விதண்டாஹங்குர்வத் ப்ரதிகதக வேதண்ட ப்ருதநா
வியாத வ்யாபார வ்யதிமதந ஸம்ரம்பகலஹ: ||

என்னும் 51-வது சுலோகத்தில், ப்ரதிவாதிகளாகிற யானைக் கூட்டங்களின் அட்டஹாஸத்தை அடக்குவதற்கு ஸ்ரீபாஷ்யகாரரின் திருநாமத்தை உச்சரிப்பதே போதுமானது என்கிறார். மேலே குறிப்பிடப்பட்ட "குருபரம்பராஸாரம்" என்னும் அதிகாரத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள "ஆரண நூல்வழிச் செவ்வை" என்று ஆரம்பிக்கும் தமிழ்ப் பாசுரம் (தேசிகப்பிரபந்தம் அதிகார சங்கிரகம் 4-வது பாசுரம் காண்க) ஏறத்தாழ இதே அர்த்தம் தொனிப்பதாய் அமைந்திருக்கிறது. உடையவர் விஷயமாக இப்


படி ஒரு முழு ஸ்தோத்திரம் அருளிச் செய்வதை உத்தேசித்துதான் அந்த இடத்தில் அவர் விஷயமாக ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு காரிகை கொடுக்கவில்லைபோலும்.

நிராலோகே லோகே நிருபதிபரஸ்நேஹபரித:
யதிக்ஷ்மாப்ருத் தீபோ யதி ந கில ஜாஜ்வல்யத இஹ |
அஹங்காரத்வாந்தம் விஜஹதி கதங்காரமநகா:
குதர்க்கவ்யாளௌகம் குமதிமத பாதாள குஹரம் ||

என்னும் 56-வது சுலோகத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அவதரிக்காவிடில் ஹேதுவாதிகளின் குதர்க்க வாதம் ஓங்கியிருக்கும். அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய அஜ்ஞானம் என்கிற இருளிலிருந்து ஸாதுக்கள் எங்ஙனம் தப்பித்திருக்க முடியும்? என்று கேட்கிறார் ஸ்வாமி.

இப்படி அஸாதாரணமாகப் பாஷ்யகாரரிடம் பக்தி பூண்ட ஸ்வாமி தேசிகனுக்கு இன்னொரு அஸாதாரணப் பெருமையும் உண்டு. அதாவது "ஸ்ரீபகவத் ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமன்" என்று அவர் பெற்றுள்ள விருதே அவருடைய அஸாதாரணப் பெருமை என்ன என்பதை விளக்கும்.

ஸ்வாமியின் 701-வது திரு அவதாரதினமாகிய இந்நன்னாளில் ஸ்வாமி தேசிகன் உள்ளிட்ட நம் பூர்வாசார்ய பரம்பரையை அவர் உபதேசித்துள்ளபடி தியானிப்பதுடன், அவர்களிடம் பக்தி நிரம்பிய மனத்தினராய் அவர்தம் பெருமைகளைப் பறை சாற்றுவோமாக.



ஸ்ரீ கருடபகவான்

ஸ்ரீ :

கருடபகவானும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஆசார்ய ஸார்வபௌமனுகவும் கவி தார்க்கிக ஸிம்ஹமாயும், ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரராகவும் விளங்கியதற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுடைய அனுக்ரஹம் அவருக்குப் பூர்ணமாகக் கிட்டியதுதான் காரணம் என்பது யாவரும் அறிந்ததே. இந்த விதமாக அவருக்கு ஸ்ரீ லக்ஷ்மீஹயவதனனின் அருள் கிடைப்பதற்கு உதவி புரிந்தவர் ஸ்ரீ கருடபகவான்தான். அதாவது, திருவயிந்திரபுரம் ஔஷதகிரியில் ஸ்வாமி ஸ்ரீ கருட பகவானை உபாஸனை செய்ய, பெரிய திருவடி அவருக்கு ப்ரத்யக்ஷமாகி ஸ்ரீ ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்தார். அந்த மந்த்ரத்தின் உதவியுடன் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனைக் குறித்துத் தபஸ் செய்ய ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனும் அவருக்குப் பிரஸந்நமானுர்.

பகவானுடைய எத்தனையோ ஸ்வரூபங்கள் இருக்க ஸ்வாமி ஸ்ரீ ஹயக்ரீவனைக் குறித்துத் தவம் புரிவானேன்? அதற்குக் கருடனுடைய உதவியை ஏன் நாடவேண்டும்?

இந்தக் கேள்விகளுக்குப் பெரியோர்கள் ஸவிஸ்தாரமாகப் பதிலளிக்கக் கூடும். ஆனுல், எம் சிற்றறிவுக்கு எட்டியவரை இவ்விரு கேள்விகளுக்கும் இங்கு விடை கூறுவோம்.

வித்யைக்கு அதிபதி ஸ்ரீஹயக்ரீவன். எத்தகைய வித்யை? ப்ரஹ்மஜ்ஞானத்தை அளிக்கக்கூடிய வித்யை. அத்தகைய ப்ரஹ்மஜ்ஞானத்தை அளிக்கக்கூடிய வேதங்களை மதுகைடபர்கள் ப்ரஹ்மாவிடமிருந்து அபஹரித்துச் சென்றனர். அவ்வஸுரர்களை ஸம்ஹரித்து, வேதங்களை மீட்டுக் கொடுத்து மீண்டும் அவைகளை ப்ரஹ்மாவுக்கு உபதேசம் செய்வதற்காக பகவான் எடுத்துக்கொண்ட அவதாரம் தான் ஹயக்ரீவ அவதாரம். ப்ரஹ்மஜ்ஞானத்தில் ருசி ஏற்பட்ட நம் ஸ்வாமி அதை அளிக்கக்கூடிய ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனைக் குறித்துத் தவம் செய்ததில் ஆச்சரியத்துக்கிடமேது?

இதற்குக் கருடனை உபாஸிக்க வேண்டிய அவசியமென்ன? இதற்கு லௌகிக ரீதியிலேயே விடை கூறலாம். அதாவது, நாம்

இந்நாட்டு ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி போன்ற பெரும் பதவியிலுள்ள ஒருவரை ஏதோ முக்கிய அலுவலுக்காகப் பேட்டி காணுவதற்கு அனுமதி கோர வேண்டியிருக்கிறது. அப்போது நாம் என்ன செய்கிறோம்? அந்தப் பெரிய பதவியிலுள்ள அதிகாரியின் அந்தரங்கக் காரியதரிசி (Personal Secretary)யை முதலில் சந்தித்து நம் கோரிக்கையைத் தெரிவிக்கிறோம். அதைப் பரிசீலித்து நாம் அந்தப் பெரிய பதவியிலுள்ளவரை ஸந்திக்க வேண்டியது அவசியம் தான் என்று கருதினால்தான் பேட்டியளிக்கலாம் என்று சிபாரிசு செய்வார். அங்ஙனம் அவர் சிபாரிசு செய்தால்தான் நமக்கும் பேட்டியும் கிடைக்கும். ஒருவேளை,அனேகஅலுவல்கள் காரணமாகப் பேட்டி கிடைப்பது சிரமம் என்று தோன்றினால் கூட, அந்தரங்கக் காரியதரிசிக்கு நம்மீது நல்லெண்ணம் மட்டும் ஏற்பட்டுவிட்டால், அவர்களே எப்படியாவது பேட்டி காணுவதற்கு ஏதாவது ஒரு யுக்தி அல்லது, குறுக்கு வழியைச் சொல்லிக் கொடுப்பதை நாம் கண் கூடாகப் பார்த்திருக்கிறோம்.

ஸாதாரண மனிதர்களைப் பேட்டி காண்பதற்கே இந்தப் பாடு என்றால் ஸர்வலோக ரக்ஷகனும் வேத புருஷனுமான ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனைப் பேட்டி காணுவது எளிதில் நடக்கக் கூடியதா? எனவே, அவனுடைய அந்தரங்கக் காரியதரிசியை ப்ரார்த்தித் தால்தான் காரியம் நடக்கும். அது யார்? வேறு யாருமல்ல, $ வேதஸ்வரூபியான பெரியதிருவடிதான். இந்த சூக்ஷ்மத்தைத் தம் மாதுலரும் ஆசார்யருமான கிடாம்பி •அப்புள்ளாரிடமிருந்து அறிந்துகொண்டு அவரிடமே கருடமந்த்ர உபதேசமும் பெற்று நம் ஸ்வாமி கருடபகவானை உபாஸித்து அவருடைய திவ்யானுக்ர ஹத்தைப் பெற்று எளிதில் வெற்றி கண்டார்.

$ பெரியதிருவடி தான் வேதபுருஷனை பகவானுக்கு அந்தரங்க கிங்கரர் என்ற கருத்து ஸ்ரீ உபய வே. வித்வான், மது ராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டு, பராபவ வருஷம் ஆடி மாதத்து ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இதழில் (ஸம்புடம் 25 ஸஞ்சிகை 4) வெளியான "கருடன்" என்னும் வியாஸத்தில் காணப் படுகிறது. இதிலடங்கிய இந்தக் கருத்து இந்த வியாஸம் அமை வதற்கு ரொம்பவும் உதவியாக இருந்தது. இதற்காக இந்த

ஸ்தவ்யம் ஸ்தவப்ரியமத: சரணோக்தி வச்யம்
    ஸ்தோதும் பவந்த மபிவாஞ்சதி ஜந்துரேஷ: ||''
(சரணாகதி தீபிகை—3)

''விச்ராணயந் மம விசேஷ விதாமநிந்த்யாம்
    அந்தர்வதீம் கிரமஹீந்த்ர புராதிராஜ |

ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய இதீவ தபோதநோக்தம்
ஸ்தோதேதி ச த்வதபிதாநமவந்த்யய த்வம் ||''
(தேவநாயக பஞ்சாசத்—7)

8. ஸர்வ:

''விச்வம் சுபாச்ரயவதீச வபுஸ்த்வதீயம்
ஸர்வா கிரஸ்த்வயி பதந்தி ததோsஸி ஸர்வ: |
ஸர்வே ச வேத விதய: த்வதநுக்ரஹார்த்தா:
ஸர்வாதிகஸ்த்வமிதி தத்வ விதஸ்ததாஹு: ||''
(சரணாகதி தீபிகை—7)

''ஸகலாநாம் தரண நியமந ஸ்வாமித்வ
நியம ஸம்ஸ்த்தித: ஸர்வதநு: |
ச்ரேயஸேsச்யுத ஸர்வ: ஸதா தர்சித
கார்ய காரணத்வ கர்புர: ||''
(அச்யுத சதகம்—11)

9. குரு:

''தீபாவபாஸ தயயா விதிபூர்வமேதத்
விச்வம் விதாய நிகமாநமபி தத்தவந்தம் |
சிஷ்யாயிதா: சரணயந்தி முமுக்ஷவஸ்த்வாம்
ஆத்யம் குரும் குருபரம்பரயாsதிகம்யம் ||''
(சரணாகதி தீபிகை—9)

10. சரண்ய:

''காசீ வ்ருகாந்தக சராஸந பாண கங்கா-
ஸம்பூதி நாம க்ருதி ஸம்வதநாத்யுதந்தை: |
ஸ்வோக்த்யம்பரீஷ பய சாப முகைச்ச சம்பும்
த்வந்நிக்நமீக்ஷிதவதாமிஹ க: சரண்ய: ||''
(சரணாகதி தீபிகை—19)

11. ஸர்வகத :

''அணுப் ரமிதஸ்யாப்யச்யுத சக்திஸ்தவ
ஸகல தாரணாதி ப்ரபூதா |
தேந ப்ரதிவஸ்து பூர்ண: ச்ரேயஸேsப்ரதிஹத
நிஜஸ்த்திதி: ஸர்வகத: ||''
(அச்யுத சதகம்—10)

12. ஸம:—ஆத்மா-நிஷ்ட்டா

''ஸகலாகமாநாம் நிஷ்ட்டா ஸகலஸுராணா-
மப்யந்தர ஆத்மா
ஸகல பலாநாம் ப்ரஸூதி: ஸகலஜநாநாம்
ஸம: கலு நதஸத்ய த்வம் ||

(அச்யுத சதகம்—20

13. ஔஷதம்

''இதி த்ரிபுவநைகமூலம் ஆஸ்வாதயந்த்யநகா
அம்ருத ஸ்வாதுரஸம் |
ஓஷதி மஹீதர பார்ச்வ உதிதம் த்வா மௌஷத-
மிவ தாஸருஜாம் ||''

(அச்யுத சதகம்—44)

இங்கு ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச் செய்துள்ள **முகுந்தமாலையில்,**

''ஹே லோகா: ச்ருணுத ப்ரஸூதி மரண-
வ்யாதேச்சிகித்ஸாமிமாம்
யோகஜ்ஞாஸ் ஸமுதாஹரந்தி முநயோ
யாம் யாஜ்ஞவல்க்யாதய: |
அந்தர்ஜ்யோதிரமேயமேகமம்ருதம்
க்ருஷ்ணாக்ய மாபீயதாம்
தத்பீதம் பரமௌஷதம் விதநுதே
நிர்வாண மாத்யந்திகம் ||''

(சு—17)

''வ்யாமோஹ ப்ரசமௌஷதம் முநிமநோ-
வ்ருத்திப்ரவ்ருத்த் யௌஷதம்
தைத்யேந்த்ரார்த்திகரௌஷதம் த்ரிஜகதாம்
ஸஞ் ஜீவநைகௌஷதம் |
பக்த்யாத்யந்த ஹிதௌஷதம் பவபய
ப்ரத்வம்ஸநைகௌஷதம்
ச்ரேய: ப்ராப்திகரௌஷதம் பிப மந:
ஸ்ரீக்ருஷ்ண திவ்யௌஷதம் ||''

(சு—24)

அநுஸந்தேயம்

14. புண்ய ச்ரவண கீர்த்தந:

''மோக்ஷஸ்ய வ்ருக்ஷ மூலம் மோஹஜராதுர
மஹாரஸாயந ப்ரவரம் |

ஸகலகுசலைக க்ஷேத்ரம் கிங்கர ஸத்ய
தவ கீர்த்தநமச்ருத நிடம் ||''

(அச்யுத சதகம்—69)

15. த்ராதா

''கல்பஸ்தோமே ஽ப்யபாஸ்த த்விதர கதயோ
஽சக்தி தீ பக்தி பூம்நா
ரங்கேச ப்ராதிகூல்ய க்ஷரண பரிணமந்
நிர்விகாதாநுகூல்யா: |
த்ராதாரம் த்வாமபேத்யாச் சரணவரணதோ
நாத நிர்விக்நயந்த:
த்வந் நிக்ஷிப்தாத்ம ரக்ஷாம் ப்ரதி ரபஸ ஜுஷ:
ஸ்வப்ரவ்ருத்திம் த்யஜந்தி ||''

(ந்யாஸ திலகம்—12)

16. ஸர்வம் ஸஹ:

''த்யக்தோபாய வ்யபாயாந் ததுபய கரணே
ஸத்ரபாந் ஸாநுதாபாந்
பூயோ஽பி த்வத்ப்ரபத்யா ப்ரசமி தகலுஷாந்
ஹந்த ஸர்வம்ஸஹஸ் த்வம்
ரங்கிந் ந்யாஸாந்தரங்காகில ஜந ஹிததா
கோசர த்வந்நிதேச
ப்ரீதிப்ராப்த ஸ்வவர்ணாச்ரம சுப சரிதாந்
பாஸி தந்யா நநந்யாந் ||''

(ந்யாஸ திலகம்—13)

த்வய்யேகாஞ்ஜலி கிங்கரே தநுப்ருதாம்
நிர்வ்யாஜ ஸர்வம்ஸஹே
கல்யாணைகநிதி ரங்கநாத கமலா
காந்தே முகுந்தே ஸ்திதே |
ஸ்வாமிந் பாஹி தயஸ்வ, தேஹி, குசலிந்,
ஜீவ ப்ரபோ பாவயேத்
ஆலாபாந் அவலேபிஷு ப்ரலபிதும்
ஜிஹ்ரேதி ஜிஹ்வா மம ||''

(ந்யாஸ திலகம்—28)

பாஸ்கர:


''ஜயத் யாச்ரித ஸந்த்ராஸ த்வாந்த வித்வம் ஸநோதய: |
ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோம பாஸ்கர: ||''

(மஹாவீர வைபவம் என்னும், ரகுவீர கத்யம்)

மேலே கொடுக்கப்பட்டுள்ளவை யாவும் மாதிரிக்காக எடுத்துக் காட்டப்பெற்ற ஒரு சில சுலோகங்களே ஆகும். இவைபோன்று இன்னும் எத்தனையோ பல உள. குறிப்பாக, **ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில்** ஒவ்வொரு சுலோகமும் ஒவ்வொரு திருநாமத்துக்கும் வ்யாக்யானமாக அமைந்தது ஸூக்ஷ்மமாய் ஸேவிப்பவர்களுக்கு விளங்கும்படியாயுள்ளது.

ஒருமுறை திருப்புட்குழியில் விஷூசி ஏற்பட்டுப் பலர் இறக்க நேரிட்டபோது, ஸத்ஸம்ருத்தியை ப்ரபன்னனும் அபேக்ஷிக்கலாம் என்கிறபடிக்கு ஸ்ரீ தேசிகனே ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் பலதடவை பாராயணம் செய்து, ஜனங்களைக் காப்பாற்றியதாகவும், அந்த ஸமயத்தில்தான் **ஸ்ரீ ஸுதர்சநாஷ்டகமும்** ஸ்ரீ **ஷோடசாயுதஸ்தோத்ரமும்** ஸ்ரீ ஸ்வாமி திருவாய்மலர்ந்தருளியதாகவும் பெரியோர் பக்கலில் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஆகவே, இப்படி நம் ஆழ்வார்களும், பூர்வாசார்யர்களும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் போற்றி உகந்து பாராயணம் செய்து உஜ்ஜீவித்ததுபோலே, நாமும் அந்த எம்பெருமானின் திவ்ய கருணாகடாக்ஷத்திற்குப் பாத்திரமாம்படிக்கே ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை அன்றாடம் பாராயணம் செய்து உய்யும் வகையில் வழிவகுத்துக் கொள்வோமாக.




ஏழைச் சிறு வியாபாரிகளிடம் பேரம் பேசாதீர்கள் !

"பாலவ்ருத்தாதிபி: ப்ராப்தம்
ஸஞ்சிகாயாம் ததாऽऽஹ்ருதம் |
ததி சாகாதிகம் ப்ராஜ்ஞை:
நாந்தோலீகரணம் க்ஷமம் ||"

—அத்ரி ஸம்ருதி

பாலர், கிழவர், பெண்கள் முதலியவர்களால் கொணரப் பட்டதும், கூடை தலைச்சுமையில் கொண்டுவரப்பட்டது மான தயிர், கரியமுது, கீரை முதலியவைகளை அறிவாளிகள், பேரம் பண்ணக்கூடாது என்று அத்ரிஸம்ருதியில் சொல்லப் பட்டது.



(*இந்தச் சுலோகத்தைக் கொடுத்து உதவியவர் ந்யாய வேதாந்த வித்வான் பையம்பாடி சேட்லூர் ஸ்ரீ. உபய வே. வா. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி, Principal, Sanskrit College, Pettai, Madras-56).

அன்னதானமும் ஆயிரநாமமும்

ஸ்ரீ. உ. வே. கீழாத்தூர்–ஸ்ரீநிவாஸாச்சாரியர்
ஸ்ரீகார்யம், லிப்கோ.

ஆதி புருஷனான ஸ்ரீமந் நாராயணன் சிருஷ்டித் தொடக்கத்தில், தன் ஸங்கல்பத்தாலே தனது நாபிக் கமலத்திலிருந்து பிரும்மாவைத் தோற்றுவித்தான்.

பிரும்மாவும் "தாதா யதா பூர்வ மகல்பயத்" என்ற வேத வசனத்திற்கேற்ப,முந்தைய கல்பத்தில் இருந்தபடியே ஸமஸ்த ஜீவராசிகளையும் மனிதர்களையும் தேவர்களையும் படைத்தான். பிறகு, இந்த ஜீவர்களுக்கு ஜீவனோபாயமாக யக்ஞங்களையும் அவர்களுடன் கூடவே படைத்தான்.

அவ்வாறு படைத்து, மனிதர்களைப் பார்த்து, "ஹே மனிதர்களே! நீங்கள் இந்த யக்ஞங்களால் தேவர்களைப் பூசியுங்கள். தேவர்கல் அவைகளால் மகிழ்ந்து உங்களுக்குத் தேவையான மழை, மக்கள், மாக்கள் முதலியவைகளைத் தருவார்கள். பிறகு, அவைகளால் ஏற்படும் சுகங்களில் ஒரு பகுதியைத் தேவர்களுக்கும் அளித்துக்கொண்டு நீங்களும் அநுபவித்துக் கொண்டு சுகமாக வாழுங்கள்" என்று ஆணையிட்டார். இந்தப் பொருள்பட ஸ்ரீமத் பகவத்கீதையில் பகவான் சொல்வதாவது:

"ஸஹ யஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: |
அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷவோஸ்த்விஷ்ட காமதுக்‖"
தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: |
பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத‖"

(அத். 3. சு. 10—11)

இதனால் விளங்குவது யாதெனில்;

ஒவ்வொருவனும் தான் முந்திய ஜன்மங்களில் செய்த தானதர்மங்களுக்கேற்ப—புண்ய பாவங்களுக்கேற்ப—அதற்குத் தக்க அளவில் செல்வமும் வசதியும் பெறுகிறான். அவ்வாறு அவன் பெற்றுள்ள செல்வத்திற்கும் வசதிக்கும் அநுகுணமாகத் தான் அநுபவிக்க விரும்புபவைகளை மானஸிகமாக முதலில் பகவானுக்கு அர்ப்பணிக்க வேண்டும், பிறகு அதிதி

களுக்குப் பகிர்ந்து தந்தபின் தானும் அனுபவிக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆகவே, தனக்கே என்று எவனும் எதையும் உண்ண லாகாது. அப்படி உண்பது ஊண் அல்ல: அது பாவமே என்பதை,

''கேவலாகோ பவதி கேவலாதீ''

என்பதாகக் கூறுகிறது வேதம்.

கீதையும் :

''புஞ்ஜதே தே த்வகம் பாபா:
ய பசந்த்யாத்மகாரணாத்'' என்கிறது.

'தனக்கென்றே சமைத்து உண்பவர்கள் பாவத்தையே புசிக்கும் பாவிகள்' என்று கூறுகிறது. இந்த உண்மையை உணர்ந்தே உலையில் அரிசியைப் போடும்போது பெண் மணிகள் **''ஸ்ரீ ராமனுக்கு'' ''ஸ்ரீ கிருஷ்ணனுக்கு''** என்று சொல்லிக்கொண்டே அரிசியை உலையிலிடும் நல்ல வழக்கம் நம் நாட்டில் இருந்து வந்தது. அத்தகைய பகவதர்ப்பணம் செய்து வந்த நாட்களில் நாட்டில் நெய்யாறு, பாலாறு வழிந் தோடியது. உழக்கரிசிக்குக் கிழக்கு மேற்கைப் பார்க்கும் இன்றைய அவலநிலை இல்லை. யாரை ஏமாற்றி நாம் மட்டும் தனியே தின்றுவிடலாமென்ற சுயநல மனப்பான்மையும் அன்று இல்லை. நிற்க;

பதினெண் புராணங்களிலும், பதினெண் ஸ்மிருதிகளி லும், வேதங்களிலும் அதிதிஸத்காரமென்ற அன்னதானத் தைப் பற்றிப் பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. சோதானம், பூதானம், கன்யகாதானம், வித்யாதானம் முதலான பலவித மான தானங்களிலே **அன்னதானத்திற்குரிய சிறப்பு வேறு எந்த தானத்திற்கும் கிடையாது** என்று புண்ணிய தத்துவ நூல்கள் பறை சாற்றுகின்றன.

''அந்நதாநாத் பரம் நாஸ்தி ந பூதம் ந பவிஷ்யதி |
ஹஸ்த்யச்வ ரத தாநாநி தாஸீதாஸ க்ருஹாணி ச ||

அந்நதாநஸ்ய ஸர்வாணி கலாம் நார்ஹந்தி ஷோடசீம் |
க்ருத்வாபி ஸுமஹத்பாபம் ய:பச்சாதந்நதோபவேத் ||
ஸர்வபாபவிநிர்முக்தோ லோகாநாப்நோதி சாக்ஷயாந் ||

(அக்னி புராணம் அத்-211-சு-44-46)

இதற்கு ஒரு சிறிய லௌகிகமான காரணம் யாதெனில் ;

எந்த தானத்திலும், அந்த அந்த தானத்தைப் பெறுபவனும் திருப்தி அடையவேண்டும். அதாவது; தானமிடுபவன் தானம் வாங்குபவனைத் திருப்தி செய்விக்க வேண்டும். கோதானம். பூதானம் முதலியவைகளைப் பெறுபவன் "இன்னும் கொஞ்சம இருந்தால் தேவலை" என்று தன் அதிருப்தியை மனத்திலாவது நினைப்பான். ஆனால், வயிறு நிறைய அன்னம் புசித்தவன், "போதும், போதும்" என்பானே தவிர "இன்னும் தேவை" என்று கூறமாட்டான். ஆகவே, தானம் செய்பவன், தானம் பெறுபவன் இருவருக்கும் திருப்தியைத் தரும் மிகச் சிறந்த தானம் இந்த அன்னதானம ஒன்றே யாகும். இத்தகைய மஹிமை பொருந்திய அதிதி ஸத்காரமும் அன்னதானமும் நம் நாட்டில் குறைந்துவிட்டன. அதனால் தானோ என்னவோ, சாப்பாட்டுப் பிரச்னையே மக்களுக்குப் பெரும் பிரச்னையாகிவிட்டது.

ஆகவே, நம் முன்னோர்கள் வாழையடி வாழையாக அனுஷ்டித்து வந்த **அன்னதானமென்னும் புண்ணியச் செயலை மறுபடியும் நாம் தொடங்க வேண்டும்.** அதைச் செய்யாமல் நமக்கு நன்மை ஏற்படாது. அன்னதானமென்பது அன்னத்தின் விதை. பசித்தவன் ஒருவனுக்கு இடும் அன்னம் ஆயிரம் ஆயிரம் மடங்காக வளர்ந்து உலகவாழ்க்கை வசதிகளைத் தரும். "இறைக்கிற கிணறு சுரக்கும்" என்பது மூதுரை. கிணற்றில் ஊறிவரும் தண்ணீர் ஒரு மட்டத்தில் வந்து நின்றுவிடும். அந்தத் தண்ணீரையெல்லாம் இறைத்து விட்டால் மறுபடியும் அந்த அளவிற்குத் தண்ணீர் சுரந்து விடும். அவ்வாறு மேன்மேலும் இறைக்க இறைக்கச் சுரக்கும் தண்ணீரை மற்றோர் இடத்தில் கொட்டிப் பார்ப்போமானால் அது பன்மடங்காகிப் பயிர்களை வளர்க்கும். அம்மாதிரிப் பசித்த வயிற்றிற்கு இடப்படும் அன்னம் அதைப் புசிக்கும் ஜீவனுடைய வாழ்த்துதலாலும், அவனுக்கு அந்தர்யாமியாக விளங்கும் எம்பெருமானுடைய அருளாலும் பன்மடங்காகப் பெருகுமென்பதில் சிறிதும் ஐயம் வேண்டா.

அன்னதான முறை

இத்தகைய அன்னதானத்தைப் பலருக்கோ, அல்லது; வசதிக்கேற்ப ஒருவர் இருவருக்கோ தினந்தோறும் செய்வதென்ற முறையை ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டும்.

மேலும், இதை லௌகிக முறையில் எவ்விதச் சடங்குகளும் இல்லாமல் தினந்தோறும் அன்னதானம் செய்வது என்ற வகையை மேற்கொள்வதும் ஒன்று.

ஆயிர நாம முறை

மற்றொரு முறை சாஸ்திரீயமான முறை. ஆயிரநாம முறை என்று இதைச் சொல்லலாம். அதாவது;

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் என்ற ஸ்தோத்திரத்தில் பகவானுக்கு ஆயிரம் நாமங்கள் (பெயர்கள்) உள்ளன அந்த ஆயிர நாமங்களில் ஒவ்வொரு நாமத்தையும் நாம் போஜனம் செய்விக்க விரும்பும் அந்தணருக்குப் பெயரிட்டு வரித்து அன்ன தானம் செய்யலாம். இந்த முறையின் சிறப்பைப் பற்றிக் கீழே காண்க:

ஸ்ரீ :

ஸஹஸ்ரநாமமும்
ஸஹஸ்ர ப்ராஹ்மண போஜனமும்

"ஏகோ விஷ்ணு : மஹத்³பூ⁴தம்
ப்ருத²க்³பூ⁴தாந்யநேகச : ||
த்ரீந் லோகாந் வ்யாப்ய பூ⁴தாத்மா
பு⁴ங்க்த்தே விவபு⁴க்³ வ்யய:"||

[மஹா விஷ்ணு என்பவர் ஒருவரே மஹத்தான சொரூபம் உடையவர். மற்ற ஜீவ சொரூபங்கள் தனித்தனியாகப் பல உள்ளன. அந்த ஜீவ ஸ்வரூபங்கள் எல்லாவற்றிலும் (அந்தர் யாமியாகப்) பரவி இருந்து, சாசுவதமான அந்த பரமாத்மா அனைத்தையும புசிக்கிறார், அதாவது, அனுபவிக்கிறார் என்பது அர்த்தம்.]

இந்த சாஸ்திர வசனத்திற்கேற்ப, பகவான் ஸகல ஜீவ ராசிகளிலும் அந்தர்யாமியாக இருக்கிறார் என்பது விளங்கு கிறது. அவர் ஸகல ஜீவராசிகளிலும் இருந்தாலும் குறிப் பாகச் சிலரிடம் விசேஷமாக அவருடைய ஸாந்நித்யம் இருக் கிறது என்பதை,

யத்³ யத்³விபூ⁴தி மத்⁴ ஸத்வம்
ஸ்ரீமத் ஊர்ஜிதமேவ வா |
தத் ததே³வாவகச்ச த்வம்
மம தேஜோ஽ம்சஸம்ப⁴வம் | |

ஸ்ரீமத் பகவத் கீதை அத். 10 சு. 41

என்று பகவானே விளக்கியுள்ளார். ஆகவே, வேத வித்துக்களாகவும் ஸதாசாரஸம்பந்நர்களாகவும் உள்ள பிராம்மண ச்ரேஷ்டர்களிடம் பகவானுடைய ஸாந்நித்யம் விசேஷமாக உள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்தக் காரணத்தைக் கொண்டே ஸகலவிதமான சுபாசுப கர்மங்களிலும், சாந்தி கர்மாக்களிலும் ததீயாராதனத்துக்கு விசேஷமானப் ப்ராதாந்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்னசாந்தி யென்ற பிராம்மண போஜனமில்லாமல் எந்த கர்மாவும் பூர்த்தியாகாது. அது பகவானுக்குத் திருப்தியளிக்காது என்பதை நாமெல்லோரும் உணர வேண்டும்.

நிற்க, ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை முறைப்படி பாராயணம் செய்விப்பவர்களும் ததீயாராதனத்துடன் அதைப் பூர்த்தி செய்விக்க வேண்டும்.

தவிர, சக்தியுள்ளவர்கள் ஒரே நாளில் ஆயிரம் பிராம்மணர்களை எழுந்தருளச் செய்து, அவர்களை 'விச்வம்,விஷ்ணு:'' முதலான ஸஹஸ்ர நாமத்திலுள்ள ஒவ்வொரு பெயர்களாலும் பெயரிட்டு வரித்து, அவர்களுக்கு அர்க்ய, பாத்ய, ஆசமநீயங்களை ஸமர்ப்பித்து, பக்தியிடன் வரவேற்று, பக்ஷ்ய பரமான்னங்களுடன் இஷ்டான்ன போஜனம் செய்விக்கவென்ற ஸஹஸ்ரப் பிராம்மண போஜன முறை நம் நாட்டில் முற்காலத்தில் வழக்கத்திலிருந்தது. தீராத வயிற்று வலி, தீராத நோய்களெல்லாம் இந்த ஸஹஸ்ரப் பிராம்மண போஜனத்தால் நிவ்ருத்தியாகுமென்று கர்மவிபாகம், சாந்திரத்னகரம் என்ற நூல்கள் கூறுகின்றன.

ஆனால், இக்காலத்தில் ஒரே நாளில் ஆயிரம் பிராம்மணர்களை ஓரிடம் சேர்ப்பதோ, அவர்களுக்குப் போஜனம் செய்விக்கத் தேவையான வஸ்து சாமக்ரியைகளைச் சேகரிப்பதோ அவ்வளவு சுலபமான காரியமன்று.

ஆகவே, காலத்திற்கேற்றபடியும் அவரவர்கள் சக்திக்குத் தக்கபடியும் தினமும் ஒரு பிராம்மணரை வரவேற்று, அவரை முறையே (1) விச்வம் (2) விஷ்ணு: என்ற ஸஹஸ்ரநாமப் பெயரால் ஆவாஹனம் செய்து, திருவடிகளை ஜலத்தால் அலம்பி, தலையில் புரோக்ஷித்துக்கொண்டு, அவரைச் சாப்பிடச் செய்து, அவருக்குத் தாம்பூல தக்ஷிணைகளை ஸமர்ப்பித்து அனுப்பிய பின், குடும்பத்தாருடன் தான் புசிக்க வேண்டும். இவ்வாறு அனுஷ்டித்தால் வீட்டில் தன தான்ய ஸம்பத்துக்கள் மேன்மேலும் விருத்தியாகும்.

இந்த முறையில் தினந்தோறும் ஒரு பிராம்மணருக்குப் போஜனம் அளிக்க வசதியில்லாதவர்கள், வாரத்தில் ஒரு நாள்—அதாவது; புதன்கிழமை யன்று (புதனுக்கு விஷ்ணு அதிதேவதை) மேற்கண்டவாறு அநுஷ்டித்து ஜன்ம விரத மாக மேற்கொள்ளலாம்.

மற்றும், ஞானத்திலும், ஆசாரத்திலும் சற்றுக் குறைந்த வர்களானாலும் ஏழைகளாக இருந்தால் அந்தப் பிராம்மணர் களையும் வரித்து விரதத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

குறிப்பு :—அந்தணரல்லாத மற்றவர்களுக்குப் போஜனம் செய்வித்தல் சாஸ்திரீய முறையாகாது. அது பசித்தவருக்கு அன்னமிடுதல் என்ற சாதாரண லௌகிக முறையாகும் என் பதைக் கவனிக்க வேணும்.

இந்த மனித வாழ்க்கையில் நம் வருங்காலத்திற்காக எத்தனை எத்தனையோ செய்துகொள்கிறோம். உத்தியோகம் செய்பவர்கள் மாதா மாதம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரா விடண்ட் பண்ட் இன்ஷ்யூரன்ஸ் போன்றவைகளில் பணம் சேமித்து வைக்கிறார்கள். அநேகமாக எல்லோருமே தம் முடைய பிற்காலத்திற்காக ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த முறைகள் மிகமிக அவசியமானவை என்பதில் ஐயமில்லை.

இதேமாதிரி ஒவ்வொரு கலியாணமான தம்பதிகளும் தம் முடைய தற்கால-வருங்கால வாழ்க்கை பகவானுடைய அரு ளால் ஸகல வசதிகளுடன் அமையப் பெறுவதற்கும், அத் துடன், வெகு நாட்கள் வாழ்ந்து விருத்தாப்பிய சிரமத்தை அனுபவித்த பின், பகவானுடைய கிருபையால் அவரவர்கள் செய்த புண்ணியத்திற்கேற்றபடி மோக்ஷத்தையோ, புண் ணிய லோகங்களையோ, ஸகல வசதிகளும், பக்தியும் பொருந் திய மறு பிறவியையோ பெறுவதற்கும் முன்னேற்பாடுகள் செய்துகொள்கிறது மிக்க அவசியமாகும். அந்த ஏற்பாடுகளில் ஸஹஸ்ரப் பிராம்மண போஜனம் என்பதும் ஒன்று என்று கருத வேண்டும்.

ஆனால் இந்த ஸஹஸ்ர பிராம்மண போஜனத்தை ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ—ஏன் ஒரு வருஷத்திலும் கூட—செய்துவைக்க முடியாத காலம் இது. ஆனும் சிறிது முன் யோசனையுடன், சௌகரியப்பட்ட தினங்களில் எல்லாம் ஒரு பிராம்மணருக்காவது அமுது செய்விப்பது என்று திட்ட மிட்டுச் செய்தால் தாம்பத்ய வாழ்க்கை ஆரம்பித்த சில வருஷங்களுக்குள்ளாவது இதைச் செய்து முடிக்கலாம்.

ஆகவே, புதிதாக கலியாணமான தம்பதிகள், வருங்காலத்திற்காக அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஏற்பாடுகளின் பட்டியலில் சேர்த்துக்கொண்டு தங்களது வாழ்க்கை தொடங்க ஆரம்பித்த நாட்களிலிருந்தே தொடங்கி புண்ணியத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது; **ஸஹஸ்ரநாம அன்னதான டயரி** என்று ஒரு நல்ல நோட்டுப் புத்தகத்தை அழகாக பைண்டு செய்து, கீழே மாதிரி காண்பித்துள்ளபடி முழு விவரங்களைச் சொல்லும்படிக்கே அந்தந்த நாமாக்களைக் குறிப்பிட்டு, ச்ரத்தையுடன் ஒவ்வொரு அன்னதானமும் முடிந்தவுடன் எழுதி வருவது நலம்.

	பகவந்நாமா	அமுது செய்விக்கப்பட்ட ஸ்வாமியின் திருநாமம்	தேதி
1	விச்வம்	ஸ்ரீ உ. வே. கி. பூவராஹாச்சாரியார்	1-2-1987
2	விஷ்ணு:	ஸ்ரீ உ. வே. தி. ந. ச. ஸ்ரீநாராயணாச்சாரியார்	3-2-1967
3	வஷட்கார:	ஸ்ரீ உ. வே. கந்தாடை நா. ரங்கராதாச்சாரியார்	6-2-1967
⋮			
1000	ஸர்வ ப்ரஹரணாயுத:	ஸ்ரீ உ. வே. சதுர்வேத சதக்ரது ரா. ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி	1-1-1387

'சாந்தி ரத்னாகரம்' என்ற கிரந்தத்தில் முதல் பாகத்தில் 'ஸஹஸ்ரபோஜநவிதி' 'ஸஹஸ்ரபோஜந ப்ரயோகம்' என்று ஸஹஸ்ரபோஜனம் செய்விக்க வேண்டிய முறைகள் இரண்டு சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த முறைகளில் ஏதாவது ஒன்றில் சொல்லியபடி, விஷயமறிந்த ப்ருஹஸ்பதிகள் மூலம் இந்த விரதத்தை நடத்த வேண்டும்.

ஆகவே, ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் மகிமையை உணர்ந்த ஆஸ்திகர்களான நாமெல்லோரும் பகவானுடைய ஆயிரம் நாமங்களால் நம் வாழ்நாட்களுக்குள் ஆயிரம் பிராம்மணர்களைப் போஜனம் செய்வித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாவோமாக!



Sri Vedantha Desika

(1268 A.D. — 1369 A.D.)

by Vallimedu Veeravally
Veeraraghavachary

[Retd. Examiner of Accounts of
Municipal Corporation,
Secunderabad-26 (A. P.)]

Note :—To enable non Tamil Asthikas also to understand and appreciate the greatness of this versatile Acharya, this English article is given in this book)

Greatness of Sri Vedanta Desika

Sri Vedanta Desika was foremost in introducing the three language formula in Bharatha Varsha. He has written works in Prakrith, Sanskrit and Tamil. For his works in prose he adopted Manipravala, mixture of Sanskrit and Tamil words with Tamil alphabets supplemented by Sanskrit (Grantha) alphabets and they were for the benefit of the Asthikas of the North and South.

His Teachings

His teachings are essentially based on Prasthanatraya viz., Upanishads, Gita and Brahma Sutras. No doubt these were differently interpreted by Sri Sankara, Bhagawad Ramanuja and Sri Madhwacharya, due to the condition that existed at their respective periods but Nigamantha Maha Desika by Samanvaya (by reconciliation) overcame the so-called difference and wrote and proved the indisputability and soundness of Sri Ramanuja's doctrine.

He belonged to the order or Sriman Nathamuni, the first Pontiff of Sri Vaishnavism, Yamunamani (Alavandar) and Ramanujamuni (*1017—1137* A.D.). He (*1268—1369* A.D.) by his Granthas (works) in the three languages in prose poetry and gadyas put the teaching handed over to him by this Acharya Parampara in such a way that both the learned and the laymen could follow and put them into practice. Whereas for the purpose of attaining Moksha, final bliss that is brought about by Karma (action) Gnana (knowledge), and Bhakti (devotion) Yogas, he insisted on disciplined life based on the order of Society one belongs; for the persons unqualified for these he advocated Prapathi Yoga, doctrine of absolute self-surrender to God. This doctrine is as ancient as the Upanishads and the Gita has proclaimed it to be the final article of faith and is open to all and sundry without distinction of caste, creed or sex (Abhayam Sarva Boothebhyo).

Vedas of Sanskrit origin revealed by Rishis of Yore are interpreted by Alwars in Tamil, the regional language, in the light of their own mystic experience, in their Divya-Prabandhas. The commentary on the concluding portion of this is called Bhagavad Vishaya. The Visishtadvaita system draws inspiration from both and is therefore, known as Ubhaya (twin) Vedanta. Commentaries of Sri Ramanuja on Prasthanathraya known as Sri Bhashya (on Brahma Sutras), Vedantha Sangraha and Gita Bhashya were further commented upon, skillfully, by Sri Desika overcoming all criticisms that were put forward during the intervening period of a century and half. For the same reason he has produced commentaries on Bhagavad Vishaya. The essence of everything he has written in Tamil finds

place in his Sanskrit writings. **His magnum opus** in Manipravala is the Rahasyatrayasara though he has written several other minor Rahasyas with the object of explaining the truth.

The three Rahasyas emphasised by him are Ashtaakshara, Dvaya and Charamasloka. Proper understanding of them requires the guidance of an Acharya, Guru. The distinction between Achith, Chith and Eswara i.e., the destructable body, Atma in it, and Paramatma, Bhagavan must be clearly understood. Atma is again classified under three heads viz., Baddhas, Muktas and Nithyas. Baddhas are the common people having circle of rebirths depending on their Punya and Papa. Liberated souls who have attained eternal bliss are Mukthas and after attaining this stage they are treated as equal to Nityas in all respects. Nithyas are those who are eternally near Him enjoying complete bliss from which there is no coming back to the cycle of births and rebirths. For attaining a stage equal to Nithyas as indicated above, Supreme Bhakti (love to HIM) leading to Prapathi, self-surrender to HIM, is necessary. HE is Vasudeva, Indweller in all created beings. HE is Kesava, Lord of Brahma and Siva. HE is Sriman Narayana on Whom everything depends and from Whom this universe is created, maintained and adsorbed. He is Pundarikaksha, witnesser of everything and showering His Grace on the virtuous.

Kesava should not be equated with other Gods and not to be ignored. Nithyakarma and Naimithyaka Karmas i.e., routine code of conduct and action on specific occasions should be perfosmed meticulously, realising that the Indweller of the minor Gods referred

to in the course of such Karmas is the Supreme Vasudeva, Kesava, Narayana, Pundarikaksha, He being the Head of the Joint family of Gods. If it is not possible to perform them due to various physical disabilities one need not feel sorry and should abandon unauthorised means. Bhagawan in His Charama Slokas has assured that sins of such a Prapanna would be wiped out and that he would be led to Moksha, (Paramapada) by Him by His infinite mercy, prompted by the Purushakara (recommendation) of His inseparable Divine Sree Maha Lakshmi. Sriman-Narayana with His Divya Ayudhas and Pari Janas who are His part manifestation bestows on the Bhakta what all he desires.

Desika's Mandate

Desika wanted every one to do his duty and earn so that all his spare time and savings could be spent in the services of God. One should study Sree Bhashyam, (commentaries on Brahma Sutras) and also the other two subjects of Prasthana traya, Bhagavadvishaya and Rahasyatraya Sara, put them into practice and propagate them to others. Persons not able to do this should visit sacred places, provide money and means for the functioning of the temples and the charities there. If this is not feasible they should spend spare time on meditation in the light of Dvaya Manthra and on hearing and enjoying the history of the sacred souls and treat Bakthas with due respect. God considers disrespect or insult to His Bhakthas (devotees) as an act of inexcusable sin.

Emphasis on Idol Worship

Of the five roopas of Vasudeva viz., Para, Vyuha Vibhava, Subalayas or Archa and Antaryamin (in the

heart of every one), Desika laid more emphasis on worship in Subhalayas, He travelled widely all over India paying respects to Bhagawan in Archa Roopa (in Temples).

His Birth, Parentage, and High Erudition

He was born by the grace of Sreenivasa of Tirumalai on His Thirunakshatram Sravanam (on the concluding day of His holy festival, Brahmotsavam) in the month of Purattasi (Bhadrapada) in *1268* A.D. (This year the birthday falls on *2-10-1968*.)

He was named by his parents as Venkatanatha. He is considered an amsa of Ghanta (a hand bell in the sanctum sanctorum) of the Lord of the Seven Hills and he is also known as Ghantaavatara. Later in his life he visited the temple and engaged himself in His Kain-karyam, for a long time. While engrossed in his service to Seshachalapathy he wrote Daya Sathakam of *108* Slokas on His Grace. His services in this temple were continued by Brahmatantra Swatantra Swamy originally known as Veeravally Perarulalan of Koundanya Gothra.

Desika was born of high parentage, staunch followers of Ramanuja at Thoppul in Kancheepuram. He is also referred to as Thoppul Pillai. He finished his study of all sastras in both languages and Sampradaya Granthas under equally worthy Acharyas, before he was twenty. He has written several Granthas dedicated to Varadaraja and He was his personal Deity. In token of his work "Thirchchinna Malai" Varadaraja Bhagawan presented him one of his Thiruchchinnams and hence in this temple only one is used unlike two in other Temples. His son Varadacharya was his first disciple.

Securing the Grace of Lord Sri Hayagriva

At Thiruvaheendirapuram he secured the grace of Hayagreeva by his penance. He wrote his first work Sree Hayagreeva Sthothra here and he has referred to Him in several Granthas, as source of intuition. Idols of Sree Hayagreeva which Ramanuja obtained from Saraswathi, to be his personal Deity during his life-time, passed down through the line of disciples to Desika. Hayagreeva became his personal Deity (in addition to Varada) and Desika carried Them for his daily worship wherever he went. On one occasion Desika had no food offering to Hayagreeva and with very great reluctance he finished his day's pooja offering only water. A white horse, started consuming all the gram that was to be harvested in the fields of a Vysya gentleman of the locality. When Desika saw the commotion in the place due to the appearance of the white horse which was strange to them, he requisitioned some milk for Nivedana to the Deity in his possession and when the offering was finished the Divine Horse disappeared. White foams from His mouth dropped on the site in heaps of gram which He was consuming and the grams continued to remain silvery and that village is now known as "Vellimedu". This Hayagreeva Vigraha was passed on to Brahmatantra swamy and is now in Parakala Mutt, Mysore.

His several Stotras and Achievements

Earlier, while at Tiruvaheendirapuram he had his upasana of Garuda fulfilled. It was Sri Garuda Bhagawan who initiated the Hayagriva Mantra to Him and it was with the help of this Mantra that Sri Desika was able to have Darshan of Lord Sri

Hayagriva and obtain His grace in an abundant measure He composed Garuda Dandaka and Garuda Panchahasath in praise of Garuda Bhagawan. As Sree Rama and Lakshmana were saved from Nagapasa of Indrajit, Desika was saved from the deadly poisonous snakes that were set upon him by a snake-charmer instigated by his opponents, He was conferred Kavitharkika Simha for his scholarship and for his capacity resembling a lion in vanquishing his opponents in debates relating to religious matters

In this place the well which he later constructed in reply to a challenge for his title of Sarvathanthraswathantra, is well preserved along with the house in which he was staying here.

"Raghuveera Gadyam" besides other works was produced here.

At Chidambaram, he got the Pooja of Shree Govindaraja Swamy restored as it was then neglected owing to local religious rivalry.

He spent a major portion of his life-time at Srirangam imparting secrets of Sree Bashyam and other Sampradayic literature. With great tact he saved their commentaries from falling into the hands of the ethists who were upto destroy everything sacred to Asthikas. In appreciation of his service in strengthening the Sampradaya (and thereby pleasing Sree Ranganatha and the Divine Mother), Desika was conferred the title of Vedanthacharya and that of Sarwatanthraswatantra by Lord Sri Ranganatha and Goddess Ranganayaki respectively, and he composed here Ethiraja

Sapthathi, Bhagawadyana Sopanam, Dasavathara Sthothram. Sudarsana Ashtakam, Sankalpa Suryodhaya in reply to Prabhotha Chandrodaya, Paduka Sahasram in reply to Pada Kamala Sahasram, Yadhavabhyudayam in reply to Ramabhyudayam Hamsa Sandesam, Subhashithaneevi and other granthas in the form of message to his followers far off as also Anushtana Granthas as Sree Vaishnava Dinachari, Ahara Niyamam, Tiru Aarathanakrama, Paramapada Sopanam and several other works.

He visited in this way several Divya Desas spreading the Doctrine of self-surrender, writing treatises on the three Rahasyas and meeting the criticisms put before him He found no differences in the meanings of the texts, though views taken on the texts may differ. Procedural differences, might have crept in due to conditions existing in the region, time and changed circumstances. Such differences are bound to occur and are approved by sastras. But quarrels arise only when denunciation or rights and privileges are apprehended. These were set right by him appealing to the common-sense of the concerned individuals. For the ignorant ones Desika put before them truths in simple Granthas. For the learned ones he has written works with exhaustive commentary quoting profusely from the Sruties, Smrities, Puranas, Ithihasas, Divya Prabandas and so on. He convinced those of different philosophical views that there can be no two truths and how a particular emphasis given by an Acharya due to the then existing environments had become obsolete; and

by his Samanvaya (reconciliation) of various common Texts, he won over several to his fold winning for himself the title of Kavi Tharkika simha.

His high sense of detachment (Vairagya)

Desika acquired no wealth. He lived on "Uncha Vrithi" i.e., from materials contributed to him for his daily use by his Sishyas and other worthy Grahasthas. Knowing this, Vidyaranya, his Sahapati (Class-mate) offered to introduce him to the Vijayanagara king in whose court he was himself Asthana Vidwan and secure for him costly presents. He replied him in a collection of 5 slokas, known as Vairagya Panchakam, that he was in no need and that though he had neither ancestral property nor an acquired one, he had his invaluable property at the top of the Hill shrine at Kancheepuram in the shape of Lord Sri Varadaraja which was acquired by the Grandfather of the Universe, viz., Lord Sri Brahma.

On a certain occasion, when Desika was approached by a Brahmachari (bachelor) for material help for his marriage he invoked the grace of Sri Maha Lakshmi bv his Sri Stuti when it began to shower Kanaka Dhara (Shower of pieces of gold). The Brahmachari was content with the gold, just sufficient for his purpose but Desika insisted on his taking away the entire riches bestowed by Sri. These show that Desika was renowned not only for his Gnana, but for his Vairagya as well.

His Works

He has written 32 Sthothras, 8 Kavyas, 24 Anushtana Sastras, 32 Rahasyas, 24 Prabandas and one on Bhagavad Vishayam totalling 121 works in the four languages with identity of meaning and message. No new doctrine was created and what was coming down, was put down in various manners as situation necessitated. All of them are for the betterment of the people.

Successive generation of Acharyas that followed Sri Desika

His illustrions career ended in 1369 A. D. after a Sathamanam (century) and a little more. Hints for his life sketch are found scattered in his works. Biographies were written by his son Varadacharya, Prathivathi Bhayankaram Annan, and Brahmatantra Swamy II abridged by his successors and this article is based mostly on the last one.


For the propagation of the Doctrine coming down from Bhagawan, through a chain of successive Acharyas e.g., Nathamuni, Yamunacharya and Ramanuja, Desika left behind him a number of worthy Sishyas with definite instructions to propagate the Siddhantham, give Panchasamskara and Bharanyasa to the disciplines of the fold and train at least one successor to maintain the chain of Acharyas without a break.

One such institution is the Parakala Mutt already referred to. Successive Saints of high erudition and scholarship has adorned the Holy Acharya Peetam and the present Jeer is the thirty fourth Pontiff in this line.

This also branched out from Ghatikasatham Ammal (Varadacharya) immediate disciple of Brahmatanthra Swamy I. Conspicuous in this line was Gopala Desikan. It is now represented by Srimad Andavan of Peria Ashramam and Swamy of Chinna Ashramam of Srirangam besides several Grahastas.

Yet another institution was originated by Satakopacharya of Thiru narayanapuram. He was very learned and acquired proficiency in the Sampradhaya from various sources. He had kalakshepam under Ghatikasatham Ammal (Varadacharya) for Sree Bhashyam, Bhaga wad Vishayam and Rahasyathrayasara. Under the Divine grace of Lord Sri Lakshmi Narasimha of Ahobilam he assumed Sanyasi Asrama as the First swamy of Ahobila Mutt under the Holy Name Sri Audivan Satkopa Swamy. This institution is having a successive line of illustrious Acharyas and the present Saint is the forty fourth Pontiff in this line.





ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப **ஸ்ரீ வேதாந்த தேசிக யதீந்த்ர மஹாதேசிகன்.**

(44வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர்)

ஸ்ரீ :

நல்லொழுக்கத்துக்கான அறிவுரைகள்

(குறிப்பு : ஸ்ரீமத் அஹோபிலமடத்தின் ஆதரவில் ''ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா'' என்னும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய மாத சஞ்சிகை வெளிவருவது ஆஸ்திகர்கள் அறிந்ததே. அதில் மாதந்தோறும் ஆரம்பப் பகுதியில் ''ஸ்ரீ அழகிய சிங்கரின் அருள்மொழிகள்'' என்ற தலைப்பின் கீழ், பொன்னெழுத்துக் களில் பொறித்து வைக்கத் தக்க உபதேச மொழிகளை ஸ்ரீமத் அழகியசிங்கர் அருளிவருகிறார். மிகச் சத்துள்ள உணவையும் எளிதில் ஜீரணமாகும்படிப் பக்குவப்படுத்தி, தாய் சிசுவுக்கு ஊட்டுவதுபோல், மிக உயர்ந்த தத்துவம் அடங்கிய கருத்துக் களையும் சுவை குன்றாமல் யாரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் எளிய நடையில் அறிவுரைகள் அருளி வருவது இப்பகுதியின் சிறப்பான அம்சமாகும். இவைகளை அடிப்படையாகக் கொண்டும் இன்னும் சில பெரியோர்கள் தொகுத்துள்ள குறிப்புகளின் உதவியைக் கொண்டும் கொடுத்துள்ள சில அறிவுரைகளை நம் ஸ்ரீ வைஷ்ணவ இளைஞர்கள் பயன்பெறும் வண்ணம் இங்கு கொடுத்துள் ளோம்.)

1. தேசிக பக்தர்களான இளைஞர்களே! விழிப்படை யுங்கள். ஒன்றுகூடி நம் ஆசார்ய வள்ளலைப் புகழ்ந்து பணியுங்கள்.

2. ஸ்வாமி தேசிகனின் பெருமையையும் அவர் நமக்குச் செய்துள்ள பேருபகாரங்களையும் அடிக்கடி நன்றிப் பெருக் குடன் நினைத்து அவரைத் துதி செய்யுங்கள்.

நீங்கள் அவசியமாகச் செய்தே தீரவேண்டியவை

1. உங்கள் க்ருஹங்களில் ஸ்ரீமத் ராமாயணம் போன்ற இதிஹாஸ புராணக் கிரந்தங்களையும், ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள கிரந்தங்களையும் எழுந்தருளப் பண்ணி பூஜித்து வரவேண்டும்.

2. ஸ்வாமி அருளிச் செய்துள்ள ஸ்தோத்ரங்களைப் பெரியோர்களிடம் அர்த்தத்துடன் கேட்டறிந்து மனப் பாடம் செய்ய வேண்டும்.

3. ஸ்வாமி தேசிகனின் பெருமையை விளக்கும் பின் வரும் சுலோகங்களை மட்டுமாவது தினந்தோறும் அனுசந்தித்து வரவேண்டும்.

ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்தது

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிமப்யகதஸ்ப்ருஹம் |
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேசாஹ்வயம்
மஹ : ||

ஸ்ரீ அரசாணிப்பாலை வேங்கடாத்வரி அருளிச் செய்தது

''ஆசாமீகர பூதரேந்த்ரசிகராத்
ஆசாபி லங்காபுராத்
ஆசார்யாந் அகிலாந் ப்ரணம்ய சுபயா
யாசாமி வாசாநயா |
தத்தாத்ருக் கவிதாஸு தர்க்கஸரணௌ
தந்த்ரே ததாந்தே ச்ருதே:
த்ருஷ்ட : கிம் ஸம ஆகமாந்த குருணா
சத்யம் சபே கத்யதாம் ||''

செய்யக் கூடாதவை

1. பெரியோர்களுக்கு எதிராகக் காலை நீட்டிக் கொண்டோ, இதர விதங்களிலோ பெரியோர்களை அவமதிக்கக் கூடாது.
2. நன்மை செய்வதற்குத் தயங்கக் கூடாது.
3. கர்வத்திற்கு இடம் தரக் கூடாது.
4. அங்கஹீனர்களையும், புத்தியில் குறைந்தவர்களையும் இகழக் கூடாது.
5. பிறருடைய தூஷணைகளையும் வசவுகளையும் பாராட்டிப் பழிவாங்கக் கூடாது.
6. பிறருக்குத் துன்பம் விளைவிக்க நினைக்கக் கூடாது.
7. பிறரைப் பற்றிக் கோள் சொல்லக் கூடாது.

8. தீய எண்ணத்தின் மூலமோ, கொடுஞ் சொற்கள் மூலமோ, தீச் செய்கைகள் மூலமோ பிறருக்குத் தீங்கு இழைக்கக் கூடாது.

9. ஒருவன் துஷ்டன் என்பது நன்ருகத் தெரியுமாணுல் அவனுடன் பழகக் கூடாது.

10. பிறருடைய பொருளை அபகரிக்கக் கூடாது.

11. பிறரைத் திருப்தி செய்வதற்காகக் கூட பொய் சொல்லக் கூடாது.

12. வீண் சண்டைக்குப் போகக் கூடாது.

13. பிறருடைய குறைகளை மிகைப்படுத்தக்கூடாது.

14. பிறர் விரும்பமாட்டார்கள் என்பது தெரிந்தாலும், அவசியமாணுல், அவர்களுக்கு நன்மைதரும் புத்திமதிகளை எடுத்துக் கூறத் தயங்கக் கூடாது.

15. நம்முடைய ஸேவையையும் தொண்டையும், உலகம் பாராட்டவில்லையே என்று துக்கப்படக் கூடாது.

அவசியம் செய்ய வேண்டியவை

1. ஆழ்வார், எம்பெருமாஞர், ஸ்வாமி தேசிகன் ஆகியோரை ஆழ்ந்த பக்தியுடன் வழிபட வேண்டும்.

2. தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்ளவேண்டும். (இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தான் பெருமை கொள்வது தவறல்ல என்பது கவனிக்கத்தக்கது.)

3. ஆசார்யனிடம் பக்தி அதிகரிக்க வேண்டும். அவர் போதிப்பதை நன்கறிந்து அதற்கேற்ப ஒழுக வேண்டும். அவருடைய பெருமையையும் புகழையும் பரப்ப முயல வேண்டும்.

4. இரவில் படுக்கைக்குச் சென்றபிறகும் கலையாமல் இருக்கும்படித் திருமண் காப்பை அணியவேண்டும்.

5. ஸந்த்யாவந்தனம் முதலிய நித்யகர்மானுஷ்டானங்களை வேளை தவருமல் முறைப்படி சிரத்தையுடன் செய்து வரவேண்டும்.

6. பற்றற்ற தன்மையுடனும், வைராக்யத்துடனும் வாழ்க்கை நடத்தப் பழகி வரவேண்டும்.

7. ஆசார்யனிடம் உபதேசம் பெற்ற மந்த்ரங்களைப் பக்தியுடன் ஜபித்து வரவேண்டும்.

8. மந்த்ரங்களையும், மந்த்ரார்த்தங்களையும் முயற்சி செய்தாவது மறைத்து வைக்கவேண்டும்.

9. நாம் செய்யும் நற்காரியங்கள் எல்லாம் பகவத் ப்ரீதிக்கே என்ற எண்ணத்துடன் அவற்றின் பலனை எல்லாம் அவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும்.

10. விநயத்துடன் பேசவேண்டும்; விநயத்துடன் பழக வேண்டும்.

11. கோயில், நான்கு ரஸ்தாக்கள் ஸந்திக்கும் இடம், மங்கள வஸ்துக்கள் இவைகளை ப்ரதக்ஷிணமாகச் சுற்றியே செல்ல வேண்டும்.

12. எல்லோரிடமும் அன்புடனும் சிநேகத்துடனும் பழக வேண்டும்.

13. பயங்காளிகளுக்கும், பலமற்றவர்களுக்கும் தைர்யமளித்து உற்சாகப்படுத்த வேண்டும்.

14. ஸத்தியமே எப்போதும் ஜயிக்கும் என்பதை உணர்ந்து எப்போதும் உண்மையே பேசவேண்டும்,

15. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற மனப்பான்மை ஏற்பட வேண்டும்.

16. எந்த ஒரு நல்ல காரியத்திற்காகவும் வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு முன் பெரியோரை நமஸ்கரிக்க வேண்டும்.

17. வீட்டிற்கு வருகை புரியும் பெரியோர்களை நமஸ்கரிக்க வேண்டும்.

18. அடிக்கடி பகவந்நாம ஸ்மரணை செய்யவேண்டும்.

19. நல்லதையே நினைக்க வேண்டும்; நல்லதையே பேச வேண்டும்.

20. பகவானின் மேல் நம்பிக்கை வைத்து நல்ல காரியங்களையே செய்யவேண்டும்.

21. பசு முதலிய வாயில்லா ஜீவன்களிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

அவசியம் தவிர்க்கப்பட வேண்டியவை

பின்வரும் பாபங்களைச் செய்பவர்கள் மனிதக் குரங்குகள் என்று கருதப்படுவதால் அவைகளை அவசியம் தவிர்க்க வேண்டும்.

1. பிறருடைய சொத்துக்களைத் திருடுகிறவர்கள்.

2. சாப்பிடக் கூடாத பதார்த்தங்களைச் சாப்பிடுகிற வர்கள்.

3. அசுத்தமான இடங்களில் வஸிக்கிறவர்கள்.

4. ஹிந்து மதத்தை விட்டு மதாந்தரங்களில் சேர்ந்து கல்யாணம் செய்துகொள்ளுகிற ஸகல ப்ராஹ்மண புருஷர் களும், ப்ராஹ்மண ஸ்த்ரீகளும்.

5. பக்தர்களை வேஷதாரிகள் என்று தூஷிக்கிற ஆண், பெண்கள்.

6. கல்யாணம் செய்துகொண்ட மனைவிக்குச் சோறு போடாமல் விரட்டி அடிக்கிறவர்கள்.

7. பர்த்தாவுக்குச் சரியானபடி அடங்காமல் வீட்டு வேலைகளையும் சரிவரச் செய்யாத பெண்கள்.

8. மாமனார், மாமியார் குலங்களையும் குணங்களையும் செய்கைகளையும் இழிவாகப் பேசிப் புண்படுத்துகிறவர்கள்.

9. வயிற்றில் பிறந்த பெண்களைப்போல் நினைக்காமல் நாட்டுப் பெண்களை ஹிம்ஸிக்கிற மாமியார்கள்.

10. வாங்கின கடன்களைச் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்கள்.

11. 'ஒத்தாசை செய்கிறேன் செய்கிறேன்' என்று சொல்லி ஆசை காட்டி ஏமாற்றுகிறவர்கள்.

12. நிச்சயதார்த்தம் ஆன பிறகு அதிக வரதக்ஷிணைக்கு ஆசைப்பட்டுக் கல்யாணத்தை நிறுத்துகிறவர்கள்.

13. தப்புக் கணக்குகளை எழுதி வைத்துப் பணத்தைக் கொள்ளையடித்து முதலாளியைக் கெடுக்கிறவர்கள்.

14. பெண்டாட்டியின் கலக வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு தாய் தகப்பனுக்குச் சோறு போடாமல் தின்னுகிற வர்கள்.

15. அக்கம்பக்கத்து வீடுகளில் பூசனிக்காய் வாழைக்காய் முதலியவற்றைத் திருடித் தின்னுகிறவர்கள்.

16. தீபாவளி தவிர வேறு தினங்களில் உதயமாகி ஆறு நாழிகைக்கு முன் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுகிறவர்கள்.

17. எவர் தாங்கள் செய்யவேண்டிய திவஸத்தை 'அங்கே செய்துவிட்டேன், இங்கே செய்துவிட்டேன்' என்று ஏமாற்றுகிருர்களோ அவர்கள்.

18. தகப்பன் இல்லாதவன் அமாவாஸ்யைத் தர்ப்பணத்தைச் செய்யாமல் விட்டுவிட்டால் அவன்.

19. எவர்கள் ஸந்த்யாவந்தனங்களில் வருகிற வேத வாக்யங்களைக்கூட மனப்பாடம் செய்வதில்லையோ அவர்கள்.

20. எவர்கள் பத்துப் பேர்கள் புழங்குகிற இடங்களில் மலஜலம் கழித்து ஆபாசம் செய்கிருர்களோ அவர்கள்.

21. எவர்கள் ஆடம்பரத்துக்கு ஆசைப்பட்டு வீண் செலவுகளைச் செய்துவிட்டுத் திண்டாடுகிருர்களோ அவர்கள்.

22. ஆசார்ய த்ரோஹம் செய்கிற சிஷ்யர்களும், சிஷ்ய த்ரோஹம் செய்கிற ஆசார்யர்களும்.

23. கோயிலில் தெய்வத்துக்கு விளக்கேற்றக் கொடுத்த நெய், எண்ணெய் முதலியவற்றை மீத்தி வீட்டுக்குக் கபடமாக எடுத்துப் போகிறவர்கள்.

24. பகவானுக்கு நிவேதனம் செய்யாமல் தின்னுகிறவர்கள்.

25. கோவணம் கட்டிக்கொள்ளாமல் வேஷ்டி கட்டிக் கொள்ளும் ஆண்கள்.

26. இடுப்பில் துணியில்லாமல் குளிக்கிற ஆண், பெண்கள்.

27. ஏகாதசி தினத்தில் சோறு தின்னுகிற புருஷர்களும் ஸ்த்ரீகளும் குழந்தைகளும்.

28. உபவாசம் இருக்கச் சக்தி இல்லாமல் பலகாரம் செய்கிறவர்களாக இருந்தாலும் டஜன் கணக்கில் தோசை முதலியவற்றை அடிக்கடி சாப்பிடுகிறவர்கள்.

29. உட்காராமல் நின்றுகொண்டே ஒன்றுக்குப் போகிறவர்கள்.

30. தினந்தோறும் ப்ராஹ்மணூர்த்தம் சாப்பிடுகிறவர்கள்.

31. ஒரு தினத்தில் இரண்டு தடவை ப்ராஹ்மணார்த்தம் சாப்பிடுகிறவர்கள்.

32. வீட்டிலுள்ள ஸாளக்கிராமத்தை (பெருமாளை) விலைக்கு விற்கிறவர்கள்.

33. 'இந்த ஆசார்யன் ப்ரயோஜனமில்லை; அந்த ஆசார்யன் ப்ரயோஜனமில்லை' என்று சொல்லிக்கொண்டு ஓர் ஆசார்யனிடத்திலும் ஸமாச்ரயணம் பரந்யாஸம் முதலியன செய்துகொள்ளாமல் காலம் கழிக்கிறவர்கள்.

34. பதவிக்காகப் பணத்தைக் கொடுத்து வசீகரிப்பவர்கள்.

35. பணத்துக்காக 'மனஸ்ஸாக்ஷிக்கு விருத்தமாக ஸஹாயம் செய்பவர்கள்.

36. லஞ்சத்துக்காகத் தீர்ப்பு எழுதினார்களேயானால் அவர்கள்.

37. பகவத் பக்தர்கள் எந்த ஜாதியாராக இருந்தாலும் மரியாதை கொடுக்காமல் அவமதிப்பார்களேயானால் அவர்கள்.

38. குற்றம் செய்தவர்கள் இனிமேல் செய்கிறதில்லை என்று மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பிறகும் அவர்களை ரக்ஷிக்காதவர்கள்.

39. தர்ம கார்யங்களை அழிக்கிறவர்கள்.

40. தர்ம கார்யங்களைத் தடுக்கிறவர்கள்.

41. தர்மம் செய்கிறவர்களை நிந்திக்கிறவர்கள்.

42. தாமே சமையல் செய்து சாப்பிடும் ஸந்யாஸிகள்.

43. அவரவர்களுக்கு அநாதியாக ஏற்பட்ட தென்கலை, வடகலைப் புண்ட்ரங்களைத் தரித்துக்கொள்ளுகிற மகான்களைக் கேவல நாமத்துக்காகத் தூஷிக்கிறவர்கள்.

44. அந்த அந்த ஆசார்யர்களுக்கு ஏற்பட்ட ப்ரஸித்தமான நாமங்களை மாற்றி வேறு நாமங்கள் போட்டால்தான் பெருமாளை சேவிக்கலாம் என்று தடை செய்கிறவர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஹயக்ரீவ அஷ்டகம்

ஹர்ஷ போத கநாத்மகம் சரதிந்து கோடி ஸம ப்ரபம்
ஸர்வ வேதமயாமலாத்புத விக்ரஹம் கமலா ஸகம் |
ஓமிதிச்ருதிஸார போதக விஷ்ணுமாதி ஜகத்குரும்
வாஜிவக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

பூர்ண சாரத சந்த்ரமண்டல புண்டரீக நிஷேதுஷம்
சுக்ல மால்ய விலேபநாம்பர பூஷணை ரபிபூஷிதம் |
போதலாஞ்சந புஸ்தகாம்புஜ சக்ரபாஸி சதுர்புஜம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வ போதமயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

பத்மகர்ப்ப விலாஸிநீகர பத்மபூஜ்ய பதாம்புஜம்
வேத பாரக பூஸுராமர ஸித்த யோகி கணச்ரயம் |
ஸ்ரீகராப்ஜ ஸுதா கடாப்லுத சீர்ஷகம் ச்ருதி ஜீவிதம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

தாநவாத்த நிஜோந்முக ச்ருதி ஹூதி கௌதுக ஹேஷயா
ஹ்ருஷ்ட பத்மஜ ஸம்ஸ்துதம் ச்ரிதவத்ஸலம் கருணாகரம் |
சேஷ வ்ருத்தி ஸுநிஷ்டிதாநக நித்ய ஸூரி ஸுஜீவிதம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

வ்யாஸ முக்ய முநீச்வரார்ச்சித திவ்ய மங்கள விக்ரஹம்
தக்ஷிணாக்யக மூர்த்தி சங்கர பூஜிதாங்ரி ஸரோருஹம் |
சங்க தாநவ தாரணேச்சிக ச்ருங்க யுக்ம விராஜிதம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

ந்யஸ்த பார ஸுக்ருத்ஜநாவந ஸம்ப்ரமாத்ருத விக்ரஹம்
சஸ்த்ர பூஷண ரூப பாஸ்வர தத்வ பாளி பரிஷ்க்ருதம் |
ஸ்ருஷ்டி புஷ்டி விநஷ்டி கர்மஸு சிக்ஷிதேதரபூருஷம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

ஹேஷித த்வநி தோஷித ச்ருதிமாத்ம தாஸ்ய ஜுஷாம்
ஸதாம்
வாவதூக வசோநிரோதக வாக்படுத்வ வ்தாந்யகம் |
ஆதி மத்ய ஸமாபந த்ரிக காலபந்த விவர்ஜிதம்
வாஜி வக்த்ரமுபாச்ரயே மம கோந்வபோத மயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

ஆதிவர்ண தநு ஸ்வத ச்ச்ருதி வருக்ஷ மூலமபூத்பவாந்
லோகமூல மபீத்ருசோ நநு தத்வதந்ய முசந்தி கே |
த்வாம் ப்ரபந்நஜநதாந்திமஸ்ம்ருதி லம்பகம் மம ஜீவிதம்
வாஜிவக்த்ரமுபாச்ரயே மம கோந்வ போதமயாமய : ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹி மாம்)

ஸ்ரீநிவாஸ கவீந்த்ர கல்பிதாமய வாஜி முகாஷ்டகம்
பக்தி பூர்வமுஷஸ்ஸு கீர்த்தந காரிணாமிதமத்புதம் |
புக்தி முக்தி பல ப்ரதம் கவிவாகி கீர்த்திகரம் ந்ருணாம்
சுத்தபோத ஸம்ருத்திதம் சுப ஸாது ஸங்கதி ஸாதகம் ||

(போதஸாகர ஸர்வ போதக வேதபாரக பாஹிமாம்)

ஹர வாஜிவக்த்ர ரிபுகணம்
அபகர மௌட்யம் தியஸ் தநோச்ச ருஜம் |
தேஹி ச வசநே படுதாம்
தைர்யோத்ஸாஹௌ ப்ரஸாதமபி ஹ்ருதயே ||

இதி ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ ஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோத்ரம்

[நான்முகனது கர்வத்தை அடக்க எம்பெருமான் மது, கைடபர்களைத் தோற்றுவித்தான். அவர்கள் நான்முகனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்று ரஸாதலத்தில் மறைத்து வைத்தனர். அவனது கொழுப்பும் அடங்கியது.

பின்னர் நான்முகனது ப்ரார்த்தனையைச் செவியுற்று அவனிடம் கருணை கொண்ட பகவான் மீனாக அவதரித்து மது கைடபர்களைக் கொன்றார். பின்னர் பரிமுகத்தேவனாகத் தோன்றி அவ்வேதங்களை ஆகர்ஷித்துத் தூயதாக்கி நான்முகனுக்கு உபதேசித்தருளினார்.

இந்த லக்ஷ்மீஹயவதநப்ரபுவை ஆராதித்து நம் பூர்வர்கள் எல்லா ஸித்தியையும் பெற்று மகிழ்ந்தனர். ஹயக்ரீவ மந்த்ரங்களுள் சிறந்த ஹயக்ரீவாநுஷ்டுபத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு தோன்றியதே இந்த ஹயக்ரீவ பஞ்ஜரம் என்னும் ஸ்தோத்ரம்.

கூண்டிற்குள் இருக்கும் ப்ராணிக்கு துஷ்ட ஜந்துக்களால் தீங்கு வராததுபோல் இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பார்க்கு எல்லாவித ஸங்கடங்களும் நீங்கிவிடும். இத்தகைய துதிகள் மந்த்ர ஜபங்களின் பலனை யளிக்கும். இதற்குப்புரச்சர்யாதிகள் கிடையா. அக்ஷரம், ஸ்வரம் இவற்றின் மாறுட்டத்தாலோ, நியமக்குறைவாலோ வரும் அபாயங்களும் நேராது.

சந்த்ர மண்டலத்துள் பனிமலைபோல் வெண்மையாயும் அழுக்கற்ற ஸ்படிகம்போல் பளபளப்புமுடைய திருமேனியுடன் தாமரை மலரையொத்து அகன்ற திருக்கண்களையும் திருவாழித் திருச்சங்கேந்திய பின் இரு திருக்கரங்களையும் அக்ஷமாலையுடன் ஜ்ஞாந முத்ரையையும் புஸ்தகத்தையும் கொண்ட முன் இரு திருக்கரங்களையும், திருவும் மறுவும் ஸ்ரீகௌஸ்துபமும் மிளிரும் திருமார்பையும் உடையவராயும் நீண் முடியும், வநமாலையும் திருப்பீதாம்பரத்தையும் தரித்தவராயும் உள்ள அழகே வடிவினரான ஹயக்ரீவரை த்யானம் செய்த வண்ணம் இந்த பஞ்ஜர ஸ்தோத்ரத்தை ஜபிப்பவர்கள் விரும்பியது யாவும் கைகூடப் பெற்று வாழ்வர்.]

---

1 அத கல்பம் ப்ரவக்ஷ்யாமி ஹயக்ரீவஸ்ய பஞ்ஜரம்,
யஸ்ய விஜ்ஞாந மாத்ரேண வாணீ கங்கேவ நிஸ்ஸரேத் ‖

2 சுத்த ஸ்படிகஸங்காசம் துஷாராசல ஸந்நிபம் |
ச்வேத பர்வத ஸங்காச சந்த்ர மண்டல மத்யகம் ‖

3 சதுர்புஜ முதாராங்கம் புண்டரீகாயதேக்ஷணம்,
சங்கசக்ரதரம் தேவம் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம் ‖

4 கௌஸ்துபோத்பாஸிதோரஸ்கம் வநமாலாவிராஜிதம் |
பீதாம்பர தரம் தேவம் கிரீட மகுடோஜ்ஜ்வலம் ‖

5 முக்ய ஹஸ்தத்வயேநைவ ஜ்ஞாநமுத்ராக்ஷ புஸ்தகம் ‖

6 ஓங்காரோத்கீதரூபாய ருக்யஜுஸ்ஸாம மூர்த்தயே |
நமோஸ்து தேவதேவாய வாஞ்சிதார்த்த ப்ரதாயிநே ‖

7 அஜ்ஞாந திமிரம் சிந்தி ஜ்ஞாநம் சாசு ப்ரயச்ச மே |
தேஹி மே தேவதேவேச ஹயசீர்ஷ நமோஸ்து தே ||

8 பூதப்ரேத பிசாசாதீந் சிந்தி தேவ ஜநார்தந |
ஸ்வராதி நிகிலாந் ரோகாந் நாசயாசு ரமாபதே ||

9 தாரித்ர்யம் ஸகலம் சிந்தி குரு ஸௌபாக்ய பாஜநம் |
சத்ரூந் நாசய மே தேவ ஹயசீர்ஷ நமோஸ்து தே ||

10 மேதாம் ப்ரஜ்ஞாம் பலம் வித்யாம் ஸம்பதம் புத்ர பௌத்ரகாந் |
தேஹி மே தேவ் தேவேச ஹயசீர்ஷ நமோஸ்து தே ||

11 கார்க்கோடக முகாந் ஸர்ப்பாந் விஷாதீந் விலயம் நய |
அம்ருதம் குரு மே தேவ ஹயசீர்ஷ நமோஸ்து தே ||

12 ஸ்த்ரீவ்ச்யம் ஜநவச்யம் ச ராஜவச்யம் பராவசம் |
குரு தேவாங்கநாப்ருந்த ஸேவ்யமாந பதாம்புஜ ||

13 ஹம்ஸாய பரமேசாய சந்த்ரமண்டல வாஸிநே |
நமோ ஹயோத்தமாங்காய வாஞ்சிதார்த்த ப்ரதாயிநே

14 ருக் யஜுஸ்ஸாம ரூபாய ருதாய மஹதே நம : |
ருக்ஷேச பிந்து மத்யஸ்த ராஜிவாஸந பாஜிநே ||

15 வேத வேதாந்த வேத்யாய வேதாஹரண கர்மணே |
ஸத்வா ஸத்வ மஹா மோஹ பேதிநே ப்ரஹ்மணே நம: ||

16 ப்ரஜ்ஞாந தாயிநே நித்யம் பஜதாம் பாவிதாத்மநாம் |
ப்ரணவோத்கீதவபுஷே ப்ரணதிம் ப்ரதிபாதயே ||

17 மந்தாரகுந்தஸ்படிக மஹநீயோரு வர்ச்சஸே |
மநீஷாப்ரத தேவாய மஹாச்வ சிரஸே நம :||

18 இதி த்வாதச மந்த்ரேண நமஸ் குர்யாத் ஜநார்தநம் |
ப்ராத: ப்ரஸந்நவதநம் பூர்வாசார்யாபிவந்திதம் ||

இதி ஸ்ரீஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீ தேவாதிராஜ
பரப்ரம்மணே நம :
ஸ்ரீமதே சடகோபாய நம :
ஸ்ரீமதே நாதமுநயே நம :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம :

"தேசிகன் திருக்காப்பு"

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்து உறை மார்பினன்தாள்
தூமலர் சூடிய தொல் அருள் மாறன்
துணை அடிக்கீழ் வாழ்வை உகக்கும் இராமாநுசமுநி
வண்மை போற்றும் சீர்மையன் எங்கள் தூப்புற்
பிள்ளையே!
பல்லாயிரவர் இவ்வுலகில் உன்தனக்கு தீமைகள் செய்வார்
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது எம்பிரான் நீ
இங்கே இருப்பாய்
வல்லார் வாழும் வெஃகாவில் வந்தாய் ஞானச் சுடரே
சொல்லார வாழ்த்தி நின்று ஏத்தி சொப்படக்
காப்பிட வாராய்.

திருவேங்கடவன் அவதாரமே!
திருமலை மால் திருமணியே!
தூப்புல் திருவேங்கடவனே!
விளக்கொளி வந்த வள்ளலே!
தேசுடை தேசிகனே!
திருக்காப்பு நானுன்னைச் சாத்த
ஏற்று கேள், வாராய்!
இருகையும் கூப்பி உரைக்கும்
இத் திருக்காப்பு கேட்டருளாய்!!

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்**

1 ராமாநுஜ தயா பாத்திரமே-
2 ஞான வைராக்ய பூஷணமே-
3 ஸ்ரீமத் வேங்கட நாதார்யனே-
4 கவிதார்க்கிக சிங்கமே-

5-6 ஸ்ரீமானே-வேதாந்தாசார்யனே-
7 வேதாந்த தேசிகனே-
8 சீராா தூப்புல குருவே-
9 தூபுல* குலத்தோனே-
10 தூபபுல மணியே-
11 தூபபுல் பிள்ளையே-
12 தூப்புல விளக்கே-
13 தூபபுல வள்ளலே-
14 தூபபுல தேசிகனே-
15 தூபபுல தேவனே-
16 தூப்புல் அம்மானே-
17 தூப்புல ஐயனே-
18 தூப்புல செம்மலே-
19 தூப்புல சீர்மையனே-
20 தூப்புல் துரந்தரனே-
21 தூப்புல வேதியனே-
22 தூபபுல வித்தகனே-
23 தூம்புல் மெய்ததவனே-
24 தூப்புல உத்தமனே-
25 தூப்புல் புனிதனே-
26 தூப்புல அணுக்கனே-
27 தூப்புல ரததினமே-
28 தூப்புல் காவலனே-
29 தூப்புல உடையவனே-
30 தூப்புல அற்புதனே-
31 தூபபுல தெய்வமே-
32 தூப்புல மாலே-
33 தூப்புல முகிலே
34 தூப்புல கற்பகமே-
35 தூபபுல சுடரே
36 தூப்புல் மாபுருடனே-
37 தூப்புல் மறைமுடித் தேசிகனே-
38 தூப்புல தெருள்ஆர் தேசிகனே-
39 தூப்புல் எந்தாயே-
40 தூபபுல் குலபதியே-
41 தூபபுல குலததரசே-
42 தூப்புல குலமணியே-

* தூர்மையான புல் 'கௌசிகம்' (தர்ப்பம்) எனப்படும். அச் சொலலால் அறிவிக்கப்படுவது விசுவாமித்ர கோத்ரம்.

43 சீரொன்று தூப்புல் திருவேங்கடவனே-
44 பாரோர்க்குப் பழமொழியைப் பணித்தவனே-
45 தாரணில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும்
வாழ்வு தந்தவனே-
46 பற்பல கலை வல்ல பாவலனே-
47 பத்தர் ஏத்தும் அற்புதனே-
48 அருள் மொழியும் ஆராவமுதமே-
49 இதம் கருதும் இனிமையோனே-
50 'முநிவாஹந போகம்' அருளிச் செய்தவனே-
51 தொண்டர் உகக்கும் தேசிகனே-
52 தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பியே-
53 ஞானப் பெருந்தகவே-
54 இருள் நீக்கும் தாராபதியே-
55 விலையற்ற நன்மணியே-
56 கூர் அணி சீர் மதியுடைய குருவே-
57 வஞ்சப் பலசமயம் மாற்ற வந்தவனே-
58 மன்னு புகழ்ப் பூதூரான் மனம் உகப்பவனே-
59 கலியன் உரை குடிகொண்ட கருத்துடையவனே-
60 செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்து உரைப்பவனே-
61 தஞ்சப் பரகதியைத் தந்து அருளுபவனே-
62 திடமுடன் ஆதரித்து ஓதும் அன்பனே-
63 அருள் தரும் ஆரண தேசிகனே-
64 திருவேங்கட நாதனே-
65 செந்தமிழ்ச் செம்மலே-
66 வித்தகனே வேதாந்த தேசிகனே-
67 வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்தவனே
68 பேதா பேதம் பிரமமெனுவகை பிரமம்
தெளிவுற்றவனே-
69 மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தவனே-
70 தெருளார் மறைமுடித் தேசிகனே-
71 திக்கெட்டும் புகழ் ஸ்ரீ பாஷ்யத்தைத் தெளிய
உரைத்தவனே
72 ஓதா ஓதும் வேதாந்தாரியனுதயம் செய்தவனே-
73 ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனே-

உத்தமமான புரட்டாசி திருவோணத்து உதித்தவா—உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு !

விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும்
விரைமலராள் வளக்காதல் கொண்டுறை மார்பனே
பல்லாண்டு !

திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தவனே
பல்லாண்டு !

துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும்
தூய்மை எண்ணிக்

களக்காதல் செய்யும் நிலை கடியும் தூப்புற் காவலனே
பல்லாண்டு !

காவலர் எங்கள் கடாம்பிக் குலபதி அப்புள்ளார் தம்
தேமலர் சேவடி சேர்ந்து பணிந்த தூப்புற் குலத்தரசே
பல்லாண்டு !

தேசிகனே நின் துணையடி வாழி !
தேசிகனே நின் தூமுறுவல் வாழி !
தேசிகனே நின் தூமுறுவல் கொண்ட முகம் வாழி !
தேசிகனே நின் வியாக்கியா முத்திரைக்கை வாழி !
தேசிகனே நின் வண் திருநாமம் வாழி !
தேசிகனே நின் மணி வடம் வாழி !
தேசிகனே நின் முப்புரி நூல் வாழி !
தேசிகனே நின் சீர் வாழி !
தேசிகனே நின் வடிவு வாழி !
தேசிகனே நின் வடிவழகு வாழி !
தேசிகனே நின் மென்மலர் அடி வாழி !
தேசிகனே நின் பாத மலர் வாழி ;

அன்று இவ்வுலகினை ஆக்கி அரும பொருள்
நூல் விரித்து நின்று தன் நீள் புகழ்
வேங்கடமாமலை மேவியும்—பின்
வென்றிப் புகழ் திருவேங்கட நாதன் எனும்
குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல்
நின்ற நோய்கள் தவிர்த்தவனே
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்

அருளாளன் வாழி ! அணி அத்திகிரி வாழி !
எதிராசன் வாசகத்தோர் வாழி !
சரணாகதி என்னும் சார்புடன் மற்று ஒன்றை
அரணாகக் கொள்ளாதார் அன்பு வாழியே !

[உத்திரவேதியுள் வந்துதித்த செய்யவள் மேவிய சீரருளாளரைச் சிந்தை செய்வான் சீர்தேசிகனுக்கு.

ஸ்ரீமத் ரங்கராமாநுஜ மஹாதேசிகன்
(ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி) திருவடி-
ஸ்ரீ தேசிக தர்சன துரந்தர-
''ஸ்ரீ ராமாநுஜ குருகுலம்'' ஸம்பாதக-
திருமலை நல்லான் சக்ரவர்த்தி-
ஸ்ரீ உ. வே. புலவனூர் ப்ரார்த்தஸாரதி தாஸன்
நன்று கண்டார் சொல்லால் திருக்காப்பிட்டது.]

ஸ்ரீ :

ஸ்ரீ ஹயக்ரீவ மஹிமை

* (மத்வசாஸ்த்ர ஸம்பந்த கீதகோவிந்த ரத்நாகர
ஸ்ரீ K. ராஜகோபால்ராவ், B.A.,
22, Old Post Office Street, Venkatapuram,
Ambattur, Madras-53)

பகவத் ஸ்வரூபம் இருவகைப்படும். மூர்த்தம் என்றும், அமூர்த்தமென்றும் சாஸ்திரப்ரமாணங்களால் அறிகிறோம். அமூர்த்தமென்பது இந்த்ரியங்களுக்கு எட்டாததாய் மன திற்கும் அகோசரமானது. ''யாவையும் யாவரும் தானாய், அவ்ரவர் சமயம் தோறும் தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான்'' என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் அருளிச் செய்தவாறு, அபரிச்சேத்யமாய், அகண்டமாய் உள்ள வ்யாப்தியை, மனிதன் எவ்வாறு அறிய முடியும்? ஆகையால், உபாஸனைக்கு உரித்த முறையில் பகவத் அவதாரங்களான மூர்த்தி தரிததிருக்கும் ஸ்வரூபங்களே நமக்கு உபாயமாகும்: இவைகளுள் ஹயக்ரீவ மூர்த்தியின் சிறப்பு எண்ணிலடங்காத தாகும். குதிரை முகத்தோடு, மஹாலக்ஷ்மி ஸமேதனாய் சின்முத்திரை தரித்து, கமலாஸனத்தில் வீற்றிருக்கும், நிர்மலமான ஸ்படிகம் போன்ற ஒளியை த்யானிப்பவர் களுக்கு, ஸகல ஐச்வர்யமும், ஸமஸ்தமான வித்யா சக்தியும், பூர்ணமான ஆயுளும் ஸித்திக்கும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமே கிடையாது. இதை நிரூபித்துக் காட்டிய ஆசாரி யர்களுள், ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகரும், மத்வ மதத்தைச் சார்ந்த வாதிராஜ ஸ்வாமி களும், ப்ரதான புருஷர்களாவர். இவர்களுள் ஸ்ரீமந் நிகமாந்த

* Our grateful thanks to the learned author.

தேசிகனே மூலபுருஷர் என்று சொல்லலாம். ஏனெனில், இவர் தோன்றிய காலம் (1268-A.D.), வரதிராஜ ஸ்வாமிகளுக்கு (1480-A.D.) முற்பட்டதேயாகும். மத்வ ஸித்தாந்த ஆசார்யர்களுள், ஸ்ரீவாதிராஜரே ப்ரதானபுருஷர். அப்படியே தேசிகனும் கொண்டாடப்படுபவர். (ஸ்ரீ வைஷ்ணவபழம்) இருவர்களும் ஹயக்ரீய உபாஸனு ஸித்தி பெற்றவர்கள். தேசிகன் எப்படி வித்யாஸாமர்த்தியத்தில், ' கவிதார்க்கிக ஸிம்ஹம்'' என்றும், ''ஸர்வதந்த்ர ஸ்வதந்தார்'' என்கிற விருதுகளோடு விளங்கிஞரோ அவ்வாரே வித்யாவாதத்தில் எப்பேர்ப்பட்டவர்களேயும் ஜயிக்கும் ஆற்றல் படைத்திருந்ததால் மாத்வ வகுப்பு மகனீயர்களுள் இவரே, ''குருராஜர்'' என்றும். ''வாதிராஜர்'' என்றும் அழைக்கப்பட்டு வந்தார். ஸ்ரீதேசிகனேப் போலவே இவர் செய்த கார்யங்களும் அநேகம். இருவரும் ஹயக்ரீவர் அருளால் கிடைத்த வள்ளல்கள். இருவரும் மானிட வாழ்க்கையில், நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டு ஜீவதசையில் வாழ்ந்தவர்கள். பொருத்தம் பலவகையில் காணப்படுவதால் ஸ்ரீ ஹயக்ரீவரின் அருளேப் பெற்றவர்கள் எம்மாதிரியான மேன்மையும், ச்ரேயஸையும் அடைவார்கள் என்பதற்கு இவர்களுடைய ஜீவிதவாழ்க்கையே நமக்கு ப்ரத்யக்ஷ நிதர்சனமாகும்.

ஸ்ரீ ஹயக்ரீவப்ரஸாதம்

ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகள், உடுபியிலுள்ள 8 மடங்களில் ஒன்றுகிய ''ஸோதே'' மடத்து ஸ்வாமிகளுள் ஒருவர்.

இவர் தினந்தோறும் ஸ்வாமிக்கு ஆராதனம் செய்யும் ''ப்ரஸாதத்திற்கு'' ஹயக்ரீவ பண்டி'' என்று பெயர். இதில் விசேஷமான அம்சம் கடலேப்பருப்பு. இதை நன்றுய் வேகவைத்து இத்துடன் வெல்லம் சேர்த்து தேங்காய் துருவிக் கலந்து நெய் சேர்த்துத் தயார் செய்தால் கிடைப்பது சற்று இளகின சற்கரைப் பொங்கல் அல்லது அக்காரவடிசல் போன்றுள்ள ஒரு நிவேதனம். இதை ஸ்வாமிகள் ஒரு பெரிய தட்டிலிட்டு, தலேமேல் வைத்துக்கொண்டிருக்க, ஹயக்ரீவ மூர்த்தி ஒரு குதிரை வடிவமாய் வந்து இவருக்குப் பின்னின்று முன்னிரு கால்களே இவர் தோள்களில் வைத்து. இந்த நைவேத்யத்தை ஆர்த்தியோடு புஜிப்பது வழக்கம். பிறகு தட்டிலுள்ள சேஷமே இவருக்கு ஆஹாரமாகும். இத்தகைய ப்ரஸாதத்தையே பாகம் செய்து, பால்குணமாஸத்திற்வரும், ஸ்ரீ வரதிராஜ ஸ்வாமிகளின் புண்ய தினத்தன்று உடுப்யில்




இப்பொழுதும் வழங்கி வருவதைக் காணலாம். இந்த விஜய ப்ரஸாதத்தைச் செய்து, ஸ்ரீ ஹயக்ரீவன் திருஅவதார தினமான ச்ராவண மாஸ திருவோண நக்ஷத்திரத்தன்று — ஆராதனம் செய்பவர்கள் எல்லாவித மேன்மையும் அடைவார்கள். பொதுவாகவே, திருவோண நாள், விஷ்ணுவின் விபூதி கொண்டது என்று சான்றோர்களின் வாக்கு. ஸம்ப்ரதாயத்திலும், ஆவணி மாஸத்தில் வரும் திருவோணத்தையே கேரளா நாட்டிலும், மலபார் ப்ரதேசத்திலும் "ஓணம்"

என்கிற ஒரு பண்டிகை நாளாகக் கொண்டாடுகிறார்கள். வாமனாவதாரம் தோன்றியதும் திருவோணமே. ஆகையால் ஒவ்வொரு திருவோணத்தன்றும், இந்த ஹயக்ரீவ ப்ரஸாதத்தை செய்து, பகவந்நிவேதனம் செய்து புஜிப்பவர்கள், ஹயக்ரீவ அருளாகிய, ஆயுளேயும் ஆரோக்யத்தையும், ஐச்வர்யத்தையும் பெற்று, எல்லாவிதத்திலும் இன்புறுவார்கள் என்பது சாஸ்திர ஸம்ப்ரதாய ஸித்தம்.

ஸ்ரீ மதுரகவிகள் அருளிச் செய்துள்ள ''கண்ணிநுண் சிறுத் தாம்பு'' என்னும் திவ்வியப் பிரபந்தத்தைச் சில ஆயிரம் ஆவ்ருத்தி அநுஸந்தித்தால், இக்கலிகாலத்துக்கு அநுகுணமாக சூசகமாகவாவது ஸ்ரீ நம்மாழ்வார் ப்ரத்யக்ஷமாகி அனுக்ரஹிப்பார் என்பது பெரியோர்கள் பலர் அனுபவபூர்வமாக உணர்ந்த உண்மை. அதுபோலவே மாதந்தோறும் ச்ரவண நக்ஷத்ரத்தன்று மேலே கூறியுள்ள பிரகாரம் சடலைப்பருப்பு, வெல்லம், தேங்காய், நெய் சேர்த்து சுகியன் (அல்லது சர்க்கரைப் பொங்கல், அக்கார வடிசல்) தயார் செய்து ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகள் செய்தது போலவே ஒரு தட்டில் வைத்து சிரசில் வைத்துக்கொண்டு ஸ்ரீ ஹயக்ரீவனை த்யானித்து நிவேதனம் செய்து வரலாம். சில ச்ரவணங்கள் அம்மாதிரி செய்து வந்தால் அம்மஹானுக்கு அனுக்ரஹித்ததுபோலவே ஸ்ரீ ஹயக்ரீவன் குதிரை வடிவத்துடன் பின்புறமாக வந்து அதை ஸ்வீகரிப்பதுடன் ஸகல ஸௌபாக்யங் களையும் அருளுவார் என்பதில் ஸந்தேகமில்லை.





ஸ்ரீ:

புரட்டாசி மாதம்

வேதாந்த தேசிகர்*

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ உபய வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

இது வேதாந்ததேசிகன் அவதரித்த மாதமென்பது உலக மறிந்தது. திருவேங்கடமுடையானுடைய மஹோத்ஸவத்தில் அவப்ருத நாளாகிய திருவோணத்தன்று காஞ்சீபுரியைச் சேர்ந்த தூப்புலில் திருவவதரித்த பேராசிரியர் இவர். விளக்கொளி யெம்பெருமானுடைய ஸந்நிதியைச் சேர்ந்தவொரு பகுதிக்குத் தூப்புல் என்கிற வ்யவஹார மிருந்தது. தூப்புல் தூப்பில் என்று இரண்டு வகையான வ்யவஹாரங்களுமுண்டு. இரண்டும் பொருந்தும். தூய்மை வாய்ந்த புல்—தூப்புல், அதாவது தர்ப்பம். வைதிகர்கள் தர்ப்பத்தை விச்வாமித்ரமென்று வழங்கி வருவர்கள். இச்சொல் விச்வாமித்ர குலத்தவர்கள் வாழுமிடத்திற்கு இடப்பட்டதாகி தூப்புல் என்று வழங்கிவந்தது என்பது ஒரு சாரார் கொள்கை. தூப்பு இல்—தூப்பில். பரிசுத்தி பொருந்திய ஸ்தலம் என்றபடி. இதுவே மிகப் பொருத்தமான வழக்காம்.

நம் மிராமாநுச தர்சனத்தை வளர்த்தருளின ஆசார்யர்களில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் முதல் ஸ்தானம் பெறுவர். ஸ்ரீ பாஷ்யத்திற்குக் காப்பாகப் பல பல க்ரந்த ரத்னங்களை யருளிச் செய்தும், ஸ்ரீ பாஷியத்தைப் பலகால் ப்ரவசநஞ் செய்தருளியும், ஸ்ரீ பாஷ்யார்த்த தூஷகர்களைப் பலவாறு கண்டித்தும், ஸ்ரீ பாஷ்யகாரரைப் பல பல ச்லோகங்களாலும் பாசுரங்களாலும் ஏத்தியும்—இப்படியே தமது வாழ்நாளைக் கழித்தருளின மஹாநுபாவர் இவர். ந்யாயஸித்தாஞ்ஜநம், தத்வமுக்தாகலாபம், ஸர்வார்த்தஸித்தி, அதிகரண ஸாராவளி, தத்வடீகா, சததூஷணீ, தாத்பர்ய சந்த்ரிகை—இத்யாதிகளான உத்க்ரந்தங்கள் நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அணிவிளக்காக இவ்வாசிரியரால் அருளிச் செய்யப்பட்டவை.

---

*இது மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபாவின் தமிழ் வெளியீடு நெ. 5—"பன்னிருதிங்களநுபவம்" (25—3—48) என்ற சஞ்சிகையில் "12, புரட்டாசி மாதம்—36. வேதாந்த தேசிகர்" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள வியாஸத்தின் ஒரு பகுதியாகும். இதை எமக்குத் தந்துதவியவர்: உபய வே. மாம்பாக்கம் வங்கீபுரம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி.

இவர் முப்பது தடவை ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநம் செய்தருளியவர் என்பது ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் இவர் தாமே பணித்த 'த்ரிம்சத்வாரம் ச்ராவிதசாரீரக பாஷ்ய:' என்ற ச்லோகத்தினுல் விளங்கும்.

ஸ்தோத்ர வகுப்பிலும், காவ்யநாடக வகுப்பிலும், சாஸ்த்ர வகுப்பிலும், வியாக்யான வகுப்பிலும், ரஹஸ்ய ஸம்ப்ரதாய வகுப்பிலும், வாத வகுப்பிலும் நூற்றுக்கணக்கான மிகச் சிறந்த க்ரந்தங்களை வடமொழியிலும் தென்மொழியிலும் அருளிச்செய் திருக்கின்ற இவ்வாசார்யசிகாமணியின் எந்த க்ரந்தத்தை எடுத்துக் கொண்டு அனுபவித்தாலும் ஆனந்த வெள்ளம் அபரிமிதமாகப் பெருகும்.

(Reproduced with grateful acknowledgments to the learned author.)

திருப்பாணுழ்வாரும் ஸ்வாமி தேசிகனும்

திருப்பாணுழ்வார் அவதரித்தது ரோஹிணி நக்ஷத்ரத்தில். அவதாரதினம புதன்கிழமை. மாதம் வேருயினும் குழலூதிய கண்ணனுக்கும் ஆழ்வாருக்கும் ஜன்ம நக்ஷத்ரத்திலும் திருஅவ தார தினத்திலும் உள்ள ஒற்றுமை நோக்கத்தக்கது.

கண்ணன் குழலிசையில் வல்லவன். ஆழ்வார் பாணர் குலத்தாரால் வளர்க்கப்பட்டதால் இன்னிசையில் வல்லவராக இருந்தார்.

எனவே ஆழ்வார் கண்ணனுடைய அம்சம் எனத் தட்டில்லை.

மேலும் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "குருபரம்பரா ஸாரம்" என்னும் அதிகாரத்தில் "ஸர்வேச்வரன் பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி..." என்று ஸாதித்தருளியிருக்கிருர். இதை ஆதாரமாகக் கொண்டும் ஆழ்வாருடைய ஜன்ம நக்ஷத்ரம், அவதாரதினம் இவை களைக் கொண்டும் நோக்குங்கால் ஆழ்வார் ஸ்ரீக்ருஷ்ண பகவானின் அம்சம் என்பது புலனுகிறது. மேலும், க்ருஷ்ணுவதாரத்தில் தேர்த் தட்டில் வீற்றிருந்து பகவான் கீதோபதேசம் செய்தருளினுர். அபிநவ அவதாரத்தில் லோகசாரங்க முனியின் தோள்தனிலே வந்து, பல மறையின் பொருளால் "அமலனுதிபிரான்" பத்துப் பாட்டும் "பாதாதி கேசமதாய்ப் பாடித்தந்தார்".

ஆழ்வாரின் திருஅவதார தினம் தீபங்களால் அலங்கரிக்கப் பட்டு ஜோதிர்மயமாய் விளங்கும் திருக்கார்த்திகை ஸமயம்,

எனவே ஆழ்வாரையும் "கார்த்திகையில் உதித்த ஜோதி" என லாம். இதை நினைவிற்கொண்டே ஸ்வாமி தேசிகனும் ஆழ்வார் அருளிச்செய்த "அமலனுதிபிரான்" என்னும் திவ்ய ப்ரபந்தத்தை அடியொற்றி இயற்றிய "பகவத் த்யாந ஸோபாநத்தை" "அந்தர்ஜ்யோதி :..." என்று ஆரம்பித்து திருவரங்கப் பெருநகரில் உள்ள அந்தச் சோதிவடிவத்தை நமக்கு நினைப்பூட்டியிருக்கிருர் போலும்.

திருப்பாணுழ்வாரிடம் ஸ்வாமி தேசிகனுக்கு மற்றெல்லா ஆழ்வார்களைக் காட்டிலும் தனிப்பட்ட ஈடுபாடு உண்டு. ஏனெனில் ஸ்வாமி தேசிகன் இவர் அருளிச் செயலான "அமலனுதி பிரானுக்கு" மட்டுமே "முனிவாஹநபோகம்" என்னும் ரஹஸ்ய க்ரந்தத்தை விரிவானதொரு வியாக்யானமாக அமைத்திருக்கிருர். அதில் "அமலனுதிபிரான்" திவ்ய ப்ரபந்தத்தின் முதல் மூன்று பாசுரங்களின் தொடக்க அக்ஷரங்களும் (அ—உ—ம) ப்ரணவத்தின் மூன்று அக்ஷரங்களாக அமைந்திருப்பதை விளக்கியிருக்கிருர். தமிழ் மறையின் ஸாரம் பூராவும் இந்தப் பத்துப் பாசுரங்களிலேயே அடங்கியுள்ளதாகவும், ஸகல வேதாந்தார்த்தங்களின் ஸாரமும் இவையே என்றும் நிஷ்கர்ஷை செய்துள்ளார் ஸ்வாமி. இந்த ஆழ்வாரிடம் ஸ்வாமிக்கு உள்ள ப்ரத்யேகமான ஈடுபாட்டினுல் ஏற்பட்ட ஜ்ஞான விசேஷத்தாலேயே ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கநாதன் விஷயமாக ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம் போன்ற மேலும் பல ஸ்தோத்ரங்களை அருளிச்செய்வதற்கு அபிருசி ஏற்பட்டதுபோலும்.

ஸ்வாமியின் 701-வது திருஅவதார தினமாகிய இந்நன்னுளில், ஸ்வாமியையும் அவர் போற்றிய திருப்பாணுழ்வாரையும் மனஸா த்யானித்து "அமலனுதிபிரானை"யும், பகவத் த்யாந ஸோபாநத்தையும் அநுஸந்தித்தால் அஞ்ஞானம் நீங்கி அத்யாத்ம ஜ்ஞானம் ஏற்படும்.



SRIHI

SRIMATH VEDANTA DESIKA AND HIS LAND OF GLORY

by

C. R. DESIKAN, B. Sc. *

Tiruvaheendirapuram, South Arcot District

On this 701st birth-year of Srimad Vendanta Desika, the greatest of Gurus after Sri Bhagavad Ramanuja, the entire religious world of Vaishnavism, has a right to rejoice and celebrate. Why? The cause is not unknown. For any doubt in Sri Bhashya or any scripture text, we can find the answers in one of the several treatises of this Great Acharya.

During the marriage ritual, the Kanya Dana Mantra is repeated thus: "For the benefit of seven generations before, seven generations after me and me included, I am peforming this gift." The life of an individual as given in Vedas is 100 years. On that basis one hundred years will be equal to one generation. Thus we have seen that this year heralds the eighth generation of the great preceptor. (Seven generations are over now.)

Born at Conjeevaram, this Acharya learnt all his religious teachings from his uncle "Appullar". In his "Sankalpa Suryodaya", this Acharya speaks of himself as "one who has recited the Sri Bhashya of Sri Ramanuja 30 times over". This piece of information is significant. His ability to master all the subjects taught so early in life, shows him as a prodogy.

Having learnt, he wanted to acquire Grace and spiritual powers. For this he undertook a penance at the top of the small hill at Tiruvaheendirapuram village, three miles west of Tiruppapuliyur, South Arcot District. After some period of penance the Acharya was blessed with a "Darsan" Sri Garuda Bhagawan, who in turn, gave upadesam of Sri Hayagriva Mantra and also presented him with an idol of this manifestation of God. By the Grace of Sri Lakshmi

---

* Our grateful thanks to the learned author. — LIFCO Publishers

Hayagriva Sri Vedanta Desika attained complete mastery of knowledge and became the "Sarva-Tantra-Swatantra" which may be translated as one who is a free master in all arts and crafts.

The lovely village of Tirnvaheendirapuram which Lord Sri Devanatha is gracing with his presence in Idol From, had a profound influence on the Acharya's later life. We are told that immediately after the fulfilment of penance, our Acharya formally worshipped at the temple and was all haste to return to Conjeevaram (his birth-place). Well, imagine His surprise, when on the way, a huge serpent refused him way to proceed further and compelled him to stay on the banks of Pennai. In the dream the Acharya had that night Lord Sri Devanatha ordered Him thus: "Mayest thou speak so, that the precious Vedas may survive." This Divine Command, set the Acharya in the path of consolidating the philosophy of Sri Ramanuja, the Alwars and the like. *Propagation of Religion* was the goal and life-mission of this Acharya thenceforth.

Has He fulfilled these expectations? Verily a glance at the number of His works is enough. In these days of dictaphone, computers and teleprinters, etc. it appears probably easy to prepare the total number. If it is borne in mind that it was the palm-leaf that was used for writing down the manuscripts, it would be staggering to note the number and length of works completed by this Acharya in more than one language (Sanskrit, Prakrit and Tamil). The command of Sanskrit and Tamil poetry, the logic of His arguments, his unrivalled Bhakthi to God, all shine forth in a glory by themselves.

Out of various life-time works, the pieces concerning the Deity at Tiruvaheendirapuram village are rather unique and completely different from the rest of his works either on Sri Ranganatha of Srirangam or on Lord Sri Varadaraja of Conjeevaram. Classified by the Acharya Himself at the end of Navamani Malai, these are the following nine works dedicated to Lord Sri Devanatha:

1. Devanayaka Panchasat (Sanskrit) 53 stanzas
2. Achyuta Satakam (Prakrit) 101 ,,
3. Mummanikkovai (Tamil)
4. Navamani Malai ,,
5. Panduppa ,,

6. Kazhalpa (Tamil)
7. Ammanaippa ,,
8. Usalpa ,,
9. Esalpa ,,

The rare works of 5 to 9 are lost (- alas!). Their existence also would be doubted but for the Acharya's own version in the concluding stanza of Navamani Malai.

The Bhakthi of this Acharya to the Lord at Tiruvaheendirapuram was so intense that the Acharya forgot his gender and just like Alwars, took on the 'Nayika Bhava' or the attitude of a maiden towards her beloved. In continuation thereof he spoke the language of maidens in Prakrit. He played the lady's game of balls with her beloved, the game of throwing flower balls and last the game of wordy duel. This Nayika Bhava and its permeation in Desika's works is exclusively the luck of Lord Sri Devanatha only. The Acharya has given this much to this Lord only—highly monogamic!

Apart from this, the ecstacy of the Acharya at Lord Sri Devanatha's Mercy is very profound. We do not see anywhere else, the opening stanza of Tamil Prabandham of Sri Desika, speaking out the "Glory of the Goddess" and in the next piece of work on the "Greatness of Lord's Feet". The Acharya exemplifies in this prominence, the concept of absolute surrender to the Lord which fulfils everything when done, only in the presence of Goddess, to His Feet.

The Tamil works of this Acharya dedicated to Conjeevaram are given their titles as "Adaikkalappatthu". "Panniru Namam", "Atthigiri Mahatmyam". etc. whereas the Tamil prabandhams in praise of the Deity at Tiruvaheendirapuram all have a feminine approach in title. The "Three Jewels Combine" (Mummanikkovai), and the "Garland of the Nine Gems" (Navamani Malai) are both ornamental in origin and is intrinsically feminine. It is this portion that is rather novel and marvellous.

The Great Acharya lived in this village for well over 20 years and the sacred place where He lived is still preserved as the sacred Tirumaligai; Also tradition speaks highly of the well which the Acharya has built there (as a challenge to a mason), with "His Own Hands". Not satisfied with those two

personal relics we find that the "Yoga Hayagreeva" inside the *sanctum sanctorum* is the One worshipped by the Acharya, after receiving Him from Sri Garuda Bhagawan. In addition, the present Idol of Srimad Vedanta Desika in the temple which is worshipped by all of us, was also the workmanship of the same Acharya as a result of a challenge by an icon-maker (sthapathi). On all these accounts, this village has the folowing list of relics at the place and a pilgrimage to this place is really worthwhile to show our reverence and respect to the Guru this year :—

1. The top of the hill where the Acharya did penance.
2. The Yoga Hayagriva Deity inside the Temple and Sri Lakshmi Hayagriva's shrine at the Hill.
3. The idol of the Acharya at the Temple.
4. The Tirumaligai.
5. The well inside the Tirumaligai.

Such is the tradition that binds Tiruvaheendirapuram and the Great Acharya. From a very rare utterance to one of the rapturous moods in the Tamil Prabandham Sri Desika speaks, "Thou Hast arrived to the town of Ahindirapuram only for "My Sake'!" This Deva Rahasyam is found out by the Acharya only. *This is the essence and purpose of Lord Sri Devanatha's Archa manifestation in this village.* Lord Sri Devanatha was waiting to meet this Acharya and they both joined forces to drive away misconcepts in religion. The "saulabhya" of Sri Devanatha and the greatness of the Gnanam and Bhakthi of the Acharya have combined to form a golden Gate " that encases the entire Vaishnavite philosophical mansion". There is no aspect or cardinal point of Vaishnavite religion that has not been dealt with and adorned by this Acharya. The Nataka, Stotras, Kavya, Mimamsa, Vedanta and every branch of study were dealt with in clear expositions and they distinctly indicate a rare flair for facts from this Greatest of Gurus".

The impact of the Acharya on the Vaishnavite religion could de gauged from the various title that adorn His name.


We bow to Him and in all humility try to comprehend His teachings.

May Glory be to HIS FAME AND NAME for several centuries to come!

Srimate Vedanta Gurave Namaha!

Pages (33) to (48), (97) to (104) Printed at Sulekah Printers, Madras-15

Sribi



(Sri Vedanta Desika of Melkote, Mysore)

Vedanta Desika - Philosopher
AND
Man of Faith

by

Prof. K. SESHADRI
Professor of Philosophy (Retd.)

The great Acharyas of our land have been philosophers in the best and most substantial sense of the term. They have been not only men of superior wisdom, profound in their insight and authentic in their

* Extract from A.I.R. Broadcast on 9-5-1968.

intuition, but also perfect exemplars of virtue and devotion, touching the rarest heights of excellence in the moral and spiritual history of humanity. Sri Vedanta Desika, whose seven hundredth birth anniversary India celebrates this year, is unexcelled in many respects. He is almost unique in a sense, for he presents the pattern of a well-integrated life and personality, harmonising and unifying the best that belongs both to the head and to the heart, one in whom the deliverances of reason and the dictates of the heart blend to a perfection. His logic is never at variance with his mysticism, but bears abundant testimony to it. He discovers truth in the depths of his soul, reinforcing Scripture and Tradition, and wields logic to carry conviction and demonstrates it to others, demolishing error and exposing untruth. His vision encompasses the whole of Being, revealing the soul of things as Divine.

Visishtadvaita to him is not merely a creed or a doctrine, but a way of life, indeed, the way of life, the path to perfection, the whole truth of Being and Becoming. Visishtadvaita is the final word of Vedanta, Desika and Ramanuja's Sri Bashya is the final statement of it. That sets the seal not only on Vedanta Desika's philosophy but on his devotion to the Master, from whom he imbibed the philosophy.

Vedanta Desika speaks the language of poetry even when he propounds or discusses philosophical ideas. Even when he wields the weapon of dialectic in defence of his faith, we seem to hear muffled strains of poetry that reach us from a transcendental realm ruled by a spirit of dedication and a sense of mission.

This "lion of logic" is obviously a very ripe soul, disciplined to the core, but delicately sensitive to the

deepest and subtlest intimations. This talented philosopher with an extraordinary power of the intellect is, indeed, an inspired poet of Grace. This austere, unsparing, incisive dialectician is a paragon of devotion and faith,—firm, unswerving and one-pointed—who had from his early years awakened to a profound consciousness of an innate state of surrender to the Supreme, and dedicated his life for the Mission of his Master.

Vedanta Desika is great both as a poet and as a philosopher, but he is greater still as a man of faith and devotion. He is a mystic and a yogin more than a man of reason. All his utterances spring from the depths of his soul's experience and echo the authenticity of an inward "anubhava". They are forthright and categorical, for there can be no shadow of doubt intervening between the knower and the known in a direct encounter with truth. Vedanta Desika's expression is radiant through and through with the twin excellences of Jnana and Vairagya.

Having seen and known the Supreme he has no need of anything else. Whatever he has, belongs to the Lord for he himself is the Lord's, totally and unreservedly. This is the basis of Vedanta Desika's vairagya. Indeed, he richly deserves the description "Vairagya Bhushanam" for tradition has recorded how and with what majestic disdain he rejected the offer of wealth and position in a royal court, utterly unmindful of the severe conditions of abject poverty envelping him.

When he had God, the Supreme as his glory and wealth what need would he feel to ask for or accept anything from anyone.

Our grateful ackowledgments to the learned author.

ஸ்ரீ:

எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வோம்

ஸம் கச்சத்வம் ஸம் வதத்வம் ஸம் வோ மநாம்ஸி ஜாநதாம் |
தேவா பாகம் யதா பூர்வே ஸம்ஜாநாநா உபாஸதே ||
ஸமாநோ மந்த்ர: ஸமிதி: ஸமாநீ
ஸமாநம் மந: ஸஹ சித்தம் ஏஷாம் |
ஸமாநம் மந்த்ரம் அபிமந்த்ரயே வ:
ஸமாநேந வோ ஹவிஷா ஜுஹோமி ||
ஸமாநீ வ ஆகூதி: ஸ்மாநா ஹ்ருதயாநி வ: |
ஸமாநம் அஸ்து வோ மநோ யதா வ: ஸுஸஹாஸதி ||

—ரிக்வேதம்

ஒன்றாய்க் கூடிக் கலந்து பேசுவோம். ஏகோபித்த மனத்துடன் கூடி வாழ்வோம். அந்த அந்த தேவதைகளுக்கு ஏற்பட்ட பூஜாபாகத்தை அவரவர்கள் ஏகோபித்த மனத்துடன் ஏற்று அனுபவிப்பதுபோல், நம் நோக்கம், கூட்டம், சித்தம், சிந்தனைகள் யாவும் ஒன்று பட்டவையாக இருக்கட்டும். எல்லோரும் பொதுக் காரியங்களில் ஒற்றுமையாக ஈடுபடுவோமாக.

ஐக்கிய மனோபாவத்துடன் எந்த விதமான வைஷம்யமுமின்றி நாம் நம் வழிபாடுகளில் ஈடுபடுவோமானால், நமது வாழ்க்கை ஆனந்தமாக அமையுமென்பது திண்ணம்.

ஸர்வே ஸநா: ஸுகிநோ பவந்து !

சாற்றுமுறை க்ரமம்

1. சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்!
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்.

2. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி

அங்கப் பறைகொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு,
பலகோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா, உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.
அடியோமோடும் நின்னோடும்,
பிரிவின்றியாயிரம் பல்லாண்டு,
வடிவாய்நின் வலமார்பினில்
வாழ்கின்ற மங்கையும்-பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு,
படைபோர் புக்கு முழங்கு
மப்பாஞ்ச சன்னியமும்- பல்லாண்டே.

ஸர்வதேச தசாகாலே

ஸர்வ தேச தசாகாலேஷ்வவ்யாஹத பராக்ரம |
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம் ||
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா |
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ ||
ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய |
ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய ||
நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே |
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே ||
ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||

வாழித் திருநாமம்

நேரிசை வெண்பா

வாழி யிராமாநுசப் பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு—வாழியவன்
மாறன் மறையுமிரா மானுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர்.

எண்சீராசிரிய விருத்தம்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
தண்டமிழ்த்தூப்புல் திருவேங் கடவன்றுள் வாழியே!

நேரிசை வெண்பா

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ—ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே!
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

திருவோலக்கப் பாட்டு

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்,
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்,
தீதிலா நல்லோர் திரள்.

திருநாள் பாட்டு

வாதாசனவர ரிவரென வருமா பாடியம் வகைபெறுநாள்
வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி யறிந்திடுநாள்,
பேதா பேதம் பிரமமெனுவகை பிரமந் தெளிவுறுநாள்
பேச்சொன்றுக்குச் சததூஷணியைப் பேசிய தேசிகநாள்,
தீதாகிய பலமாயக் கலியைச் சிக்கென வென்றிடுநாள்
திக்கெட்டும் புகழ் சீபாடியத்தைத் தெளிய வுரைத்
[திடுநாள்,
ஓதாதோதும் வேதாந்தாரிய னுதயஞ் செய்திடுநாள்
உத்தமமான புரட்டாசித் திருவோண மெனுந்நாளே.(1)

செங்கமலத்தய னன்னவரென்று புகழ்ந்து மகிழ்ந்திடுநாள்
சீர்கொளிராமாநுசவெனு மந்திரம் பதிகளில்—
வாழ்ந்திடுநாள்,
செங்கயல் வாளைகள் சேர்வயல் சூழ்ந்த வ்ரங்கர் சிறந்திடு-
நாள்,
சிந்துர வெற்பிடைச் சென்று திகழ்ந்து சிரீபதி-
வாழ்ந்திடுநாள்,
தெங்கொடு மாங்கனி தேன்சுனை வேங்கடத்தீசர்-
பிறந்திடுநாள்,
சீர்மதி யாகம மௌலிதத் தேசிகர் பிறந்து-
வளர்ந்திடுநாள்,
பங்கய மாமலர் மங்கை குணங்களைத் தெளிய-
வெளியிடுநாள்,
பார்திகழ் பாத்திரபதத் திருவோணமெனுந்
திருநன்னாளே.

மங்களா சாஸநம்

ஸ்ரீமாந்வேங்கட நாதார்ய:கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||
ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் |
விச்வாமித்ர குலோத் பூதம் வரதார்ய மஹம் பஜே ||
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம் ஹாய கவிவாதிநாம் |
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேசாய மங்களம் || 1 ||
நபஸ்யமாஸி ச்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே |
விச்வாமித்ராந் வயாயாஸ்து வேங்கடேசாய மங்களம் || 2 ||

பிதா யஸ்யாநந்த ஸூரி ; புண்டரீகாக்ஷ யஜ்வந : |
பௌத்ரோயஸ் தநயஸ் தோதா ரம்பாயாஸ் தஸ்ய
மங்களம் || 3 ||

வேங்கடேசாவதாரோsயம் தத்கண்டாம்சோsதவா பவேத் |
யதீந்த்ராம்சோதவத்யேவம் விதர்க்யாயஸ்து மங்களம் || 4 ||
ஸ்ரீ பாஷ்யகார: பந்தாந மாத்மநா தர்சிதம் புந : |
உத்தர்த்து மாகதோ நூநமித்யுக்தாயாஸ்து மங்களம் || 5 ||
யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் |
அவாப்ய வ்ருத்திம் கமிதஸ் தஸ்மை யோக்யாய மங்களம் ||6 ||
ராமாநுஜார்யா தாத்ரேயாந் மாதுலாத் ஸகலா: கலா : |
அவாப விம்சத்யப்தேயஸ் தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் || 7 ||
ச்ருதப்ரகாசிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா |
ப்ரவர்த்திதா ச பாத்ரேஷு தஸ்மை ச்ரேஷ்டாய மங்களம்||8||
ஸாம்ஸ்க்ருதீபி : த்ராமிடீபி : பஹ்வீபி : க்ருதிபிர் ஜநாந் |
யஸ்ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ஸேவ்யாய மங்களம் || 9 ||
ய: க்யாதிலாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜநே |
க்ரயணீய தசாம் ப்ராப்த : தஸ்மை பவ்யாய மங்களம் || 10 ||
யஸ்மாதேவ மயாஸர்வம் சாஸ்த்ரமக்ராஹி நாந்யத : |
தஸ்மை வேங்கட நாதாய மம நாதாய மங்களம் || 11 ||
பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச |
ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேசாய மங்களம் || 12 ||
ய : க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் |
ஆசாஸ்தே sநுதிநம் ஸோsபி பவேந் மங்கள பாஜநம் || 13 ||

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம : ||

பக்கங்கள் 49 முதல் 96 வரை, 105 முதல் 112 வரை மாருதி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

ஸ்ரீ:

ஆஸ்திகர்களின் அனுக்ரஹம்

(Blessings of the Godly and the Good)

[பொதுவாக ஸத்க்ரந்தங்களை வெளியிடுவதன் மூலம் பக்தி ப்ரசாரம் செய்யும் எம்முயற்சியையும், குறிப்பாக ஆசார்யர்களின் திருநக்ஷத்ரங்களை முன்னிட்டு யாம் செய்யும் இது போன்ற சிறு கைங்கர்யங்களையும் பல ஆஸ்திகப் பெரியோர்களும் அன்பர்களும் பாராட்டி அனுக்ரஹித்துள்ளனர். அத்தகைய அனுக்ரஹங்களிலிருந்து சில வரிகளை மட்டும் இங்கே கொடுத்துள்ளோம்.

—லிப்கோ பதிப்பகத்தார்]

1. ஒப்பிலியப்பன் ஸந்நிதி, வித்வான் சிரோமணி வித்யா விசாரத ஸ்ரீ உபய வே. **வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி :**

"LIFCO packets பலர் பெற்று பக்தியுடன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்............உங்கள் கைங்கர்யத்தைப் புகழ்ந்து சென்றார்கள். LIFCO யோகக்ஷேமத்தைப்பற்றி எப்பொழுதும் ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் கைங்கர்யம் மேன்மேலும் வளர்க."

2. **Sri P. K. Aravamudhan, Asst. Engineer, P.W.D., 44, Anaikatti Street, Kancheepuram-3 :**

"His Holiness Srimad Andavan has perused the Vishnu Sahasranamam copy presented to him by LIFCO. கீழ்க்கண்டவாறு ஸாதித்தாயிற்று. "........ புத்தகத்தின் பொருளைப் பற்றிய விஷயங்கள் எந்த மூலை முடுக்கிலிருந்தாலும் பொறுக்கி எடுத்துச் சேர்த்து விடுவார்கள். அந்தந்த ஸ்தோத்ரத்தை எந்த எந்த ஆசார்யர்கள்

எப்படி எப்படி அநுஸந்தானம் பண்ணச்சொன்னார்களோ அந்தந்த முறைகளையும் விவரித்து, எந்தப் பலனை அடைய எப்படி பாராயணம் செய்யவேண்டும் என்னும் விஷயங்களையும், அப்பொருளைப் பற்றின விஷயங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அந்த புத்தகத்திலேயே லிப்கோ பதிப்பகத்தார் சேர்த்து விடுவார்கள். அவர்களுடைய புத்தகத்துக்கு நிகர் அவர்களுடைய புத்தகமே.''

3. ஸ்ரீ உபய வே. துவார் முடும்பை, கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, B.A., L.T., 20, உஸ்மான் ரோடு, தி. நகர், மதருஸ்-17 :

"நிதிவசதி மெலிந்திருப்பினும், மடாதிபதிகள், தனவான்கள், பொதுஸ்தாபனங்கள் மட்டுமே செய்யத் துணியக்கூடிய பணியினில் உங்கள் லிப்கோ ஸ்தாபனம் இறங்கித் தொண்டாற்றுகிறது. இவ்விறைப் பணியில் நீங்களும் உமது ஸ்தாபனத்தோரும் மேன்மேலும் சலியாமல் உழைக்கும் திறன் அருளவேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகிறேன். எங்கும் நிறை இறைவன், மடாதிபதிகள், தனிகர்கள், பொதுப்பணி ஸ்தாபனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை உமது தொண்டுக்கு உற்ற உதவி செய்ய ஊக்கித் திருவருள் புரிவானாக!"

4. தமிழ்க்கவி பூஷணம், உபன்யாஸ கேஸரி, முருகன் அருள் பெற்ற முனிவர் ப்ரஹ்மஸ்ரீ கி. வா. ஜகந்நாத அய்யர், ஆசிரியர், "கலைமகள்", சென்னை-4 :

"...... நெற்றிக்கு அணி செய்யும் குறிகளை, இட்டுக் கொள்வதை வற்புறுத்தும் தங்கள் கொள்கையை நான் ஆதரிக்கிறேன்......"

5. **The Hindu,** Madras-2 (9-2-1958):

"...The LIFCO should be commended for the sense of service which alone should have prompted them to publish these handy introductions to the Tamil Classics."

6. **Sri A. L. Mudaliar,** M.D.L.L.D., D.SC., D.C.L., Vice-Chancellor, Kensington, Kilpauk, Madras-10:

"...I am glad you are doing this great work. I wish your enterprise every success...".

7. **Sri Rama Mandir,** Calcutta:

"...Many of our friends greatly welcomed the gift donated by The Little Flower Co., Madras and expressed their appreciation of the valuable work..."

8. **The Executive Officer, Sri Athinathar Alwar Devasthanam,** Alwarthirunagari, Tirunelvelly Dt.:

"...Your gracious gift was greatly appreciated by one and all...In fact, your packet was the one talk of this sacred town on that sacred day..."

9. **A retired Government Official** of Srivilliputhur:

"I really appreciate the work done by you in the cause of uplifting the degenerated Hindus in these days of Atheism and Agnoticism."

10. ப்ரஹ்மஸ்ரீ மஞ்சக்குடி கை ராஜகோபால சாஸ்திரிகள் ·

" ஆச்சரியம், பாக்யத்திறகு இருப்பிடமானவர்களே ! என்ன சொலலப்போகிறேன் ! பார்க்க வேண்டியதைப் பார்தேதன் அதியற்புதமான கிரந்தமாலே. இங்குதான் உள்ளது. இத்தகைய கிரந்தரத்னங்கள் வேறெஙகு பார்த தோம் ? லிபகோ என்று பெயருள்ள காரியாலயததில நன்ருகப பார்த்தீர்களா ? மஹோபகாரம செய்யப்பட்டது ஆஸ்திக உலகுக்கு......ஆசந்தராரக்கம இதே முறையில மஹோபகாரம் செய்ய வேண்டுமென்றும் ...... ஸ்ரீ ஸீதா ராமன் க்ருபையால் லிபகோ ஸதாபநத்திற்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகவேண்டுமென்றும் பிரார்த்திக்கிரும்......"

11. **Sri K. S. V. S. Manian,** New Delhi-1 :

" I am jealous of the LIFCO founder for collecting all punyas (புண்யங்கள்) by these valuable publications."

12. **Sri S. Sampath,** Calcatta-29 :

"...I read your book 'Purattasi Tiruvona Tirunal'. But for your gem book I would have continued to be in ignorance of many great things and ideas."

13. **Brahmasri K. Venkatrama Iyer,** B.A., G.D.A., F.C.A., T. Nagar, Madras-17 :

"...The LIFCO books are unique, for no other Publishers, as far as I know, combine spiritual services through their publications."

14. **Sri K. Rathnam,** Madras-24:

"...May Lord Sri Rama bless the LIFCO to progress from strength to strength!"

15. **Sri Ubhaya Ve. K. S. Thathachariar,** General Manager and Power of Attorney Agent to H. H. Sri Alagia Singar of Sri Ahobila Mutt, Srirangam:

"The distribution of Srichoornam and Tirumann by LIFCO on this auspicious day...is indeed a unique and reformatory service to enfold our present day Sri Vaishnava youngsters in the sidhantic tradition of Sri Ramanujacharya, enshrined, nurtured and portrayed by this great Acharya Sri Vedantha Mahadesika."

16. Prof. **N. R. Tiruvenkatacharya, B.A.,** Scientific Astrologer, Madras-2:

"I do rejoice over your fervent spiritual attitude and enthusiastic religious activities."

17. Sahityalankara, Tiruppani—Thilakam, Pandit, Siromani, Sri Ubhaya Ve. **A. S. Ranganatha-charya Swami,** Thanjavur-1:

"......லிப்கோ கம்பெனியார் சிறந்த ஆழ்ந்த சிந்தனையுடன் அவ்வப்போது வெளியிட்டுவரும் பல அரிய நூல்களுக்கு, உலகம் பெரிதும் கடைப்பாடுடையதாகும்...... எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல், "வாழியணி

திகமார்ந்தகுரு" என்ற சிறுநூலை வெளியிட்டு ஸ்ரீவைஷ்ணவ தாஸர்களுக்குக் கிடைக்குமாறு செய்த மஹோபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்ய இருக்கிறது......"

18. **Sri Ubhaya Ve. V. Annaswamy Ayyangar,** President, The Asthika Sabha, Tanjore :

"...We pray that yourself and co-workers and your firm LIFCO should grow from strength to strength to spread these saintly kainkaryams all over the country..."

19. ஸ்ரீ P. சுவாமிநாதன், தருமபுரம் :

லிப்கோ தெய்வீகப் புத்தகக் கண்காட்சியைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேன். இக்கண்காட்சிப் பணி மத ஸ்தாபனங்கள் செய்யவேண்டியவை. இதனை லிப்கோ புத்தக நிலையத்தார் செய்வது மிக மிக உயர்ந்த செயல்.

20. **Sri A. S. V. Varadachari,** Madras-4 :

"...It is really appreciable of your immense service towards our great Acharyas and our valuable tradition in this modern and hard days in bringing out the book, "பெரியாழ்வார் பேரருள்"......It indeed shows your eagerness in propagting many hidden truths which are endowed to us by our great Acharyas..."

ஸ்ரீ:

லிப்கோவின் தைவிகப் பணி

வேதம் தமிழ் செய்த மாறன் நம்மாழ்வாரின் அருட் செல்வத்தையும், பல மஹான்களின் நல்லாசிகளையும் மூலதனமாகக் கொண்டு சிறு மலர் நிறுவனம் (லிட்டில் ப்ளவர் கம்பெனி) ஆரம்பிக்கப்பட்டது. 'சிறு மலர்' நம்மாழ்வாரின் அருள் மலரான வகுளத்தையும் (மகிழம் பூ), நம்மாழ்வாரின் 'அருள் பிரபந்த'மான (நம்மாழ்வாரின் தமிழ் வேதத்திற்கு அங்கமாகத் திருமங்கை மன்னன் அருளிய) சிறிய திருமடலையும் குறிப்பதோடு, மற்ற மதத் தாருக்கும் புனிதமான அருள் வளர்க்கும் சின்னமாகவும் அமைந்திருப்பதால், 'சிறு மலர்' எங்கள் புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் சிறப்புப் பெயராக அமைந்தது மஹான்களின் அருளாசியால்தான்.

இந்த அருட்செல்வம்தான் நாங்கள் கல்வித்துறை,தார் மிகத்துறை வெளியீடுகளில் சிறப்பாகப் பணி புரிந்து, புகழ்பெற உறுதுணையாக உதவி வருகிறது. இந்த அருட் செல்வம் எங்களுக்கு எப்படிக் கிடைத்தது? பல மஹான் கள் எங்களை அருள் கூர்ந்து ஆசீர்வதித்தது ஊக்குவிக்க, எங்கள் நிறுவனத்திலே அவ்வப்போது பொன்னடி சார்த் தியிருக்கிறார்கள். அந்த மஹனீயர்களின் பாத தூளிகள் பட்டுப் புனித மடைந்ததன் பிரதிபலிப்பாக, 'கல்வி யறிவோடு பக்தி-நெறிகளையும் பரப்புவதே சாலவும் சிறந்த திருத்தொண்டு' என்பதைத் தொழில் தர்மமாகவும் வாழ்க்கை இலட்சியமாகவும் கொண்டிருக்கிறோம். பொருட்செல்வத்தை வளர்க்க இத்திருத்தொண்டு ஊக்க

மளிக்காமல் இருந்த போதிலும், பல்லாயிரக்கணக்கான அன்பர்களின் போற்றுதலும் பாராட்டுதலுமே எங்களை மேலும் மேலும் இந்த சிரமஸாத்யமான பணியில் ஈடுபடுத்தி வருகின்றன. “இப்படிப் பல நல்ல பக்தி-நெறி நூல்களை நஷ்டத்தையும் பொருட் படுத்தாமல் தொடர்ந்து வெளியிட்டு அருட்செல்வத்தை நிறைய சேமித்துக் கொண்டிருக்கும் லிப்கோ நிறுவனத்தாரை நினைத்தால் எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது!” என்று ஓர் அன்பர், புதுதில்லியிலிருந்து (3-7-1968) விஜயம் செய்தவர் எழுதியிருக்கிறார். இப்படிப் பலபல ஆசிகள்!

பக்தியும் பண்பாடும் அறமும் அறிவும் சிறந்து வளர்ந்திருக்கும் பாரதபூமியில், நம் இளந் தலைமுறைகள் அந்த அருட் செல்வங்களைப் பெற்று மேன்மையடைய வேண்டும், இதன் மூலம் ஸர்வஜன க்ஷேமங்களும் வளர வேண்டும் என்னும் நம்பிக்கையுடன் பரம சிரத்தையோடு இத்தைவிகப் பணிக்கு எங்களை நாங்கள் அர்பணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆன்றோர்களையும் அன்பர்களையும் எங்களை ஊக்குவித்து வளர்த்தருள வேண்டுகிறோம்.

—லிப்கோ பதிப்பகத்தார்

Pages A-1 to A-8 Printed at Hindi Prachar Press, Madras-17 Phone No: 441824; Binding done by The S. M. Book Binding Works, Madras-14 Phone No. 72979.



Rajan Printers 97 Lloyds Road Madras 6